விலை : 20.00 website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION MONEY TRANSFER
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P No :-021 222 5392
(C-4891)

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 புரட்டாதி 28 வெள்ளிக்கிழமை (14.10.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 300

# அரசியல், இராணுவ உறவுகளால் ஊழல் விசாரணையில் சிரமம்

## ஜனாதிபதியின் உரைக்கு கீர்த்தி தென்னக்கோன் அதிருப்தி

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முன்னாள் படைத்தளபதிகள் மற்றும் இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் ஆகியோரை ஊழல் மோசடி தொடர்பான விசாரணைக்கு உட்படுத்தி வருவது தொடர்பில் அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆற்றிய உரையைக்கேட்டு தாம் அதிர்ச்சியடைந்து விட்டதாக தெரிவித்த ஊழல் மோசடிக்கு எதிரான முன்னணியின் ஆலோசகர் ரஜித் கீர்த்தி தென்னக்கோன், ஜனாதிபதியின் உரைக்கு அதிருப்தியும் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)



## பாடசாலை மாணவி மாரடைப்பால் மரணம்



(யாழ்ப்பாணம்)

மாரடைப்பு காரணமாக பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நெடுந்தீவு பிரதேசத்தில்

24ஆம் பக்கம் பார்க்க....

## தேநீர் பாத்திரத்தினுள் தவறி வீழ்ந்த குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

தேநீர் பாத்திரத்தினுள் தவறி விழுந்த ஒன்றரை வயது பெண் குழந்தை ஒன்று 9 நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்றையதினம் யாழ்.போதனா வைத

23ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.பல்கலையில் இன்று கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு வழங்க கோரி மலையக தேயிலை தோட்ட தொழிலாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், அவ

23ஆம் பக்கம் பார்க்க....

## பிரபாகரன் பட சுவரொட்டியுடன் கைதான ஜேர்மன் தமிழ் பெண்ணை நாடு கடத்த நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பின்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படங்கள் அடங்கிய சுவரொட்டிகளை வைத்திருந்தமை சம்பந்தமாக கைது செய்யப்பட்ட தமிழ பெண் ஒருவரை நாடு கடத்துமாறு கொழும்பு நீதவான நீதிமன்றம பொலிஸாருக்கு உத்தரவிட்டது.

ஜேர்மன் நாட்டின் குடியுரிமை கொண்ட பிரஸ்தாப பெண்ணை

23ஆம் பக்கம் பார்க்க....

## மாமியாரை தடியால் தாக்கி கொலை செய்த மருமகனுக்கு 7 ஆண்டுகள் கடூழியச் சிறை

(யாழ்ப்பாணம்)

காரைநகரைச் சேர்ந்த 77 வயதுடைய மாமியாரை தடியால் தாக்கி கைபோசக் கொலை செய்த மருமகனுக்கு 7 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் நேற்று வியாழக்கிழமை தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இந்தக் கொலைச் சம்பவம் நடைபெற்றது. காரைநகர் வாசியாகிய 77 வயது நிரம்பிய பொன்னம்பலம் பதுமநிதி என்ற தனது மாமியாரை, கொலை

24ஆம் பக்கம் பார்க்க....

## உலகின் பழமையான கார் யாழில்



23ஆம் பக்கம் பார்க்க....

## "வழமைபோல் விசாரியுங்கள்" விசாரணைத் தரப்புக்கு பிரதமர் ஆலோசனை



(கொழும்பு)

இதுவரை நடத்தி வந்த விசாரணை நடவடிக்கைகளை வழமை போல் முன்னெடுத்துச் செல்லுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் நிதி மோசடி விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாக பிரதமர் அலுவலக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

23ஆம் பக்கம் பார்க்க....

## பூஜித இன்று யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர இன்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தின் 150-வது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்வதற்காகவே அவர் யாழ்ப்பாணம் வருகை தருகின்றார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## ஊழல் மோசடி விசாரணை குறித்து ஜனாதிபதியின் கருத்து பாரதூரமானது

### சாடலுடன் ஜே.வி.பி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

குற்றப் புலனாய்வு திணைக்களம், நிதி மோசடி விசாரணைப் பிரிவு, இலஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு என்பன அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய செயற்படுகின்றனவா என சந்தேகம் வெளியிட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்த கருத்து பாரதூரமானது என மக்கள விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அவ்வமைப்பு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மகிந்த ராஜபக்ஷவின் கடந்த அரசாங்கத்தின் ஊழல், மோசடிகளுக்கு எதிராக நல்லாட்சி மற்றும் ஜனநாயகத்திற்காகவும் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்த 62 இலட்சம் வாக்காளர்களின் அபிலாஷைகள் மற்றும் ஆணைக்கு

23ஆம் பக்கம் பார்க்க....

## வடமராட்சிப் பகுதியில் 30 கிலோ கஞ்சா மீட்பு

(கரணவாய்)

வடமராட்சிப் பகுதியில் இரு வேறு இடங்களில் நேற்றைய தினம் 30 கிலோகிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கஞ்சா கடத்தப்படுவதாக கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து காங்கேசன்துறை பிராந்திய போதைத் தடுப்புப்பிரிவு பொலிஸார் திக்கம் பகுதியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை பதுங்கியிருந்தனர்.

அவ்வேளையில் அதிகாலை 5.30 மணியளவில் சந்தேகத்துக்கிடமான முறையில் வந்த படகு ஒன்றில் இருந்து பொதி ஒன்று வீசப்பட

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பதவி வெற்றிடங்களிற்கான விண்ணப்பம் கோரல்

திருவையாறு படித்தவாலிபர் திட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கத்தின் கணக்காளர் பதவி வெற்றிடத்திற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**01 பதவி கணக்காளர்**

சம்பளக்குறி இல. **104 / 10** **15305 - 170 x 10 - 190 x 10 - 18905**
சம்பள அளவுத்திட்டம் **03/2015** இன் படி

### அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ) கூட்டுறவுப் பணியாளர் 11ஆவது சம்பளத்திட்ட கணக்கு பதவியலாளர் அல்லது கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்மந்தமான எழுதுவினைஞர் பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12 ஆவது சம்பளத்திட்ட கணக்கு பதவியலாளர் அல்லது கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்மந்தமான பதவியொன்றின் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

ஆ) ஐக்கியஇராச்சிய கணக்குப் பதவியலாளர் நிறுவன இறுதியாண்டு பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்மந்தமான மேற்பார்வைமட்ட பதவியொன்றில் (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது ஐக்கியஇராச்சிய கணக்குப் பதவியலாளர் நிறுவன இடைநிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர சித்தி அல்லது கூட்டுறவுத்திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 02 ஆண்டு கால அனுபவம் அல்லது க.பொ.த. உயர் தரப்பத்திர பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வுத்துறையில் ஆகக் குறைந்தது நான்கு ஆண்டுகால அனுபவம்.

குறிப்பு 01 :- மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடத்துக்கு 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். "சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது" மேற்கூறப்பட்ட தகைமைகளில் ஏதாவது ஒன்றை பூர்த்தி செய்பவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு 02 :- கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றும் பணியாளர்கள் சங்கத்தினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

மேற்படி பதவி வெற்றிடத்துக்கான விண்ணப்பப் படிவத்தினை சுயமாக தயாரித்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை 2016.10.31ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தலைவர், திருவையாறு, படித்தவாலிபர்திட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சி, கூட்டுறவுச்சங்கம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தலைவர் :- திருவையாறு, ப.வா.தி.விவசாய உற்பத்தி நுகர்ச்சி, கூட்டுறவுச் சங்கம்.
திருவையாறு, கிளிநொச்சி

(C-6101)


## விபத்தில் காயமடைந்தவர் மரணம்

யாழ்ப்பாணம். இருபாலைச் சந்தியில் கடந்த 5ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நபர். நேற்று வியாழக்கிழமை உயிரிழந்தார். கோப்பாய் தெற்கைச் சேர்ந்த நல்லலிங்கம் சுஜிந்தம் (வயது 30) என்பவரே உயிரிழந்தார்.

வீதியைக் கடப்பதற்காகத் தயாராக நின்ற இவரை. வேகமாக வந்த கார் மோதியதில் படுகாயமடைந்த இந்நபர். அதே காரில் கொண்டு செல்லப்பட்டு. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். மரண விசாரணைகளை மேற்கொண்ட திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார். சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தார். (செ-ப)


## முத்துச்சிப்பி ஆற்றுகைப் பள்ளி

### நாடகப் பயிற்சிப் பட்டறை

A/L நாடகமும் அரங்கியலும் பாட செய்முறைப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான நாடகப் பயிற்சிப் பட்டறை.

**காலம் :- 15,16/10/2016 சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் :- காலை 9 மணி முதல் மாலை 4.30 மணிவரை**

இடவசதி கருதி 35 மாணவர்களுக்கு மாத்திரமே அனுமதி

**5/4 பெரியபுலம் ஒழுங்கை,**
**(இருபாலை கோண்டாவில் வீதி)**
**கோப்பாய் தெற்கு, இருபாலை.**

பதிவுகளுக்கு
**071 803 4248**
(6327)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு முன்பாக



## தவத்திரு கடையிற் சுவாமிகளின் 125 ஆவது குருபூசை தினம்
## 14.10.2016 மண்டைதீவு



ஈழத்துச் சித்தர் பரம்பரையில் முதலாவது சித்தராக வழிபடப்படும் கடையிற் சுவாமிகளுடைய 125 ஆவது குருபூசை தினம், அவர் வாழ்ந்த மண்டைதீவு மண்ணில் அவரின் நினைவாலயத்தில் இன்று (14.10.2016) வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற இருப்பதனால் அடியவர்கள் அனைவரும் நினைவாலயத்திற்கு வருகைதந்து கடையிற் சுவாமிகளின் ஆசியை பெற்றுய்க.

**அன்னதான நிகழ்வும் நடைபெறும்.**

கடையிற் சுவாமிகளின்
அடியார்கள், 5ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

(C-6102)



## கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்டச் சங்கம்
## காவேரி கலா மன்றம் (K.K.M)

"Vanni Hope" பங்களிப்புடன் நடத்தும் வடமாகாணத்தின் நட்சத்திர அணி வீரர்கள் கலந்து கொள்ளும்

**KPL - T20**
Kilinochchi Premier League
**2016**

காலம் : 15.10.2016 தொடக்கம்
இடம் : கிளி/மத்திய மகா வித்தியாலய மைதானம்
நேரம் : காலை 9.00 மணி

### போட்டி அட்டவணை

| திகதி | நேரம் | இடம் | மோதும் அணிகள் |
|---|---|---|---|
| 15.10.2016 | 10.00 | கிளிநொச்சி | A-1 மகாதீபம் - A-2 இந்து இளைஞர் |
| 15.10.2016 | 2.00 | கிளிநொச்சி | B-2 இளந்தாரகை - B-3 புனைநற்றட் |
| 16.10.2016 | 9.00 | கிளிநொச்சி | C-1 மத்தியதீரர் - C-2 நியூ ஸ்ரார் |
| 16.10.2016 | 2.00 | கிளிநொச்சி | D-1 பப்ரீஸ் - D-2 கிருஸ்ணபாரதி |
| 16.10.2016 | 9.00 | தருமபுரம் | A-1 மகாதீபம் - A-3 உதயதாரகை |
| 16.10.2016 | 2.00 | தருமபுரம் | B-3 புனைநற்றட் - B-1 புதியபாரதி |
| 22.10.2016 | 9.00 | தருமபுரம் | C-1 மத்தியதீரர் - C-3 தாயகதமிழ் |
| 22.10.2016 | 2.00 | தருமபுரம் | A-2 இந்து இளைஞர் - A-3 உதயதாரகை |
| 23.10.2016 | 9.00 | தருமபுரம் | D-2 தலைவர் அணி - D-1 பப்ரீஸ் |
| 23.10.2016 | 2.00 | தருமபுரம் | B-2 இளந்தாரகை - B-1 புதியபாரதி |
| ......10.2016 | 9.00 | | D-2 தலைவர் அணி - D-3 கிருஸ்ணபாரதி |
| ......10.2016 | 2.00 | | C-2 நியூ ஸ்ரார் - C-3 தாயகதமிழ் |
| அரை இறுதி | | | |
| 29.10.2016 | | கிளிநொச்சி | A vs C |
| 29.10.2016 | | கிளிநொச்சி | B vs D |

(கி-6104)

## அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

## லசந்த படுகொலை வழக்கு விசாரணைக்காக

# முன்னாள் இராணுவப் புலனாய்வு பணிப்பாளருக்கு சி.ஐ.டி.அழைப்பு



(கொழும்பு)

**சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பிலான விசாரணையொன்றிற்காக இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளரை குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸார் விசாரணைகளுக்கு அழைத்துள்ளனர்.**

இதற்கமைய இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்னிலையாகுமாறு இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக கடமையாற்றிய பிரிகேடியர் அருண வன்னியாராச்சி நான்காம் மாடி என அழைக்கப்படும் குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

தலைநகர் கொழும்பில் வைத்து 2009 ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதி சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த படுகொலை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார் இதுவரை இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் பலரை விசாரணைக்கு உட்படுத்திய நிலையில் கோப்ரல் தர அதிகாரியொருவரை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப் படுத்தியுள்ளனர்.

இதற்கமைய குறித்த அதிகாரி நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையிலேயே சண்டே லீடர் ஆசிரியர் படுகொலை செய்யப்பட்ட போது இராணுவப் புலனாய்வுப் பிரிவிற்கு பொறுப்பாக இருந்த பிரிகேடியர் அருண வன்னியாராச்சியிடம் அது குறித்த வாக்குமூலமொன்றை பெறுவதற்காக குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸார் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-7-10)

# நீதி வேண்டும்

## சந்தியா எக்னெலிகொட ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

அனோமா பொன்சேகா, ஹிருணிகா பிரேமச்சந்திர ஆகியாருக்கு நீதியை நிலைநாட்டிய ஜனாதிபதி, தனது கணவர் விடயத்தில் மாத்திரம் இதுவரை நீதியை பெற்றுக்கொடுக்கவில்லை என்று காணாமற்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர்,

பிரகீத் எக்னெலிகொட காணாமற்போன சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த இராணுவ புலனாய்வு பிரிவினைச் சேர்ந்தவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் உடல் நலம் பாதிக்கப்பட்டதாகக் கூறி வைத்தியசாலையில் தங்கியிருந்தனர்.

எனினும் பிணையில் விடுதலையான பின்னர் அவர்கள் கடமைக்கு திரும்பியுள்ளனர். இந்த சந்தர்ப்பத்திலேயே இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் சந்தேகம் ஏற்படுகின்றது. இது தொடர்பில் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்துவதற்கான உரிமை எனக்கு இருப்பதாகவே உணர்கின்றேன். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன மூன்று பெண்களின் பெயர்களை பயன்படுத்தி வெற்றி பெற்றார்.

அனோமா பொன்சேகா, ஹிருணிகா பிரேமச்சந்திர மற்றும் சந்தியா எக்னெலிகொட ஆகிய மூன்று பெண்களையே தேர்தலுக்கு பயன்படுத்தினார்.

இந்த நாட்டின் நீதி கட்டமைப்பு ஊடாக அனோமா பொன்சேகா, ஹிருணிகா பிரேமச்சந்திர ஆகியோரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன.

எனினும் எனது கணவர் தொடர்பான பிரச்சினைகளுக்கு நீதி கிடைக்கவில்லை. எனக்கான நீதி என்று நிலைநாட்டப்படும் என ஜனாதிபதியே நான் உங்களிடம் கேட்க விளைகின்றேன். சந்தேக நபர்கள் பிணையில் விடுதலையான விடயத்திலிருந்து இராணுவ தரப்பு புலனாய்வு பிரிவிற்கு போதிய தகவல்களை வழங்கவில்லை என்ற விடயம் தெளிவாகின்றது.

பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளே மற்றும் ஜனாதிபதியே இது உங்களின் கவனத்திற்கு என்றார். (இ-7-10)

# பட்டதாரிகளுக்கு ஆறு மாதங்களுக்குள் தொழில்வாய்ப்புக்களை வழங்க வேண்டும்

## பிரதமர் ரணில் வலியுறுத்து

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்யும் பட்டதாரிகளுக்கு ஆறு மாதங்களுக்குள் தொழில்வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றிருந்த போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்துவெளியேறும்அனைத்து பட்டதாரிகளுக்கும் கட்டாயம் தொழில்வாய்ப்பு வழங்கப்படவேண்டும்.

பட்டக் கல்வியை பூர்த்தி செய்ததன் பின்னர் அவர்கள் தொழில் இன்றி வீட்டில் இருக்கும் காலம் ஆறு மாதங்களுக்கு வரையறுக்கப்பட வேண்டும்.

இதன்படி, அரசாங்கத்தில் காணப்படும் சகல வெற்றிடங்களுக்கும் பட்டதாரிகளை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பணியில் இணைத்துக் கொள்ளப்படவேண்டும்.

பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்க முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

இதற்காக விசேட திட்டமொன்று எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அமுல்படுத்தப்படவுள்ளது.

பட்டதாரிகள் ஏதேனும் ஓர் தொழில் துறையில் பணியாளர்களாக உள்ளீர்க்கப்பட வேண்டுமென பிரதமர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர், அரசாங்க உயர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (இ-7-10)

## புலம்பெயர்ந்தோரும் வாக்களிக்க ஏற்பாடு

(கொழும்பு)

வெளிநாடுகளில் தங்கியுள்ள இலங்கைப் பிரஜைகள், இலங்கையில் வாக்களிக்க தகுதியானவர்கள் என்பதை தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்றுக் கொண்டுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் இதனை நடைமுறைப்படுத்த முடியாத நிலை உள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்தார்.

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் சொந்த நாட்டில் வாக்குப் பதிவு செய்வதற்கான சட்டங்களை வகுக்க வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளளார். (இ-7-10)

# நானுஓயாவில் கோர விபத்து; இருவர் பலி, 7பேர் படுகாயம்

நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நானுஓயா கிளாரன்டன் தோட்ட பகுதியில் டிப்பர் ரக வாகனமொன்று விபத்துக்குள்ளாகியதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், இந்த விபத்தில் படுகாயமடைந்த ஏழு பேர் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் மாலை 6.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது. மரக்கறி தோட்டமொன்றுக்கு வேலைக்குச் சென்றுவிட்டு, மீண்டும் நுவரெலியாவுக்கு திரும்பி சென்ற வேளை இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

வேகக்கட்டுப்பாட்டை இழந்தமையினாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ள நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-7-10)

## 12 மாணவர்கள் விளக்கமறியலில்

பேராதனை பல்கலைக் கழகத்தில் தமிழ் மாணவர்கள் மீது தாக்குதல் மேற் கொண்டதாக கைது செய்யப்பட்ட இணை சுகாதார அறிவியல் பீட மாணவர்கள் 12 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள னர்.

கடந்த ஒகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் இணைந்த சுகாதார விஞ்ஞான பீட முதலாம் ஆம் வருட தமிழ் மாணவர்கள் மீது மேற்கொண்ட தாக்குதலில் தமிழ் மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் 12 பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மாணவர்கள் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த தாக்குதலில் பெரதெனிய பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் 4 பேர் காயமடைந்த நிலையில் பெரதெனிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## எட்காவால் இலங்கைக்கு 500 மில்லியன் அமெ. டொலர் நேரடி முதலீடாகும் - ரணில்

இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தத்தின் பின்னர் இலங்கைக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நேரடி முதலீடாக கிடைக்கும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அந்நிய செலாவணியை அதிகரிப்பதற்கான ஏற்றுமதி சந்தையை விஸ்தரிப்பதும் அவசியமாகும். இதற்காக எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஊக்குவிக்கப்படவுள்ளார்கள் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஆரம்பமான சர்வதேச ஏற்றுமதி அபிவிருத்தி மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொருளாதார அரசியல் இலக்குகளை அடைந்துகொள்வதற்காகவே பிரதான இரண்டு கட்சிகளும் இணைந்து இணக்கப்பாட்டு அரசாங்கத்தை ஏற்படுத்தியதாக குறிப்பிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கட்டுநாயக்க, மத்தள விமான நிலையங்கள், திருகோணமலை,அம்பாந்தோட்டை என்பனவற்றிற்கு துறைமுகங்கள் அமைவாக புதிய பொருளாதார வலயங்களும் அமைக்கப்படவிருக்கின்றன.

ஆசியாவின் வர்த்தக மற்றும் மூலோபாய வர்த்தக நிலையமாக இலங்கையை அபிவிருத்தி செய்து பத்து இலட்சம் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி உயர்ந்த வருமானம் ஈட்டும் நாடாக மாற்றி அமைப்பது நோக்கமாகும். நல்லாட்சி, ஜனநாயகம், சுதந்திரம் என்பனவற்றுடன் உறுதிப்படுத்தி மேம்பாட்டுடன் சர்வதேச சமூகத்திற்கு மத்தியில் உயர்ந்தபட்ச வரவேற்பை பெறுவதும் இலக்காகும் என்றும் தெரிவித்தார். (இ-7-10)

# தோட்டத் தொழிலாளர்களின் போராட்டங்களுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பூரண ஆதரவு

(கொழும்பு)

1000 ரூபாய் நாள் சம்பளம் வேண்டியும், 6 நாள் வேலைக்கிழமையை உறுதிப்படுத்த வேண்டியும், 18 மாதங்களாக நிலுவையிலிருக்கும் சம்பளத்தொகையை வேண்டியும் மலையக மெங்கும் போராடிவரும் மலையக மக்களுக்கும் தொழிற்சங்கங்களுக்கும், அவர்களுக்கு ஆதரவாக வடக்கு-கிழக்கில் நடைபெற்றுவரும் கவனயீர்ப்பு போராட்டங்களுக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது பூரண ஆதரவை வழங்குகின்றது.

ஆண்டாண்டு காலமாக மலையக தோட்டத்தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்பட்டே இலங்கையின் பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டாலும் அவர்களின் நியாயமான சம்பளக் கோரிக்கைகளும், சமூக பொருளாதார அபிலாசைகளும் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவது வேதனையளிக்கின்றது.

முதலாளிமார் சம்மேளனத்துக்கும் மலையக தொழிற்சங்கங்களுக்கும் இடையே, சம்பள விவகாரம் உள்ளடங்கலாக, கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தம் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிறைவடைந்த நிலையில் தோட்டத் தொழிலாளர்கள் சொல்லொணா துயரங்களை அனுபவித்து வருவதை நாம் அறிவோம்.

காலாவதியாகி 18 மாதங்கள் ஆன நிலையிலும் இக் கூட்டு ஒப்பந்தத்தின் புதுப்பித்தலில் காணப்படும் இழுபறி நிலை வன்மையாக கண்டிக்கத்தக்கது.

மலையக தோட்டத்தொழிலாளர்களின் உழைப்பிற்கேற்ப அவர்களின் அடிப்படை சம்பளம் ரூபாய் 1000 ஆக உறுதிப்படுத்தப்பட்டு அவர்களின் ஏனைய கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டு போராட்டம் வெற்றி காண தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரை நாம் வாழ்த்தி நிற்கின்றோம்.

மேலும் மலையக மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கும் எந்த போராட்டக்களத்திலும் நாம் பின்தொடர்ந்து நமது முழு ஆதரவையும் வழங்க தயாராகவுள்ளோம் என அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இணைந்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# உலக சம்பியன் அவுஸ்திரேலியாவுக்கு வெள்ளையடித்தது தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்க, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டியின் 5ஆவதும் இறுதியுமான போட்டியில், டேவிட் வோனரின் அதிரடியான சதத்துக்கு மத்தியிலும் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி, அத்தொடரை 5-0 எனற கணக்கில் கைப்பற்றி, அவுஸ்திரேலியாவை வெள்ளையடித்துள்ளது.

கேப்டௌனில் இடம்பெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 327 ஓட்டங்களைக் குவித்தது.

துடுப் பாட்டத்தில் றீலி றொஸோ 122 (118), ஜே.பி.டுமினி 73 (75), டேவிட்மில்லர் 39 (29) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஜோ மெனி, கிறிஸ் ட்ரமெய்ன் இருவரும் தலா 3 விக்கெட்டுகளையும் ஸ்கொட் போலண்ட் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

328 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி, 48.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 296 ஓட்டங்களை மாத்திரம் பெற்று, 31 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் தனது 9ஆவது சதத்தைப் பூர்த்தி செய்த வோனர், 173 (136) ஓட்டங்களைப் பெற்றார். தவிர, மிற்சல் மார்ஷ், ட்ரவிஸ் ஹெட் இருவரும் தலா 35 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் கைல் அபொட், கஜிஸ்கோ றபடா, இம்ரான் தாஹிர் மூவரும் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். இப்போட்டியின் நாயகனாக டேவிட் வோனர் தெரிவானதோடு, தொடரின் நாயகனாக றீலி றொஸோ தெரிவானார். (க)



## 12 மாணவர்களுக்கு விளக்கமறியல்!

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்கள் மீது தாகுதல் மேற்கொண்டதாக கைது செய்யப்பட்ட இணை சுகாதார அறிவியல் பீட மாணவர்கள் 12 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் இணைந்த சுகாதார விஞ்ஞான பீட முதலாம் வருட தமிழ் மாணவர்கள் மீது மேற்கொண்ட தாக்குதலில் மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் 12 பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த தாக்குதலில் பேராதெனிய பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் 4 பேர் காயமடைந்த நிலையில் பேராதெனிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## நடமாடும் மருத்துவ பராமரிப்பு சேவை

(சிவநகர்)

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீட்டுத்தரிசிப்பு முறையிலான நடமாடும் மருத்துவ பராமரிப்பு சேவை வழங்கும் ஆரம்ப நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு பழைய கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை வளாகத்தில் வட மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சர் வைத்திய கலாநிதி.ப.சத்தியலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், கௌரவ விருந்தினராக வடமாகாண கல்வி கலாசார பண்பாட்டலுவல்கள் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசா மற்றும் கிளிநொச்சி மாவட்ட வடமாகாண சபை உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-254)

## வாள்வெட்டில் ஈடுபட்ட குற்றவாளிகளின் தண்டனைத் தீர்ப்பை இரத்துச்செய்ய யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் மறுப்பு

(மானிப்பாய்)

மானிப்பாய் வாள்வெட்டு வழக்கில் மல்லாகம் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு சரியானது என தீர்ப்பளித்துள்ள யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன், அந்தத் தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்துள்ளார்.

வீட்டுக்குள் அத்துமீறிச் சென்றமை, சட்டவிரோதமாகக் கூட்டம் கூடி, சிறிய காயம் மற்றும் கடும் காயம் விளைவித்தமை 6 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்களைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் 6 எதிரிகளுக்கு எதிராக சுன்னாகம் பொலிஸாரினால் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் ஓராண்டு கடூழியச் சிறைத் தண்டனை வழங்கிய மல்லாகம் நீதிமன்றம், 5 இலட்சத்து 61 ஆயிரம் நட்டஈடு செலுத்துமாறு எதிரிகளுக்கு 28.04.2016 ஆம் திகதி வழங்கிய தீர்ப்பில் உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட எதிரிகள் தாங்கள் சுத்தவாளிகள் என தெரிவித்ததையடுத்து நடைபெற்ற வழக்கு விசாரணையின் முடிவில் இந்தத் தீர்ப்பை மல்லாகம் நீதிமன்றம் வழங்கியிருந்தது.

இதனையடுத்து. இந்தத் தீர்ப்புக்கு எதிராக 3 எதிரிகள் யாழ் மேல் நீதிமன்றத்தில் மேன் முறையீடு செய்தனர்.

இந்த மேன் முறையீட்டு மனு மீதான வழக்கு விசாரணை யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் நடைபெற்றது.

விசாரணை காலத்தில் மனுதாரர்களுக்கு பிணை வழங்க மேல் நீதிமன்றம் மறுத்துவிட்டது. இதனால், எதிரிகள் சிறையில் இருக்க மேன் முறையீட்டு மனு மீதான விசாரணை வழக்கு நடைபெற்றது.

இந்த வழக்கு இம்மாதம் 12 ஆம் திகதி புதன்கிழமை யாழ் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து மல்லாகம் நீதிமன்ற நீதிபதியினால் வழங்கப்பட்ட ஓராண்டு கால கடூழியச் சிறைத் தண்டனைத் தீர்ப்பு சரியானது என உறுதிப்படுத்தி நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.

அத்துடன், மல்லாகம் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட 6 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் நட்டஈடு செலுத்த வேண்டும் என்ற உத்தரவும் சரியான தீர்ப்பு என அவர் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார். (இ-7,10)

## வடக்கில் நான்கு பூங்காக்களை புதிதாக அமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் புதிதாக நான்கு பூங்காக்களை அமைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக வனவிலங்கு பணிப்பாளர் நாயகம் டபிள்யூ.எஸ்.கே.பத்திரண தெரிவித்துள்ளார்.

இப் பூங்காக்களை அமைப்பதற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் காணிகளை தெரிவு செய்வதற்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

தற்போது நாட்டில் 22 தேசிய பூங்காக்கள் இருக்கின்றன. அத்துடன் புதிதாக அமைக்கப்பட்டவுள்ள இந்த நான்கு பூங்காக்களுடன் மொத்தமாக 26 பூங்காக்களை முன்னெடுத்துச் செல்வதற்கு தற்போதுள்ள 900 ஊழியர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை.

எனவே மேலும் ஆயிரத்து 500 ஊழியர்களை இணைத்துக் கொள்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தை எதிர்பார்த்திருப்பதாக பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (செ-9)


## துயர் பகிர்கின்றோம்

யா/குட்டியப்புலம் அ.த.க பாடசாலை ஆசிரியர் திரு.ஆ.தயாளன் அவர்களின் தந்தை

**பொன்னம்பலம் ஆனந்தநடராசா**




13.10.2016 இறைபதமடைந்தார்.

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்**
**யா/குட்டியப்புலம் அ.த.க. பாடசாலை**
**வயாவிளான்.**

(6328)


## குடிசை வீடு தீப்பிடிப்பு



(கரணவாய்)

வடமராட்சி கற்கோவளப் பகுதியில் உள்ள குடிசை ஒன்று தீயில் எரிந்து கொண்டிருந்த நிலையில் அயலவர்களின் முயற்சிகளினால் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

கற்கோவளத்தில் உள்ள கலைச்செல்வன் சதீஸ் என்பவரது குடிசையே நேற்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எரிந்ததாக தெரிவிக்கப்பட்டது.

வீட்டில் இருந்தோர் வெளியில் சென்றிருந்த சமயம் வீடு தீப்பிடித்ததாக கூறப்படுகிறது. தீப்பற்றி எரிவதைக்கண்ட அயலவர்கள் தீயினை அணைத்துள்ளனர். தீயினால் வீட்டில் இருந்த பொருட்கள் நாசமானதாக தெரிவிக்கப்பட்டது. (செ-60)

# மலைத்தொடரில் பாரிய தீ பரவல்; கட்டுப்படுத்தும் முயற்சி தோல்வி



(கொழும்பு)

பதுளை மாவட்டத்தில் அமையப்பெற்றுள்ள ஹற்றன் சமவெளி சரணாலயத்திற்கு அருகாமையிலுள்ள ஒஹிய உடவேரிய மலைத் தொடரில் நேற்று அதிகாலை முதல் தீ பரவி வருகின்றது.

குறித்த தீயை கட்டுப்படுத்தும் நோக்கில் பிரதேச மக்களும் சரணாலய அதிகாரிகளும் ஈடுபட்டு வந்துள்ளதுடன் இருப்பினும் இவர்களின் முயற்சி பயனளிக்காது போயுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

குறித்த மலைத்தொடரில் ஏற்பட்டுள்ள தீயினால் மலையிலிருந்து கற்கள் புரண்டு விழும் அபாய நிலையை எதிர்நோக்கியுள்ள 13 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தோட்ட நிர்வாகத்தினர் கூறியுள்ளனர்.

தற்போது வரை 40 ஏக்கர்களுக்கும் அதிகமான நிலப்பரப்பு தீயினால் அழிவடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி ஒஹிய உடவேரிய மலைத்தொடரில் தொடர்ந்தும் தீ பரவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## சமாதான பாதயாத்திரை ஞாயிறு ஆரம்பம்

ஜப்பானிய பௌத்த துறவிகளும் இந்தியாவின் காந்தி அமைப்பினரும் (அஹிம்சா) இணைந்து நாளை மறுதினம் 16 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை சிவனொளி பாதமலை, கதிர்காமம், ஸ்ரீதலதாமாளிகை, ருவான் வெலிசாய, அநுராதபுரம் கண்ணகி அம்மன் கோவில், வற்றாப்பளை, செல்வச் சந்நிதி, நல்லூர், உள்ளிட்ட கோவில்களிலிருந்து சமாதான பாதயாத்திரை ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.


1986 ஆம் ஆண்டு சமாதான பாதயாத்திரை வந்த ஜப்பானிய பௌத்த பிக்கு யொக்கோடசுகா யாழ்ப்பாணத்தில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவரின் சமாதான நடவடிக்கையை முன் கொண்டு செல்வதற்காகவும் சகவாழ்வின் தேவையை வடக்கு, தெற்கு மக்களுக்கு உணர்த்துவதற்காக குறித்த பாதயாத்திரை நடத்தப்படுகின்றது.

அந்தவகையில் நாளை மறுதினம் 16 ஆம் திகதியில் இருந்து 28 ஆம் திகதி வரை மாவட்டங்கள் முறையே கொழும்பு, கண்டி, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, அநுராதபுரம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்கள் ஊடாக இப்பாதயாத்திரை நடைபெறவுள்ளது.

இவர்கள் பாதயாத்திரையாக வருகின்ற நகரங்களில் உள்ள சர்வமதத்தினர் அவர்களுடன் சேர்ந்து இந்த சமாதான யாத்திரைக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கும்படி யாழ்ப்பாண சர்வமத குழுவின் இணைப்பாளர் அருட்தந்தை ஐ.டி.டிக்சன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-9)

# வரட்சியால் வெளியிடப்பட்ட வீதி



இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடும் வரட்சி காரணமாக மகியங்கனை - லொல்கல்ல ஓயவின் நீர் மட்டம் அதிகமாக குறைவடைந்துள்ளது.

இதன் காரணமாக நீர்த்தேக்க கட்டுமானத்திற்கு பின்னர் முதல் முறையாக அந்த நீர்த்தேக்கத்தில் மூழ்கியிருந்த பழைய பதுளை - மகியங்கனை வீதி மீண்டும் தெரிய ஆரம்பித்துள்ளது.

மகாவலி அபிவிருத்தி யோசனை முறைக்கமைய 1982ஆம் ஆண்டு இந்த நீர்தேக்கம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் வரலாற்றில் முதல் முறையாக இந்த அளவிற்கு நீர் வற்றியுள்ளமை இதுவே முதற்தடவை என அந்தப் பகுதியைச் சேர்ந்த பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

1000 ஏக்கர் விசாலமான நீர்த்தேக்கம் நீரின்றி வறண்டு போய் காட்சி அளிக்கிறது. நீர்த்தேக்கத்திற்கு மத்தியில் சில இடங்களில் மாத்திரம் நீர் உள்ளமையைக் காண முடிந்துள்ளது.

இதன் காரணமாக இந்த நீர்த்தேக்கத்தில் மகாவலி இடையிலான பள்ளத்தாக்கினை இணைக்கும் நீரோட்டம் வரட்சியடையும் நிலைக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7-10)

## டுபாய் மாளிகையில் திருட்டு!

# இலங்கைப் பெண்களுக்கு தொடர்பில்லையென அறிக்கை

இலங்கையில் இருந்து பணிப்பெண்களாக டுபாய்க்குச் சென்ற இரண்டு பெண்கள் அரண்மனையில் திருடியுள்ளார்கள் என அண்மையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் குறித்த இலங்கைப் பெண்கள் இருவரும் இந்த திருட்டுடன் தொடர்புபடவில்லை என அந்நாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரண்மனையில் இருந்து மார்ச் மாதம் நகைகள் மற்றும் 3 ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகளை திருடியுள்ளார்கள் என குறித்த இரு பெண்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவர்கள் திருட வில்லை என தெரிய வந்துள்ளதாக அபுதாபி தேசிய செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது.

ஆனால் நேற்று முன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது குறித்த மாளிகையின் உரிமையாளர்கள் எவரும் அங்கு வருகை தரவில்லை என அந்த செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

டுபாயில் உள்ள உலகின் மிக உயரமான குறித்த கட்டடம் ஷேக் முகமது பின் ரஷீத் அல்இனால் ஆளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# இராசி பலன்

14.10.2016

(புரட்டாதி 28, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 2.33 மணிவரை
பூரட்டாதி பிற்பகல் 3.13 மணிவரை
சுபநேரம் 5.02-7.32 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02மணிவரை
கடையிற் சுவாமியார் குருபூசை
நடேசர் அபிஷேகம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சந் கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் மகம், பூரம் காலை 9.23 மணிக்கு மீன-சந் | | |
| | | | ராகு |
| செவ் | சனி சுக் | | குரு சூரி புதன் |

**மேடம்:** தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம்.

**இடபம்:** இனிய செய்திகள் வந்து சேரும், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்:** தொழில் வளர்ச்சி கூடும் நாள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பேரானந்தம் சுகமுண்டு.

**கடகம்:** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் கூடும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, வம்பு வழக்குகளைச் சமாளிந்து வளம் காணும் நாள்.

**சிம்மம்:** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வாகன பழுதுச்செலவுகள் ஏற்படலாம், நட்பொன்று பகையாகலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள்.

**கன்னி:** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள்.

**துலாம்:** நல்ல செய்திகள் நாடி வரும் நாள், பிள்ளைகள் வழியில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பகைவர்கள் விலகுவர், உடல்நலம் சீராகும்.

**விருச்சிகம்:** பணத்தேவைகள் பூர்த்தியாகும், சொத்துக்களால் ஆதாயமுண்டு, மகிழ்ச்சி கூடும் நாள், தூரத்து உறவினர்களின் வருகையுமுண்டு.

**தனுசு:** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வாகன சுகமுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்:** சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**கும்பம்:** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் ஏற்பட்ட கவலைகள் தீரும், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மீனம்:** குடும்பத்தினரிடையே முன் கோபத்தைக் குறைப்பது நல்லது, புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மாலை நேரப் பயணம் மகிழ்ச்சி தரும்.

# “தேரேறி வரும் வல்லிபுர மாயவனே நீர் ஏன் பள்ளி கொண்டீரையா!!!”



வல்லிபுர மாயவனே வா!வா!- எங்கள்

வளமெல்லாம் காத்தருள வா!வா!

துள்ளியெழும் சக்கரனே வா!வா!

துன்பமெல்லாம் நீக்கிடவே வா!வா!

(வல்லிபுர மாயவனே வா!வா!)

திருத்தேரேறிப் பவனிவரும் நெடுமாலே வேங்கடவா நின் திருக் கண்களைத் திறந்து தீரமுடன் பாருமையா!

காத்தற்றனிக் கடவுட் கற்பகமே எம்துயரைத் தீர்த்தற் பொருட்டும் மைத்தோள் சுமந்து தேரேற்றும் மனத்தின் அவலத்தை இன்னும் ஏன் தீர்க்கவில்லை. சக்கரத்தில் நின்று சுழன்று தலையறுக்க இக் கணமே புறப்படும் திருத்தேரின் உண்மை எக்கணமும் மறவாது இரவு பகல் பாராது சிக்கெனவே பிடித்தோம் நின் திருவடியை மாயவனே! மாயவித்தை செய்து தமிழரினம் மாண்டொழியப் புதிய புதிய திட்டங்கள் தீட்டியிடும் புந்தியிலார் தங்களைப் புங்காண வைத்திடப்பா! எந்தை வருக! ரகுநாயக வருக! மைந்த வருக! மகனே இனிவருக! சிந்தை மகிழும் மருகா வடிவேலெங்கே! சக்கரம் தான் எங்கே! பாஞ்சன்னியம் தான் எங்கே! சங்கு, சக்கரம், வில், வாள், தண்டு எல்லாம் எங்கே! ஏனப்பா உன் காத்தற்றொழில் தான் எங்கே? உன் கூட்டணியும் இப்படித் தானோ! யாரிடம் யான் முறையிடுவேன் மாயவனே! நீயில்லால் எமக்கு உற்றதுணை தான் யாரோ? ஏன் பள்ளி கொள்கின்றீர்?

எழும்பினால் தான் என்ன. காலம் கழிகிறது மாயவனே கண் விழியும் சக்கரத்தை எடுப்பதோர் கணம்

தர்மம் பாரில் தழைப்பதோர் கணம் இதுபொய் தானோ?

“காயமலர் நிறவா கருமுகில் போலுருவா

கானக மாமடுவில் காளியனுச்சியிலே

தூயநடம்பயிலும் சுந்தரவென் சிறுவா

துங்கமதக்களிறன் கொம்புபறித்தவனே”

என்ற அற்புதங்களையெல்லாம் நிகழ்த்திய வல்லிபுரத்தானே, மாயவனே, எங்கே உன் பெருவீரம் காலத்தை இழுத்தடித்து தம் காரியத்தை முடிக்கவென வேகத்தை அடக்கித் தமிழினத்தின் உயிர் முடிக்க யோகத்தால் வழிபார்க்கும் வித்தகமும் நீ அறியாயோ. இனி யார் எமக்கு யார் ஆறுதல் வார்த்தை சொல! மாயவனே அடைக்கலம் மன்பதையைக் காத்தருளும் மாலே உன் அடைக்கலம் யாம்! இவை உன் திருச் செவியில் உட்புகுந்து தீர்வைத் தர இனி மாயவனே உன்றன் வரலாறு செப்பிடுவேன். நின்பெருமை எம்பெருமை நின் அருளே வேண்டுகிறோம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சிப் பகுதியிலுள்ள வல்லிபுரம் எனும் ஊரில் உள்ள புகழ்பெற்ற வரலாற்றுச்சிறப்புடைய விஷ்ணு ஆலயம் வல்லிபுரமாயவன் கோயிலாகும். இங்குள்ள மூலமூர்த்தி விஷ்ணுவின் சுதர்சனச் சக்கரம் பருத்தித்துறைப் பிரதேசத்தில் துன்னாலை, புலோலி, வராத்துப்பளை, கற்கோவளம் ஆகிய கிராமங்களுக்கு அணி சேர்க்குமுகமாக மத்தியில் இக்கோவில் அமைந்துள்ளது.

பருத்தித்துறையிலிருந்து 4 மைல் தொலைவில் வல்லிபுர மாயவன் கோயில் உள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கமையப்பெற்ற புராதன தலமாகும்.

புலோலியில் வராத்துப்பளை என்கின்ற சிறிய கிராமத்தில் கண்ணனையே அனுதினமும் பூசித்துத், தமக்குக் குழந்தைச் செல்வமில்லாத பெருங்குறையை நீக்க வேண்டுமென அழுது வரம்கேட்டு நின்றார் வல்லிநாச்சியார் எனும் பாதுகை. மாயவன் அவர் கனவில் தோன்றி “நீ உடனே கற்கோவளம் கடற்கரைக்கு வா” எனக்கூறி அருள அம்மையாரும் சென்றார்.

என்னே ஆச்சரியம் கடலில் அலைநடுவே மச்ச உருவில் (மீன்) துள்ளி விளையாடிய கண்ணான். பின்னர் குழந்தையாகி அம்மையாரின் மடியில் விழுந்து தவழ்ந்து நின்றார். சுற்றிநின்ற மக்கள் பரவச நிலை எய்தினர்.

அப்போது ஒரு புதுமை நிகழ்ந்தது. கண்ணன் திடீரென ஸ்ரீ சக்கர வடிவம் கொண்டான். பின்னர் அனைவருமே வல்லிநாச்சியாரின் கருத்திற்கேற்ப ஸ்ரீ சக்கரத்தைப் பல்லக்கில் ஏற்றி ஊருக்கு கொண்டு செல்லலாயினர். வழியில் தாகசாந்திக்கு என அடியார்கள் பல்லக்கை இறக்கி நீர் அருந்தி முடிந்ததும் மீண்டும் பல்லக்கைத் தூக்க முயற்சி செய்தனர்.

ஆனால் முடியவில்லை. ஸ்ரீசக்கரம் அங்கேயே நிலையாய் இருந்து விட்டது. அந்த இடமே தற்போது கோயில் கொண்ட ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் திருக்கோவிலும் ஆகும்.

இவ்விடத்திலே ஒரு பேருண்மையை நாம் சைவமதத்தவர்கள் மனத்திருத்திக்கொள்ள வேண்டும்.

சைவத் தமிழர்கள், திருமாலடியார்கள், அம்மன் உபாசகர்கள் திருக் கோயில்களைக் கட்டுகிறார்கள் என்றால் அவ்வன்பர்களுள்ளத்திலே இறைவன் அருள் குடிகொண்டுள்ளது என்பது தான் பொருள்.

புத்திஜீவிகளும் அரசியலாளர்களும் நாத்திகர்களும் எழுப்பும் கோயிற் கண்டனம் “தேவையற்ற இடங்களிலே புதிய கோயில்களை ஏன் எழுப்புகிறார்கள் என்ற வினா வேண்டத்தகாதது” என்பதே முடிந்த முடிவு.

எனவே உலகியலுக்கும் அருளியலுக்கும் தொடர்பே கிடையாது என்பதே உண்மை. பக்தி எதனையும் செய்யும். அது பொதுநலன் சார்ந்ததாயிருக்கும்.

அரசியல் சுயநலன் கொண்டது. தன்னலமுடையது. இதுதான் மெய்யான தத்துவம். தீர்த்தத் திருவிழா சக்கரத்தாழ்வார் கண்ணனாகத் தோன்றிக்காட்சி கொடுத்தமையால் கோவில் அருகே சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தே உள்ள சமுத்திரத்தில் தான் (கற்கோவளக் கடற்கரையில்) தீர்த்தோற்சவம் வெகு சிறப்பாக நடைபெறும்.

அன்றையதினம் திரளும் பக்தர்கள் தொகை வேறெங்கும் காணாத வியக்கவைக்கும் காட்சியேயாகும்.

கோவிலின் பரிவார மூர்த்திகளாக விநாயகப் பெருமான், நாகதம்பிரான், நாச்சியார் ஆகியோர் சந்நிதிகள் உள்ளன.

புரட்டாதி மாதம் பூரணைத் திதியில் தீர்த்த உற்சவம் நிகழக் கூடிய வகையில் 15 நாட்கள் திருவிழு நடைபெறும்.

16ஆம் நாள் கடலாடு தீர்த்த உற்சவம் இடம்பெறும். அடுத்த நாள் பட்டுத் தீர்த்தம் நிகழ்த்தப்படும்.

ஆவணி மாதம் கிருஷ்ண ஜெயந்தி கொண்டாடப்படும். நாராயணனின் நரகாசுர சம்காரம் தீபாவளி தினத்தன்றும் மார்கழிமாதம் முழுவதும் காலையில் விசேட பூசைகள் நடைபெறும்.

இங்கு விபூதியும் திருநாமமும் பிரசாதமாக வழங்கப்படுவது தனிச் சிறப்பாகும். சிவனும் திருமாலும் ஒருவரே என்ற உண்மையை இத்தலம் வெளிப்படுத்துகிறது.

ஈழத்து விஷ்ணு ஆலயங்களில் சிவாச்சாரியர்களே பூசையை பண்ணுகின்றனர். ஆழ்வார் பாசுரங்களும் பாடப்படுகின்றன.

வைணவ சம்பிரதாயம் என்ற முறையிலே இறுக்கமான வரையறை ஈழத்து வைணவத் தலங்களில் இல்லை.

வைணவ ஆலயங்களிலும் அக்காலங்களில் பிள்ளையாருக்கே முதலிடம் கொடுக்கப்பட்டது. இதனால் ஆலமரம், அழகிய குளம், நெல்வயல்கள் என இயற்கையின் அரவணைப்பில் உள்ள குருக்கட்டு சித்திவிநாயகருக்குப் பூசைசெய்த பின்னர் வல்லிபுர ஆழ்வாருக்குப் பூசை செய்வது வழக்கமாகும்.

வரலாற்றாய்வுகள்

வல்லிபுர ஆழ்வார் கோவிலுக்குரிய நிலத்தில் பழைய கட்டடத்தின் அழிபாடுகளுக்கிடையில் 1936 ஆம் ஆண்டளவில் வல்லிபுரப் பொன்னேட்டுச் சாசனம் கண்டெடுக்கப்பட்டது.

4 வரிகளைக் கொண்ட இச்சாசனம் பிராமி எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள பியகுக என்ற இடம் தற்காலத்திலுள்ள புங்குடுதீவுடன் அடையாளம் காணப்படுகிறது.

புலோலியூர் தமிழ்த் தாத்தா கந்த முருகேசனார், கோவிலைச் சூழவுள்ள மணல் மேடுகள், அருகேயுள்ள பழைமை வாய்ந்த இடிபாடுகளுடன் கூடிய கற்கள் கண்டெடுத்த சான்றுப் பொருட்களைக் கொண்டு மணிமேகலையில் கூறப்பட்ட மணிபல்லவம் எனும் இடம் இதுவாக இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

கற்கோவளம் கடற்கரையோரத்தினை அண்டிய பகுதியே சிங்கை நகர் எனும் இராஜதானி அமைந்திருந்ததாக வரலாற்றாய்வாளர்களும் தமது ஆய்வு மூலம் சொல்கின்றனர். நாணயங்கள், மட்பாண்ட ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

“மூர்த்தியருளும் முறைசேர் தல நலமும்

தீர்த்தத் திரு நிறைவும் சேரு மருட் - கீர்த்திமிகு

நல்லவோர் ஆலயத்தை நாடி நான் போற்றுதற் கல்லேனின் றோனே னறி”

என்று கருடாழ்வார் தூது எனும் பிரபந்தம் தல மகிமையைப்பாடுகிறது.

அச்சுவேலி குமாரசுவாமி குருக்கள் வல்லிபுர ஆழ்வாரைப் பாடும் போது சிவ விஷ்ணு என்றே குறிப்பிடுவார்.

பொதுவில் திருமால் ஆலயங்களில் மூலமூர்த்தி நின்ற கோலத்திலோ, அமர்ந்த கோலத்திலோ, கிடந்த கோலத்திலோ காணப்படும். ஆனால் வல்லிபுரத்திலோ சுதர்சனமே மூல மூர்த்தியாயுள்ளது.

இத் தலத்தைப் பற்றிய வரலாற்றை தட்சிணகைலாச புராணம், தட்சணகைலாச மான்மியம் என்பவற்றிலும் காணலாம்.

கோகில சந்தேசவில் பொன்னாலை வரதராஜப் பெருமாளையும், வல்லிபுர ஆழ்வாரைப் பற்றியும் பாடியுள்ளது.

நயினாதீவிலுள்ள புத்த விகாரையிலே மகாவிஷ்ணுமூர்த்தியின் திருவுரு காணப்படுகிறது. வண்ணை வேங்கடேச சுவாமி கோவில், தெஹிவளை விஷ்ணு கோவில், கண்டி விஷ்ணு தேவாலய என்பனவும் ஈழத்திலே பிரசித்தி வாய்ந்தனவாகும்.

பேராசிரியர்
கனகசபாபதி நாகேஸ்வரன்
சப்ரகமுவ பல்கலைக்கழகம்

**யாரிடம் பேசுவது?**

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

**எம்முடன் பேசுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
**021 222 8117, 077 900 8776**
வவுனியா: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)


# எண்ணெய் விற்பனை; புதிய விதிமுறை

போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதியிடப்பட்ட அனைத்து எண்ணெய் வகைகளினதும் சில்லறை அல்லது மொத்த விற்பனையின்போது சகல உற்பத்தியாளர்கள், விநியோகத்தர்கள் மற்றும் விற்பனையாளர்கள், அவற்றின் தகவல்களை தெளிவாக அச்சிட வேண்டுமென நுகர்வோர் விவகார அதிகார சபை வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளது.பொருள் இலக்கம், உற்பத்தி திகதி, காலாவதி திகதி, அளவு, அதிகபட்ச சில்லறை விலை, உற்பத்தியாளர் பெயர் மற்றும் முகவரி, இறக்குமதி செய்யப்பட்டதாயின் இறக்குமதியாளர் பெயர் மற்றும் முகவரி, மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட நாடு என்பன அச்சிடப்பட வேண்டும் என அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் உணவுக்காக பயன்படுத்தப்படும் எண்ணெய் வகை மொத்தமாக இறக்குமதி செய்யப்பட்டு மீண்டும் பொதியிடப்பட்டிருப்பின், உற்பத்தி திகதி மற்றும் மீள் பொதியிடப்பட்ட திகதி என்பன குறிப்பிடப்பட வேண்டும் என அறிவுறுத்தல விடுக்கப்பட்டுள்ளது.

கலப்பு எண்ணெய் வகையாயின், அதில் அடங்கியுள்ள எண்ணெய் வகை மற்றும் அதன் விகிதம் தொடர்பான தகவல்களுடன், கலப்பு செய்யப்பட்ட எண்ணெய் என்ற அறிவித்தல் அச்சிடப்பட வேண்டும் என வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-7-10)


## இந்திய விபூதி விற்பனைக்கு

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1Kg) மொத்தமாகவும் (ரூ 100) சில்லறையாகவும் (ரூபா110) பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு:-

எம்மிடம் குங்குமம், சந்தனம், அபிஷேகக் கூடு, இந்தியன் பட்டு, நெய், பஞ்சவர்ணக்கயிறு மற்றும் கோயிற் சாமான்களை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

சிவா நறுமணப் பூங்கா
இல-288 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(சத்திரத்துச் சந்திக்கு அருகாமையில்)
தொ.பேசி-021 222 2567


பழந்தமிழர் இயக்கம் நடத்தும்

## "பழந்தமிழர் ஆய்வு மாநாடு - 2016"

காலம்:- 15.10.2016 அன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணி
இடம்:- சொர்ணாம்பிகை மண்டபம் (TCT),
நாவலர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.
(நாவலர் கலாசார மண்டபத்திற்கு முன்பாக)

**மங்கல விளக்கேற்றல்**
வரவேற்புரை
லயன் சீமாட்டி திருமதி இராகினி இராமலிங்கம்

**தலைவர்**
திரு. ம.வித்தியானந்தநேசன்
(மாவட்டப் புள்ளிவிபரவியலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம், நிறுவுநர், பழந்தமிழர் இயக்கம்)

**பிரதம விருந்தினர்**
**ஸ்ரீமான் ஆ.நடராஜன்**
(இந்தியத் துணைத்தூதுவர்)

**தொடக்கவுரை**
**"தமிழர் பண்பாட்டின் அசைவியக்கமும் மேம்பாடும்"**
**பேராசிரியர் என்.சண்முகலிங்கன்**
(முன்னாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

**துறைசார் ஆய்வாளர்கள்**

**"தமிழர் அழகியல் சிந்தனை - தோற்றமும் வளர்ச்சியும்"**
**பேராசிரியர் A.N.கிருஸ்ணவேணி**
(தலைவர், நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

**"தமிழர் பண்பாட்டில் உணவு - சமூக பிரக்ஞையும் அடையாளமும்"**
**கலாநிதி சண்முகராஜா சிறிகாந்தன்**
(சிரேஷ்ட விரிவுரையாளர் - மானிடவியல், சமூகவியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

"தமிழ்மொழியில் இருந்து எபிரேய மொழி தோன்றியதற்கான ஆதாரங்கள்"
வைத்திய கலாநிதி சி.யமுனானந்தா
(யாழ்.போதனா வைத்தியசாலை)

"மட்டக்களப்பு தேசத்தில் நிலைபெற்ற சேரநாட்டு தாய்வழி மரபு"
தேசியக் கலைஞர்,
கலாபூஷணம் திரு. S.கோபாலசிங்கம்
(கவிக்கோ வெல்லவூர்க் கோபால்)

நன்றியுரை
திருமதி மைதிலி தேவராஜா
(உதவிக் கல்விப் பணிப்பாளர் - ஆரம்பக் கல்வி, யாழ். கல்வி வலயம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**
**பழந்தமிழர் இயக்கம்**
(6206)

தொடர்புகளுக்கு - T.P :- 077 764 2379
Email :-mvithiyananthanesan@gmail.com

## கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து)

**பதிவு இலக்கமும் திகதியும்:-P/46,08.02.1971**

## அறிவித்தல்

## கிளைக்குழுக்களைத் தெரிவு செய்தல்-16.10.2016

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.16 ஆம் திகதிய 1028/6 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்ட விதிகளுக்கமைய முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய திரு உ.சுபசிங்க ஆகிய நான் 2015.10.12 ஆம் திகதிய 1936/06 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இற்கு அமைய சங்கத்தின் சகல கிளைகளினதும் கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப்பொதுச் சபைக் கூட்டங்களை 16.10.2016 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு பின்வரும் அட்டவணையின் படி நடத்துவதற்கு அந்தக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் கீழ்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

**காலம்:- 16.10.2016 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை)**
**நேரம்:- முற்பகல் 10.00 மணி**

| கிளை இல. | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01 | கணேசபுரம் | திருமதி பு.தர்சினி கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | கங்கை முன்பள்ளி மண்டபம், கணேசபுரம் |
| 02 | கனகபுரம் | திருமதி ச.தயாதேவி கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொது நோக்கு மண்டபம், கனகபுரம் |
| 03 | திருநகர் | திருமதி மு.புஸ்பலக்சுமி கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பாரதி முன்பள்ளி மண்டபம், திருநகர் தெற்கு |
| 04 | ஜெயந்திநகர் | திரு.ம.லெட்டினன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | கிளி-இந்து ஆரம்ப வித்தியாலயம், ஜெயந்தி நகர் |
| 05 | கிளி-மேற்கு | திருமதி கே.கலைவாணி கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | புனித திரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி |
| 06 | உருத்திரபுரம் மேற்கு | திரு.க.உதயரூபன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொது நோக்கு மண்டபம், உருத்திரபுரம் மேற்கு |
| 07 | உருத்திரபுரம் கிழக்கு | திரு.ச.முகுந்தவேல் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம், உருத்திரபுரம் கிழக்கு |
| 08 | சிவநகர் | திரு.அ.செந்தூர்ச்செல்வன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம், சிவநகர் |
| 09 | புதுமுறிப்பு | திரு.வி.சிவபாலன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம், புதுமுறிப்பு |
| 10 | கிளி- கிழக்கு | திருமதி ஸ்ரீ.எமல்டா கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | புனித திரேசா பெண்கள் கல்லூரி , கிளிநொச்சி |
| 11 | இரணைமடு கிழக்கு | திரு.செ.நிமலரூபன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம், மருதநகர் |
| 12 | கனகாம்பிகைக்குளம் | திருமதி த.செல்வகேந்தினி கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம், கனகாம்பிகைக்குளம் |
| 13 | திருவையாறு | திரு.சி.குணாளன், கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம், 01 ம்பகுதி திருவையாறு |
| 14 | இரத்தினபுரம் | திருமதி இ.மாலினி, கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம்,இரத்தினபுரம் |
| 15 | ஆனந்தபுரம் | திரு.க.பாலகிருஸ்ணன், கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம்,ஆனந்தபுரம் |
| 16 | பாரதிபுரம் | திரு.உ.ஜெயந்தபிரகாஸ், கூட். அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம்,பாரதிபுரம் |
| 17 | உதயநகர் | திரு.இ.சுரேஸ், கூட். அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம், உதயநகர் மேற்கு |
| 18 | அம்பாள் குளம் | திரு.செ.ஜெயராசா, கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம்,அம்பாள்குளம் |
| 19 | செல்வாநகர் | திரு.ஜெ.சஞ்சீவ், கூட். அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம்,செல்வாநகர் |


கிளை பொதுச்சபைக்கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் 1998.05.16 ம் திகதிய 1028/6ம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் அறிவுறுத்தலுக்கு அமைய கூட்ட அறிவுறுத்தல் வழங்கப்படும்.

கிளைக்குழு தெரிவு செய்வதற்கான கிளை பொதுச்சபைக்கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவுறுத்தல்களை சங்கத்தின் சகல கிளைகளிலும் பொது இடங்களிலும் பார்வைக்கு வைக்கப்படும்.

கிளை பொதுச்சபைக்கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களை குறித்த அறிவுறுத்தலின் படி கிளைப்பொதுச்சபைக் கூட்டங்களுக்கு சமுகமளித்து தங்கள் ஜனநாயக உரிமையை பயன்படுத்தி கூட்டுறவு அமைப்பினை ஜனநாயக ஆளுமை கொண்டதாக செயற்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**திரு.உ.சுபசிங்க**
**கூட்.அபி.உதவி ஆணையாளர், கூட்டுறவுத் திணைக்களம், முல்லை வீதி.**
(சு-8091)

# தொழிலாளர்களின் சம்பள உயர்விற்கு ஆதரவாக கிளிநொச்சியில் கவனயீர்ப்பு



## ஜனாதிபதிக்கு மகஜரும் கையளிப்பு





பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக உயர்த்துமாறு அண்மை நாட்களாக தொடர் கவனயீர்ப்பு போரட்டங்கள் வடக்கில் இடம்பெறுகின்றன.

இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் பெருந்தோட்ட சமூக மேம்பாட்டுக்கான திருப்பணி மற்றும் நீதிக்கும் சமாதானத்துக்குமான சர்வமத அமைப்பு நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சியில் தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புக்கான போராட்டத்திற்கு ஆதரவாக பேரணி ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தது.

கிளிநொச்சி பழைய மாவட்டச் செயலகம் முன்பாக இருந்து ஆரம்பமான கவனயீர்ப்புப் போராட்டம் "தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக உயர்த்த வேண்டும்" "மாதத்தில் 25 நாட்கள் வேலை வழங்கப்பட வேண்டும்" "தோட்டக் கம்பனிகளை அரசாங்கம் பொறுப்பெடுக்க வேண்டும்" காணியுரிமை வீட்டு உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோசங்களை எழுப்பியவாறு பதாகைகளை ஏந்தியவாறு ஏ-9 வீதியூடாக புதிய மாவட்டச் செயலகம் வரை சென்றடைந்து அங்கு ஜனாதிபதிக்கான கோரிக்கை மனுவினை கிளிநொச்சி மாவட்ட உதவி அரசாங்க அதிபரிடம் கையளித்தனர். இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் மதகுருமார்கள் மற்றும் மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (2-15-312)




# நிதி திரட்டும் நடைபயணம் வவுனியாவை வந்தடைந்தது

## இன்று மதவாச்சி நோக்கி நகரும்





(குருமன்காடு)

கராப்பிட்டியவில் புற்றுநோய் வைத்தியசாலை அமைப்பதற்காக நிதி திரட்டும் முகமாக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் மஹேல ஜெயவர்த்தன உள்ளிட்ட குழுவினரின் நடை பயணத்திற்கு வவுனியாவில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

நடைபயணம் ஆரம்பித்து ஒன்பதாவது தினமான நேற்று முற்பகல் 10 மணிக்கு வவுனியா மத்திய மகா வித்தியாலய முன்றலை வந்தடைந்தது. நேற்றுக் காலை 5. மணியளவில் புளியங்குளத்தில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது

இதன்போது இந் நடைபயணத்திற்கு வவுனியாவில் அரசியல்வாதிகள், வர்த்தக சமூகத்தினர், பொது அமைப்புக்கள், பாடசாலை சமூகத்தினர், மாணவர்கள் எனப் பலரும் தமது ஆதரவுகளை வழங்கி அமோக வரவேற்பளித்து நிதிகளை வழங்கினர். ஓமந்தை மத்திய கல்லூரி, நொச்சிமோட்டை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. தாண்டிக்குளம் பிரமண்டு வித்தியாலயம். சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்கள் கொடிகளை அசைத்து வரவேற்றதுடன் பாண்ட் வாத்திய அணி வகுப்புகள் ஊடாக இந்த நடைபயணத்திற்கு உற்சாகமளித்தனர். வவுனியா விவசாய கல்லூரி மாணவர்கள், மாவட்ட செயலகம் உத்தியோகத்தர்கள், பொலிஸார், வங்கி உத்தியோகத்தர்கள், வர்த்தக சமூகத்தினர் எனப் பலரும் இந்த நடை பயணத்தில் இணைந்து கொண்டு தமது பங்களிப்புக்காக நிதிகளை வழங்கினர்.

இந்த நடை பயணத்தில் மஹேல ஜெயவர்த்தன மற்றும் அவரது மனைவி, வடக்கு சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான இ.இந்திரராசா, செ.மயூரன் உள்ளிட்ட பலரும் இன, மத, பேதங்களைக் கடந்து கலந்து கொண்டனர்.

இதேவேளை, இந்த நடை பயணம் இன்று வெள்ளிக்கிழமை 5.30 மணியளவில் வவுனியாவிலிருந்து ஆரம்பமாகி மதவாச்சி நோக்கி செல்லவுள்ளது. (2-250)

# கடையில் இருந்து புறப்பட்ட வர்த்தகர் வீடுவந்து சேரவில்லை

## கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்வரணி இடைக்குறிஞ்சி பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் நேற்று முன்தினம் நண்பகல் கிளிநொச்சியில் உள்ள அவரது கடையில் இருந்து புறப்பட்ட நிலையில் மீண்டும் வீடுவந்து சேரவில்லையென கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவிக்கையில்,

குறித்த வர்த்தகர் நேற்று முன்தினம் நண்பகல் கடையிலிருந்து வெளியில் சென்று வருவதாக சென்றார். இது வரை வீடு வந்து சேரவில்லை என்று கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது அவர் கடத்தப்பட்டாரா அல்லது காணாமல் போயுள்ளாரா அல்லது தலைமறைவாக உள்ளாரா என்ற எவ்வித பதிலையும் எங்களால் கூற முடியாது. ஆனால் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டுக்கமைய நாம் பல கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம் என கிளிநொச்சிப் பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (2-312)

# முல்லையில் கடும் வரட்சியால் 243 குடும்பங்கள் பாதிப்பு

## குடிநீர் விநியோகிக்க நடவடிக்கை

நாட்டில் அண்மை நாட்களாக காணப்படும் கடும் வரட்சி காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 243 குடும்பங்களைச் சேர்ந்த 864 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலைய தகவல் தெரிவிக்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிலேயே இந்த வரட்சி அதிகமாக காணப்படுவதோடு அப்பகுதியிலேயே 243 குடும்பங்களைச் சேர்ந்த 864 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அத்தகவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவர்களுக்கான குடிநீர் வழங்குவதற்கான நிதி கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொண்டுவருவதாகவும் முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-281)



ஜே.வி.பி. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி நேற்று கிளிநொச்சி பொதுச் சந்தையைப் பார்வையிட்டார். மேற்படி சந்தையில் அண்மையில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுடனும் கலந்துரையாடிய பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் குறைகளையும் கேட்டறிந்து கொண்டார். (படங்கள்: மல்லாவிச் செய்தியாளர்)

# கூட்டுறவு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விபரங்கள் வருமாறு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு சபையின் 94 ஆவது ஆண்டு கூட்டுறவு தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட விநாடி வினாப்போட்டி, விவாதப் போட்டி ஆகியவற்றில் வெற்றியீட்டி முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ள பாடசாலைகளின் விபரங்களை முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு சபையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கடந்த ஜூலை மாதம் 5 ஆம் திகதி மு/கற்சிலைமடு அ.த.க. பாடசாலையில் நடைபெற்ற போட்டிகளின் போது பங்குபற்றிய பாடசாலைகளில் இருந்து விநாடி வினாப் போட்டியில் முதலாமிடத்தை மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியும் இரண்டாம் இடத்தை மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயமும் மூன்றாம் இடத்தை மு/யோகபுரம் மகா வித்தியாலயமும் பெற்றுள்ளன.

விவாதப் போட்டியில் முதலாமிடத்தை மு/ வித்தியானந்தா கல்லூரியும் இரண்டாம் இடத்தை மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயமும் மூன்றாம் இடத்தை மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியும் பெற்றுள்ளன.

வெற்றியீட்டிய பாடசாலைகளுக்கும் பங்கேற்ற மாணவர்களுக்குமான பரிசளிப்பும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முக்கற்சிலைமடு அ.த.க பாடசாலையில் நடைபெறவுள்ள 94 ஆவது ஆண்டு கூட்டுறவு தின விழாவில் வைத்து வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-15)

## வவுனியாவில் வரட்சி

# 938 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 11 பேர் பாதிப்பு

## குடிநீர் வழங்கவும் நடவடிக்கை

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காலநிலை காரணமாக வவுனியா மாவட்டத்தில் 938 குடும்பங்களைச் சேர்ந்த 3ஆயிரத்து 111 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட வரட்சி நிலை தொடர்பில் அவரிடம் வினவியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சன்னாசிப் பரந்தன், நெடுங்கேணி தெற்கு, மாமடு, நெடுங்கேணி வடக்கு, ஊஞ்சல் கட்டி, கற்குளம், ஒலுமடு, மருதோடை, நைனாமடு, அனந்தர்புளியங்குளம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் 474 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 369 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

அதேபோல் வவுனியா பிரதேச செயலக பிரிவில் ஓமந்தை, ஆசிகுளம், பூந்தோட்டம், பறனாட்டாங்கல், சமணங்குளம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் 464 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 742 பேரும் பாதிப்படைந்துள்ளனர். இதன்படி வவுனியா மாவட்டத்தில் 938 குடும்பங்களைச் சேர்ந்த மூவாயிரத்து 111 பேர் பாதிப்படைந்துள்ளனர். இக் கிராமங்களுக்கு பிரதேச செயலகங்களின் ஊடாக குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-250)

# பொது இடங்களில் தீ மூட்டுவதற்கு தடை

## மீறுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை; முல்லை. மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத் தகவலின் படி

(மல்லாவி)

**முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அரச காட்டுப்பகுதிகள் தொடக்கம் பிரதான வீதிகள் மற்றும் புகையிரதப் பாதைகளுக்கு அருகிலுள்ள புல்பற்றைகள் உட்பட பொது இடங்களில் தீ மூட்டுவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது. இதை மீறுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மை நாட்களாக காலநிலை மாற்றத்தினால் கடும்வரட்சி நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் புல் தரைகள் தொடக்கம் பயன்தரும் மரங்கள் வரை வாடிக் கருகியுள்ள நிலையில் சில விசமிகள் அதற்கு தீ மூட்டி வருகின்றனர்.

அண்மையில் திருமுறிகண்டி,மணவாளன் பட்ட முறிப்பு ஆகிய பகுதிகளில் காணப்படும் அரச காட்டிற்கு விசமிகள் தீ மூட்டியுள்ளனர்.




இத்தீ பொதுமக்கள், பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோரின் பெரும் பங்களிப்புடன் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டது.

இதேவேளை ஏ-9 வீதி அருகிலும் புகையிரதப்பாதைக்கு அருகிலும் வீதிகளைப் பாதுகாக்கும் நோக்குடன் பதிக்கப்பட்டிருந்த புற்றரைகளுக்கு சில விசமிகள் தீமூட்டியுள்ளனர்.

எனவே பொதுமக்கள் இது தொடர்பில் விழிப்புடன் இருந்து சட்டவிரோத செயற்பாடுகளிலும் மற்றும் சமூகவிரோத செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றவர்கள் தொடர்பான தகவல்களை பொலிஸாருக்கு 076 622 4949, 076 622 6363 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தகவல்களை வழங்கியும் அல்லது நேரடியாகவோ தொடர்பு கொள்ளுமாறும் அத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# அச்சுறுத்தல் விடுத்து பாரியளவில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர் விளக்கமறியலில்

(மல்லாவி)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தில் அச்சுறுத்தல் விடுத்து பாரியளவில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த நபரை எதிர்வரும் 20ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி, கண்டாவளை தருமபுரம், புளியம்பொக்கணை ஆகிய பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் பாரியளவில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த குறித்த நபர் இது தொடர்பாக பொலிஸாருக்கோ அல்லது மதுவரித்திணைக்களத்திற்கோ தகவல்களை வழங்கினால் அவர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்து வந்துள்ள நிலையில் கடந்த மாதம் 25ஆம் திகதி இது தொடர்பாக ஒருவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்தமை, அவருக்கு முகத்தில் தாக்கியமை, தொலைபேசியூடாக அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பாக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவரால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து குறித்த நபரை கைது செய்த தருமபுரம் பொலிஸார் கடந்த 28 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த நபரை நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த சந்தேக நபர் தொடர்பில் பொலிஸார் முன் வைத்த அறிக்கையையடுத்து எதிர்வரும் 20 ஆம் திகதி வரையும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (2-15)

### அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில்

# மணல் ஏற்றிப் பயணித்த உழவியந்திரம் கைப்பற்று

## சாரதியும் கைதானார்



முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயப் பிரிவில் உள்ள புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தோம்பாவில் திம்பிலி பகுதியில் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றிப் பயணித்த உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார். இதே பொலிஸ் பகுதியிலுள்ள இருட்டு மடுகிராமத்தில் சட்ட விரோதமாக காய்ச்சிய கசிப்பை விற்பனை செய்த ஒருவரை 750 மில்லிலீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் இடம் பெற்றுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கும் மற்றும் இரவு எட்டு மணிக்கும் நடை பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு பொது மக்கள் வழங்கிய இரகசியத் தகவலை அடுத்து முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் உத்தரவிற்கமைய முல்லைத்தீவு மாவட்ட போதைப் பொருள் தடுப்புப்பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி, உப பொலிஸ் பரிசோதகர் கருணாரத்தினம் ஜெசிந்தன் தலைமையிலான பொலிஸ் அணியினரின் சுற்றிவளைப்புக்களின் போதே மேற்படி தடயப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களையும் மேலதிக விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்படுவதற்காக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக முல்லைத் தீவு பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# புன்னை நீராவிப் பகுதியில் 3 காப்பெற் வீதிகள் புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு

கண்டாவளை கே.என் - 57 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட புன்னை நீராவிப் பகுதியில் ஆறு கிலோ மீற்றர் நீளமான மூன்று காப்பெற் வீதிகளை புனரமைப்பதற்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திட்ட உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் புன்னைநீராவி பொது நோக்கு மண்டபத்தில் ஒன்றுகூடிய மக்களிடம் அவர் இந்த உறுதி மொழியை வழங்கினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

புன்னை நீராவிப் பகுதியில் 6 கிலோ மீற்றர் நீளமான 3 காப்பெற் வீதிகளை புனரமைப்பதற்கு கிளிநொச்சி மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபை முன் வந்துள்ளது. பல வருட காலமாக வீதிகள், குன்றும் குழியுமாக மக்கள் செல்ல முடியாத நிலையில் மழைக்காலங்களில் பாடசாலைப் பிள்ளைகள் , வயோதிபர்கள் , நோயாளர்கள், கர்ப்பவதிகள் எனப் பலரும் பல் , வேறு கஷ்டங்களை எதிர் கொண்டு வந்துள்ளனர். இந்நிலையில் இவ் விடயம் தொடர்பாக கிராம சேவையாளர் புன்னை நீராவி அபிவிருத்தி சங்கத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக ஆறு, கிலோ மீற்றர் நீளமான 3 வீதிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கிளி.மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திட்ட உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திட்ட உத்தியோகத்தர் ச. செல்வ குமார் , முன்னாள் பிரதேச சபையின் உறுப்பினர் சேதுபதி, புன்னைநீராவி கிராம சேவையாளர் அம்பிகைபாலன், வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் மணிமாறன், கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் நிதர்சன் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். அத்துடன் ஒதுக்கப்பட்ட நிதிகளுக்கான வீதிகளில் விசுவமடுச் சந்தியிலிருந்து பிரமந்தனாறு பாடசாலை வீதியில் 2.9 கிலோ மீற்றரும், 12ம் கட்டை சிவில் அலுவலக வீதியிலிருந்து பிரமந்தனாறுபிள்ளையார்கோவில் வரை 2 கிலோ மீற்றர் வீதியும் புன்னை நீராவி ஏ-35 வீதியிலிருந்து காவல் துறை வீதியூடாக பிரமந்தனாறு வீதியுடன் தொடர்புபடும் 1.8 கிலோ மீற்றர் வீதியும் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-309)

### 25 இலட்சத்து 46 ஆயிரம் ரூபா செலவில்

# குடி நீர் தேவைக்காக 7கிணறுகள் அமைப்பு

## துணுக்காய் பிரதேச செயலாளர் தெரிவிப்பு

மீள் குடியேற்ற அமைச்சின் 23 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா நிதி அனுசரணையுடனும் மற்றும் பொது மக்களின் 2 இலட்சத்து 66 ஆயிரம் ரூபா நிதி அனுசரனையுடனும் மொத்தம் 25 இலட்சத்து 46 ஆயிரம் ரூபா செலவில் துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் பொது மக்களின் குடிநீர்த் தேவைகளைக் கருத்தில் கொண்டு 7 பொதுக் கிணறுகள் அமைக்கப்பட்டு வருவதாக துணுக்காய் பிரதேச செயலானர் இந்திரராஜா பிரதாபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் வரட்சியான காலங்களில் குடிநீர் பற்றாக்குறை காணப்படும் கிராமங்களை கருத்தில் கொண்டு மீள்குடியேற்ற அமைச்சினால் தலா ஒரு கிணற்றிற்கு 3 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா வீதம் 7 கிணறுகளுக்கும் 23 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை கிணறுகள் அமைக்கப்படும் கிராம மக்களின் பங்களிப்பாக தலா ஒரு கிணற்றிற்கு 38 ஆயிரம் ரூபா வீதம் 7 கிணறுகளுக்கும் 2 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாவை பொது மக்களின் பங்களிப்பாக வழங்கப்படுகின்றது. இதன் மூலம் ஒரு கிணற்றிற்கான மொத்தச் செலவு மூன்று இலட்சத்து 78 ஆயிரம் ரூபாவாகும். மேற்படி கிணறுகள் வன்னியன்குளம், கோட்டை கட்டிய குளம், அம்பலப்பெருமாள் குளம், அமைதிபுரம், தேராங் கண்டல், ஐயங்கன்குளம், அனிஞ்சியன் குளம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

வாழ்க வையகம் குருவே துணை வாழ்க வளமுடன்

# யாழ். அறிவுத்திருக்கோவில் திறப்புவிழா மங்கலம்

## அறிவுலக சங்கமம்-15,16/10/2016-இல.81,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

மனவளக்கலை (ஆன்மீக வாழ்க்கைக் கல்வி)

மகான்களின் உபதேசங்கள் எமது வாழ்வில் பெரிதும் நன்மை தரக்கூடிய சிறப்புடையனவாகும். அவ்வுபதேசங்கள் யாவும் தன்னலமற்ற நிலையில் பிறர்நலமே விழைந்து வெளிவரும் புனிதம் நிறைந்தவையாகும். ஞான நிலையில் அவர்களின் வாய்மூலம் வந்த உபதேசக்கருத்துக்கள் அவர்கள் தேகம் மறைந்தாலும் காலம் மாறினாலும், யுகம் அழிந்தாலும் என்றும் நிலைத்து நிற்கும்.

ஒருவர் வாழ்க்கையில் எல்லாச் செல்வமும் வளமும் புகழும் கீர்த்தியும் பெற்றிருந்தாலும் ஆத்ம ஞானம் அடையவில்லையாயின் அந்த மானிட வாழ்வு பயனற்றது என்பர். ஒருவர் ஆத்ம ஞானம் மட்டும் அடைந்து மற்ற யாவும் பெறவில்லையானாலும் அவர் எல்லாம் பெற்றவர் ஆவார். எனவே வாழ்வின் இலட்சியம் ஆத்ம ஞானம் பெறுவதே ஆகும். அத்தகைய ஞான மார்க்கத்துக்கான வாழ்க்கைக்கு வழிகாட்டுவதுதான் மனவளக்கலை யோகப் பயிற்சிகள். அதனை வடிவமைத்துத்தந்தவர் வேதாத்திரி மகரிஷி அவர்கள் **அவ்வகையில் யாழ்.மண்ணில் மனவளக்கலைப் பயிற்சிகளை சிறப்பான முறையில் முன்னெடுப்பதற்கு விரைவில் உதயமாகவிருக்கும் யாழ்.அறிவுத் திருக்கோயில் திறப்பு விழாவை சிறப்பிக்கும் வகையில் இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

**மனவளக்கலை என்பது:**

மனிதனின் நிறைவான, வளமான வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பது நல்ல உடல் நலமும் மனவளமுமே. உடலும் மனமும் எவ்வளவு வளமாக இருக்கிறதோ, அந்த அளவு மனித வாழ்வு நிறைவாக அமையும். அவ்வாறு உடலையும் மனத்தையும் வளமாக்கி ஒரு நிறைவான வாழ்க்கையைக் கொடுக்கும் ஒரு உன்னதமான பயிற்சியே மனவளக்கலை.

உலக சமுதாய சேவாசங்கம் என்பது:

உலக சமுதாய சேவா சங்கம் மனித இனவாழ்வின் நிலையான அமைதியைக் காண மூன்று செயற்திட்டங்களை வகுத்து உள்ளது. அவை,

**தனி மனித அமைதி:**

தனி மனிதன் மனவளக்கலை பயிற்சியின் மூலம் அறிவிலே தெளிவு பெற்று வாழ்வின் அமைதியாக வாழ ஏற்ற பயிற்சித் திட்டம். மனவளக்கலையின் எளியமுறை உடற்பயிற்சி, எளியமுறை காயகல்பப் பயிற்சி, தவம், தற்சோதனை (அகத்தாய்வு), தத்துவ விளக்கங்கள் ஆகியவை அடங்கும். அவை தனித்தனியே பின்வரும் அத்தியாயங்களில் விளக்கப்பெறும்.

எளிய முறை உடற்பயிற்சி

நமது உடலில் ஏற்படும் நோய்க்குக் காரணம் இரத்தம், வெப்பம், காற்று ஆகிய மூன்று ஓட்டங்களில் ஏற்படும் தடை, முரணான வேகம், திசைமாற்றம் இம்மூன்று ஓட்டங்களும் சீராக இயங்குவதற்கு ஏற்படுத்தப்பட்ட ஒரு உன்னதமான பயிற்சியே இந்த எளிய முறை உடற்பயிற்சி. இதனை வேதாத்திரி மகரிஷி அவர்கள் தனது மருத்துவ அறிவினாலும் பல யோகாசனப் பயிற்சிகளை ஆராய்ச்சி செய்தும் உடலில் உள்ள உள்ளுறுப்புக்கள் அனைத்தும் இயக்கம் பெற்று சீர்மை அடைவதற்கான முறையில் மிக நுட்பமாக வடிவமைத்து உள்ளார்கள்.

மற்ற யோகாசனங்களுக்கும் எளியமுறை உடற் பயிற்சிக்கும் உள்ள வேறுபாடு

மற்ற எல்லா யோகாசனங்களையும் ஆராய்ச்சி செய்து அதிலிருந்து பலன் குறையாமலும் அதே சமயத்தில் எளிய முறையிலும் உள்ளவாறு வடிவமைக்கப்பட்டுள்ளதால் எளிய முறை உடற்பயிற்சியை அனைத்துத் தரப்பினரும் பக்கவிளைவுகள் ஏதுமின்றி மிகச் சுலபமாகச் செய்ய முடியும். இதுவே எளியமுறை உடற்பயிற்சியின் தனிச்சிறப்பாகும். இந்த எளியமுறை உடற்பயிற்சியை 7 வயது முதல் அனைவரும் செய்யலாம்.

**வேதாத்திரி மகரிஷி அவர்களின் எளிய முறை உடற்பயிற்சியினால் கிடைக்கும் பயன்கள்**

எளிய முறை உடற்பயிற்சியில், உடல் உள் உறுப்புக்கள் அனைத்தும் முறையான இயக்கம் பெறுவதுடன், இரத்த, வெப்ப, காற்று ஓட்டங்கள் சீர்மை அடைகின்றது. இதனால் உடலுக்கு இயல்பாகவே நோய் எதிர்ப்பு ஆற்றல் அதிகரிக்கிறது. நாள் முழுவதும் சுறுசுறுப்புடனும், உற்சாகத்துடனும் இருக்க உதவுகிறது. மேலும் தொடர்ந்து செய்து வருவதால் கருத்தொடராக ஏற்படும் பரம்பரை வியாதிகள் வராமல் தடுக்கப்படுகின்றன.

தியானம்

மனதைக் கூர்மைப்படுத்தும், ஓர்மைப்படுத்தும், சீர்மைப்படுத்தும் நேர்மைப்படுத்தும் பயிற்சி தியானம் எனப் படும். தியானத்தை தவம், யோகம், தொழுகை, ஜெபம், நிஷ்டை, அகநோக்குதல் ஆன்மதரிசனம் என்றும் சொல்லலாம்.

மனவளக்கலையில் கற்றுத் தரப்படும் தியானம்

மனவளக்கலையின் எளியமுறை குண்டலினி தியானம் கற்றுத்தரப்படுகிறது. இது உடலில் ஓடிக்கொண்டிருக்கும் உயிர் மீது மனதை வைத்து செய்யும் ஒரு உயர்ந்த முறை தியானமாகும்.

தியானம் செய்வதால் மனம் அமைதியாகுமா?

மனம் அமைதியாகும். பொதுவாக மனித மன அலைச்சுழல் 14 இலிருந்து 40 சுற்று வரை பீட்டா அலைச்சுழலில் ஓடிக்கொண்டிருக்கும். தியானம் செய்யும்போது 14க்கும் கீழே ஆல்பா அலைச்சுழலில் மன அலைச்சுழல் குறைவதால் மனம் அமைதியாகிறது. பிட்யூட்ரி, பினியல் மற்றும் அனைத்து நாளமில்லா சுரப்பிகளும் இயக்கம் பெறுகின்றன.

தியானத்தினால் ஏற்படும் நன்மைகள்

❖ எச்செயலிலும் திறமையைக் கொடுக்கிறது.

❖ மனதைச் சமநிலையில் வைத்திருக்க உதவுவது தியானமே.

❖ மனதைக் கூர்மைப்படுத்த, சீர்மைப்படுத்த, நேர்மைப்படுத்த உதவுவது தவமே.


❖ மூளையிலுள்ள ஆயிரம் கோடி செல்களையும் செயல்பாட்டிற்கு கொண்டு வந்து ஆற்றலை அதிகப்படுத்துகிறது. கோபம், படபடப்பு, பயம் குறைகிறது.

❖ யோகம் செய்யும் போது மூச்சுவிடும் எண்ணிக்கை, இதயத்துடிப்பு எண்ணிக்கை, இரத்த ஓட்டத்தின் வேகம் இவை எல்லாம் குறைந்து உடலின் சீதோஷ்ண நிலையில் இருக்கும் யோகியினுடைய உடலின் அணுக்கள் விரைவில் அழிவதில்லை. எனவே இளமை நீடித்து, ஆயுளும் நீள்கிறது. மன ஆற்றல் கூடுகிறது. சலனமற்ற ஆழ்ந்த அமைதி கிடைக்கிறது.

❖ வேக உணர்வுகளைக் குறைக்கவும் தடுக்கவும் கூடிய அடக்க உணர்வை மாத்திரைகளை உட்கொள்ளாமல் இயற்கையாகவே உண்டாகுகிறது.

❖ குறிப்பாக மாணவர்களுக்கு ஞாபக சக்தி (Memory Power), படைப்புத்திறன் (Creativity), மனஉறுதி (Will Power), மதிநுட்பம் (Perspicacity), பெருந்தன்மை (Magnanimity), பொறுமை (Tolerance), ஏற்புத்தன்மை (Receptivity) மற்றும் இணக்கத் தன்மை (Adaptability) ஆகியவற்றைக் கொடுக்கிறது.

❖ மேலும் புத்துணர்ச்சி (Enthusiasm), தன்னம்பிக்கை (Self Confidence), அறிவாட்சித்தரம் (Personality) நுட்பம் (Sensitivity), வீரியம் (Vitality), விட்டுக்கொடுத்தல் (Adjustment), தியாகம் (Sacrifice), ஒத்துப்போதல் (Acceptability), நிறைவு (Satisfaction), மெய்யறிவு (Wisdom), அமைதி (Peace) மற்றும் பேரின்பம் (Ecstasy) ஆகியவற்றை அளிக்க வல்லது.



❖ தியானத்தால்கூடும் மன ஆற்றலை முறைப்படுத்த பயிற்சிகள் உண்டா?

உண்டு. தியானத்தால் கூடும் மனஆற்றலை நன்முறைப்படுத்த நமது எண்ணங்களையும் செயல்களையும் ஆராய்ந்து சரிசெய்யும் அகத்தாய்வுப் பயிற்சிகள் மனவளக்கலையில் கற்றுத்தரப்படுகிறது.

❖ ஜீவகாந்தம் என்றால்: தற்சுழற்சியினால் ஒவ்வொரு உயிர்த் துகளிலிருந்தும் வெளியாகிற விரிவலைகளின் தொகுப்பை ஜீவகாந்தம் என்கிறோம். இந்த ஜீவகாந்தமே நமது உடல் மற்றும் மன இயக்கங்களுக்கு அடிப்படையான மூல ஆற்றலாகும்.

❖ ஜீவகாந்தத் திணிவு எதைப் பொறுத்து அமைகிறது

❖ பிறக்கும் குழந்தையின் தன்மை

■ விதையின் தன்மையை பொறுத்து மரத்தின் தன்மை அமைவதுபோல விந்து நாத திரவத்தின்

■ தன்மையைப்பொறுத்தே அதிலிருந்து உருவாகிற குழந்தையின் தன்மையும் அமைகிறது.

❖ காயகல்ப பயிற்சி

❖ உயிரைப்பற்றிய ஆழ்ந்த உண்மைகளை உணர்ந்த சித்தர்கள் ஆய்ந்து கண்ட உயிரைத் தூய்மை செய்து வளப்படுத்தும் விந்து நாதத்தோடு தொடர்புகொண்ட மூச்சுப்பயிற்சியாகும்.

❖ காயகல்பப் பயிற்சி எவ்வாறு எவ்வகைகளில் உச்சகட்ட நன்மைகளைத் தருகிறது?

காயகல்ப பயிற்சியின் மூலம் மூலாதாரத்தில் செறிவு பெற்றுள்ள விந்து நாத திரவம் பதங்கமாகி உடல் முழுவதும் பரவுகிறது. இவ்வாறு ஆற்றல் வீணாகாமல் சேமிக்கப்படுவதாலும், தூய்மைப்படுத்தப்படுவதாலும், உடலின் நோய் எதிர்ப்பு சக்தி கூடுகிறது. முதுமையைத் தள்ளிப் போடுவதற்கும் கருத்தொடராக வந்த நோய் குணமாவதற்கும் இப்பயிற்சி உதவியாக அமைகிறது. பருவத்தில் ஏற்படும் தவறான எண்ணங்களுக்கு அடிமையாகாமல் இப்பயிற்சி மூலம் உடல்வளம், உயிர்வளம் பெருக்கி முழு நலத்துடன் நீண்ட ஆயுளுடன் வாழலாம்.

❖ காயகல்ப பயிற்சியை யார் செய்யலாம்?

14 வயதிற்கு மேற்பட்ட வயது வந்த ஆண், பெண் இருபாலரும் வாழ்நாள் முழுவதும் செய்து பயன்பெறலாம்.

❖ குடும்ப வாழ்க்கைக்கு காயகல்ப பயிற்சி எவ்வாறு உதவுகிறது?

ஆண்களுக்கு விந்துசக்தியின் தரமும், பெண்களுக்கு நாத சக்தியின் தரமும் உயர்வதால் இருபாலருக்கும் மண வாழ்க்கையில் பூரண திருப்தி ஏற்படுகிறது. பால்உணர்வு வேட்கை சமன் செய்யப்படுவதால் தேவையற்ற குழப்பம், கோபம் மற்றும் குடும்ப சச்சரவுகள் நீங்கி நன்மக்கட்பேறு பெற்று தம்பதியர் இனிதே வாழ உதவுகிறது.

❖ அகத்தாய்வு பயிற்சி என்றால் என்ன?

நம்மை நாமே தற்சோதனை செய்து நம்மில் எழும் எண்ணங்களை ஆராய்ந்து சரிசெய்யவும், சினத்தை தவிர்க்கவும், கவலைகளை ஒழிக்கவும், ஆசைகளை சீர் அமைக்கவும், நமது வாழ்வின் நோக்கத்தை தெரிந்து வாழவும், அளிக்கப்படும் பயிற்சிகளே அகத்தாய்வு பயிற்சிகளாகும்.

❖ ஆசையே துன்பத்திற்கு காரணமா?

இல்லை பேராசையே துன்பத்திற்கு காரணம். முரணான ஆசை, தீய விளைவுகளைத் தரக்கூடிய ஆசை, ஒழுக்கக்குறைவான ஆசை ஆகியவைகளும் துன்பத்திற்கு காரணங்கள். அளவு முறையோடுகூடிய மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை தேவை தான்.

❖ மனிதனால் பழக்கத்திலிருந்து ஏன் விடுபட முடியவில்லை?

மனிதன் பிறந்ததிலிருந்து தொடரும் எண்ணம், சொல், செயற்பாட்டினால் தன்னில் ஒவ்வொரு சொல்லிலும், நரம்பிலும், மூளை செல்களிலும் ஏற்படும் பதிவுகளின் தொகுப்பே பழக்கமாகிறது. ஆனால் மனிதன் விளக்கமடைந்த நிலையிலும் பழக்கப்பதிவின் தாக்கத்தினால் அதிலிருந்து விடுபட முடியாமல் பழக்கத்திற்கும் விளக்கத்திற்குமிடையே போராடிக் கொண்டிருக்கிறான்.

❖ **உடல் நலக்குறைவு, மனச்சோர்வு, சுதந்திரம் பாதிப்பு ஆகியவற்றிற்கு காரணமென்ன?**

அனுபோகப்பொருட்கள் பெருகப் பெருக உடல்நலம் கெடும். சொத்துக்களின் எண்ணிக்கை வளர வளர மன அமைதி கெடும். பராமரிக்கப்படவேண்டிய குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை உயர உயரச் சுதந்திரம் கெடும்.

❖ ஐந்தில் அளவு முறை தேவை விளக்கவும்

உணவு, உழைப்பு, உறக்கம் (ஓய்வு), தாம்பத்தியம், எண்ணம் ஆகிய ஐந்தை மிகையாக அனுபோகிக்கக்கூடாது. ஆனால் அதற்காக முழுவதுமாக அலட்சியமும் செய்துவிடக் கூடாது. மேலும் முரணாகவும் அனுபோகிக்கக்கூடாது. எனவே இவ்வைந்தில் அளவு முறை (Method of limitation) மேற்கொள்ள வேண்டும்.

❖ ஆசையை எப்படி சீரமைக்கலாம்?

ஆசை தோன்றிய உடன் கீழ்கண்ட வினாக்களை எழுப்பி விடைகளை ஆராய்ந்து முடிவெடுப்பதே ஆசை சீரமைப்புப் பயிற்சி

1. இந்த வசதி அல்லது பொருள் எனக்கு இன்றியமையாததா?

2. இது இல்லாமல் என்னால் சமாளிக்க முடியாதா?

3. இதை அடைய என்னிடம் உடல்நலம், மனவளம், பொருள்வளம் இருக்கின்றனவா?

4. இதனால் எனக்குஏதேனும் தொல்லைகள் பின்விளைவாக உண்டாகுமா?

5. இதைப்பெற்றால் ஏற்படப்போகும் நன்மைகள் என்ன? இதில் எவ்வளவு தேவை?

❖ சினத்தால் வரும் கேடுகள் யாவை?

சினம் கொள்ளல் தற்கொலைக்கு ஒப்பாகும். சினம், குருதி அழுத்தம், மார்புநோய், பித்து, புண்.கண். நோய்கள், தாது, மூளை வளமழிவு செய்யும்.

❖ சினத்தை தவிர்ப்பது எப்படி?

மனவளக்கலை பயிற்சி பெறுவதே சினத்தை தவிர்க்க எளிய வழியாகும்.

❖ கவலை என்றால் என்ன?

நினைப்புக்கும் நடப்புக்கும் இடையே வித்தியாசம் வரும்போது அச்சூழ்நிலையை மனத்தால் ஏற்றுக்கொள்ள முடியாதபோது அந்த மனநிலையைக் கவலை என்கிறோம்.

❖ கவலைக்கு காரணங்கள் யாவை?

உடலத்தின் களங்கமாகிய நோய்களும், உயிரின் (மனதின்) களங்கமாக விளங்கும் வாழ்க்கைச் சிக்கல்களும் நமக்கு அச்சத்தை உண்டாக்குகின்றன. அச்சத்தினால் நமது திறமை குன்றி கவலை உணர்வு ஏற்படுகிறது. கோபம், வஞ்சம், பொறாமை, வெறுப்புணர்ச்சி, பேராசை, ஒழுக்கம், மீறிய காமநோக்கம், தற்பெருமை அவசியமற்ற பயம், அவமதிப்பு, அதிகார போதை இந்தப்பத்தும் கவலையின் தொகுப்பாகும்.

❖ கவலையில்லாமல் வாழவழியுண்டா? உண்டு. இயற்கையின் ஒழுங்கமைப்பை அறியவேண்டும். சிந்திக்கும் திறனை பெருக்கிக்கொள்ள வேண்டும். தன்னம்பிக்கை வேண்டும். முயற்சி வேண்டும். துணிவு வேண்டும்.

❖ மனம் என்றால் என்ன?

நம் பருவ உடலுக்குள் சூக்குமமாய் இயங்கும் உயிர்ச்சக்தி புலன்கள் வாயிலாக புரியும் செயல்களும் அச்செயல்களின் விளைவாக நாம் பெறும் அனுபவங்களுமே மனம் எனப்படும். உடலுக்கு மூலப்பொருளான வித்துவின் உயிர் என்னும் சூக்குப்பொருள் (விண்) திணிவு பெற்று சுழன்று கொண்டிருக்கிறது. ஒவ்வொரு உயிர்த்துகள் மையத்திலும் இருப்பு நிலையான இறைவெளி இடம் பெற்று அறிவாக (Consciousness) அமைந்துள்ளது.

சூக்குமப்பொருளான விண்துகள்களின் சுழற்சி விரைவால் எழும் அலையே ஜீவகாந்தம். உயிர்மையத்தில் அமைந்துள்ள அறிவு, உயிரின் சுழற்சியால் எழும் விரிவலையான காந்த அலை மூலம் மனமாக படர்க்கை நிலை பெறுகிறது.

❖ மனதின் செயல்பாடுகளை விளக்குக?


நம் உடலில் உருவாகும் ஜீவகாந்த ஆற்றல் காதுகள் மூலமாக ஒலியாகவும், கண்கள் மூலமாக ஒளியாகவும், மூக்கின் மூலமாக மணமாகவும், நாக்கின் மூலமாக சுவையாகவும், தோலின் மூலமாகத் தொடு உணர்வு என்ற அழுத்தமாகவும் மாறி தேவை, பழக்கம், சூழ்நிலைக்கு ஏற்ற எண்ணங்களாக மாறுகின்றன. இவ்வாறு ஜீவகாந்த அலைத்தொகுப்பு நமது எண்ணங்களின் பிறப்பிடமாக இருப்பதால் அது நமது மனமாகவும் செயற்படுகிறது.

*-தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி-*


தலைவர் மற்றும் உப தலைவர்

திறப்பு விழா மங்கலம்
15.10.2016 சனிக்கிழமை காலை 07.00-
அறிவுத்திருக்கதவு திறத்தல்
திறந்து வைப்பவர்: அருள்நிதி பத்மஸ்ரீ S.K.M.மயிலானந்தன், தலைவர், உலக சமுதாய சேவா சங்கம்
முதல் நாள் மங்கலம்
காலைச்சங்கமம்
15.10.2016 சனிக்கிழமை
முதல் நாள் மங்கலம்
மாலைச்சங்கமம்
15.10.2015சனிக்கிழமை
4.00 மணிக்கு இறைவணக்கம்- குருவணக்கம்
அருள்நிதி திருமதி இராமச்சந்திரன் ஜெகதீஸ்வரி
5.30- பிரதம விருந்தினர் உரை
அருள்நிதி பத்மஸ்ரீ S.K.M. மயிலானந்தன் தலைவர், உலக சமுதாய சேவா சங்கம்
6.30 - சிறப்புரை- அறிவுக்கு ஆலயம் எதற்கு?
சொல்வேந்தர் சுகிசிவம் (தமிழ்நாடு)
இரண்டாம் நாள் மங்கலம்
காலைச்சங்கமம்
16.10.2016 ஞாயிற்றுக்கிழமை
இரண்டாம் நாள் மங்கலம்
மாலைச் சங்கமம்
16.10.2016 ஞாயிற்றுக்கிழமை
6.15-சிறப்புரை- உறவுகள் மேம்பட மனவளக்கலை
சொல்வேந்தர் சுகிசிவம்

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான
# தேர்த்திருவிழா சிறப்பிதழ்-2016




**KEZRO**
**LADIES CORNER**
**NELLIADY**
**TP:- 077 060 0070**

SRI AMBAAL
JEWELLERS
ஸ்ரீ அம்பாள் ஜீவலர்ஸ்
நெல்லியடி.
தொ.பே.இல.
021 320 5743
22Krt தங்க
நகைகள்
வியாபாரம்
கோவிலுக்கு தேவையான
பித்தளைப் பொருட்கள்
குடை, திருவாசிகள்,
ஓடர் வியாபாரம்
SRI SHAKTHY MADAM
ஸ்ரீ சக்தி மாடம்
பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே.இல.
021 320 5743

**ஆதீஸ் வெதுப்பகம்**
**& பல்பொருள் வாணிபம்**
கரணவாய் தெற்கு, கரவெட்டி.
TP: 021 226 2303
அனைத்து ஓடர்களும்
ஏற்றுக்கொள்ளப்படும்.

JEYA OUM SAKTHI
Building Raw Materials Sales Center
Regd.No. KVD/ 914
Mooththavinayakar Koviladi
Karanavai, Karaveddy
Tel:- 077 773 7679
சிறிய, பெரிய வாகன
மணல் விநியோகஸ்தர்

**பரந்தாமன் சிற்றுண்டி**
**தயாரிப்பாளர்**
புத்தினியம்மன் வீதி
கம்பர் மலை,வல்வெட்டித்துறை.
077 158 4259

**THE PHONE SHOP**
**MAIN STREET**
**NELLIADY**
**077 285 0285**
வெளிநாட்டு பணப்பரிமாற்றம்
யாழ்.கொழும்பு
ஆசனப்பதிவு,
கையடக்கத்
தொலைபேசி விற்பனை

**Nellai Silk**
**Main Street,**
**Nelliady.**
நெல்லை சில்க்
**TP:-021 226 3207**

**அஜா கிறீம் ஹவுஸ்**
பிரதான வீதி,
நெல்லியடி
கந்தப்பு சிவராசா.
ஓடர்கள் ஏற்றுக்
கொள்ளப்படும்.

**AMBIKAI JEWELLERY**
Kodikamam Road, Nelliyady.
Articles All Guaranteed
and Genuine
for Quality
Jewels
TP:- 021 226 3285
077 656 9559

# காக்கைதீவில் மீன் விற்பனை நிலையம் அமைக்கும் திட்டத்தை நிறுத்தக்கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

காக்கைதீவு இறங்குதுறைப்பகுதியில் மீன் விற்பனை நிலையம் அமைக்கும் திட்டத்தை தற்காலிகமாக நிறுத்துமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழில் சம்மேளனத் தலைவர் என்.பொன்னம்பலம் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

காக்கைதீவு இறங்குதுறையானது யாழ். மாவட்டத்தில் இரண்டாவது இறங்குதுறையாக காணப்படுகிறது. 1960 ஆம் ஆண்டு இப்பகுதியில் மீன் சந்தையை ஏலமிடமுற்பட்ட போது மானிப்பாய் கிராம சபைக்கும் சாவற்காட்டு கடற்றொழிலாளருக்கும் கைகலப்பு ஏற்பட்ட வரலாறும் உண்டு.

இந்த நிலையில் தற்போது இந்த இறங்குதுறையை ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் நங்கூரமிடும் துறைமுகமாக அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறித்த வேலைத் திட்டம் அடுத்த ஆண்டளவில் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் குறித்த துறைமுகத்தில் மானிப்பாய் பிரதேச சபையானது மீன் விற்பனை நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு முயற்சிக்கிறது.

ஆனால் தற்போது இந்த மீன் விற்பனை நிலையம் அமைக்கப்பட்டால் இறங்குதுறை அமைக்கும் பணிகளுக்கு இடையூறு ஏற்படும் என்பதுடன் கடற் பகுதியில் அத்திவாரங்கள் கட்டாமல் மணல்களை நிரப்பும் போது மழை காலத்தில் அவை வெள்ள நீரால் அடித்துச் செல்லப்படும் அபாயமும் உள்ளது. இதனால் மக்களின் பணமே வீண்விரயமாகும். அத்துடன் இது போன்ற மீன் சந்தையானது துறைமுகம் அமைக்கும் பணிகளில் உள்வாங்கப்பட்டு செய்யப்பட வாய்ப்புக்கள் காணப்படுவதால் குறித்த பணத்தை வேறு தேவைகளுக்கு பயன்படுத்த முடியும். எனவே பிரதேச சபையின் தன்னிச்சையான செயற்பாட்டினால் 20 இலட்சம் ரூபாய் மக்களின் பணம் வீண் விரயம் செய்யப்படவுள்ளது. எனவே மானிப்பாய் பிரதேச சபையானது மீன் விற்பனை மையம் அமைக்கும் திட்டத்தை தற்காலிகமாக நிறுத்த வேண்டும் என மேலும் தெரிவித்துள்ளது. (இ-9)

# இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் இணைச்சுகாதார விஞ்ஞானப் பிரிவின் 10 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நிறைவாழ்வு மையத்துடன் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30மணிக்கு விசுவமடு கண்ணகிபுரத்தில் இடம்பெறும். வைத்தியர் சந்திப்பு, நோய் பரிட்சிப்பு,நோயாளிகளை இனங்கண்டு அவர்களுக்கு மருந்து வழங்கல்,இலவச மருத்துவப் பரிசோதனை (குருதி, குளுக்கோசு), சுகாதாரம் சார் விழிப்புணர்வு என்பன இடம்பெறும். (இ-3)


# ஆசிரியர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையின் ஆசிரியர் தினவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் ரி.ரவீந்திரநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கல்வி முதுமாணி, இணைப்பாளர், கலாநிதி திருமதி ஜெ.இராசநாயகம் கலந்து கொள்ளவுள்ளார். (இ-7)

# வீதிப்போக்குவரத்து குறித்து விழிப்புணர்வுக் கருத்தரங்கு



நெல்லியடிப் பொலிஸாரின் ஏற்பாட்டில் வதிரி மெ.மி.த.க. பாடசாலை மாணவர்களுக்கு வீதிப்போக்குவரத்து மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

நேற்று முன்தினம் புதன்கிழமை பாடசாலை மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெற்ற இவ்விழிப்புணர்வு கருத்தரங்கில் நெல்லியடி பொலிஸாரினால் மாணவர்களுக்கு வீதியில் எவ்வாறு செல்வது, வீதியை எவ்வாறு கடப்பது போன்ற அறிவுரைகள் வழங்கப்பட்டன.

மேலும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிறுவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன. (இ-30)


காசி யாத்திரையும், காட்மாண்டு, நேப்பாள் யாத்திரையும்

ஆரம்பம் : 15.11.2016 - யாத்திரீகர் : 15 - நாள்கள் : 14

தரிசிக்குமிடங்கள் சுருக்கமாக விபரங்களைக் கேட்டு அறிக!

காசி விஸ்வநாதர் உட்பட காசியில் 15 இடங்கள், காயாவில் பிதிர்க்கடன்கள் செய்வது, புத்தகாயாவில் 5 இடங்கள், அலகபாத்தில் (கங்கா,ஜமுனா, சரஸ்வதி சங்கமம்) உட்பட 5 இடங்கள், இராமேஸ்வரத்தில் 5 இடங்கள், மதுரை மீனாட்சி, ஆக்ராவில் (தாஜ்மகால், செங்கோட்டை, காட்மாண்டு நேப்பாளில் பசுபதிநாதர், சங்கு நாராயணர், ஆஞ்சநேயர்,சுயம்புநாதம், மாயாதேவி கோயில்கள் உட்பட 20 இடங்களும் டெல்லியில் அட்ஷய தாம் (நாராயணர் கோயில் உட்பட) வேறு ஆலயங்களும் தரிசிக்கலாம்.

தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாயிற்கு எமது சேவை :

5 விமானப் பயணங்கள், ஏனைய பயணங்கள் , A/C பஸ், உணவு, மடப்பள்ளி, சமையல் ஆட்கள், சமைத்த சுத்தமான சைவ உணவு, மூன்று வேளை காப்பி, ரீ, குடிநீர், தரமான இரண்டு பேருக்கு குளியலறை இணைந்த அறைகள், பூசகர்களும் தயக்கமின்றிக் கலந்து கொள்ளலாம்.

விருப்பமுடையவர்கள் பாஸ்போட் போட்டோக்கொப்பி ஒன்றும் சிறிய கலர் புகைப்படமும் அனுப்பி பதிவு செய்க!

மேல் விபரங்களுக்கு : கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்

59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு -11

தொ.பே : 077 768 0102 / 077 736 2154

Facebook : sridevisriranganathan.thuraiappa

(இ-5974)



அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர்

கலாசாரதிருமணமண்டபம்

ANNAMALAYAN SRI RAGAVENTHIRAR CULTURAL WEDDING HALL

திருமண வைபவங்கள், பதிவு திருமணங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள் மற்றும் வங்கிகள், கொம்பனிகளின் வைபவங்கள், பாடசாலை நிகழ்வுகள் ஆகியவற்றை உங்கள் விருப்பத்திற்கேற்ப சிறந்த முறையில் அனைத்து வசதிகளுடன் சிறப்பாக நடாத்திட நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம் ...






மேலும் புதுப்பொலிவுடன் புதியமுறையில் மணவறை அமைக்கப்பட்டிருப்பதால் திருமண முகூர்த்த நாட்களும் மற்றும் நிகழ்வுகளும் பதியப்பட்டு வருவதால் நீங்களும் உங்களுடைய நிகழ்வுகளை கூடிய விரைவில் முற்பதிவு செய்து கொண்டால் இடம் கிடைக்காமல் போவதை தவிர்த்துக்கொள்ளலாம்.

ஒக்டோபர் 31, நவம்பர் 02,04,11,18,23,24,27, டிசெம்பர் 01 ,09,14

ஆகிய முகூர்த்த திகதிகளில் வெற்றிடங்கள் இருப்பதால் இப்போதே உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

இம் மண்டபத்தில் திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட அனைவருக்கும் வல்லிபுர ஆழ்வார் அருள் கிடைக்க வேண்டுகின்றோம்

ANNAMALAYAN SRI RAGAVENTHIRAR ENTERPRISES (PVT) LTD

இல. 542, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே : 021 373 4916, 021 222 1355, 021 222 1356

மின்னஞ்சல் : asrhall@hotmail.com

Find us on : Facebook.com / Jaffnaasrenterprises



அரச அங்கீகாரம் பெற்ற "A" தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

நியூ நெல்சன் லேணர்ஸ்

New Nelson Learners

- சாரதி பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
- சகல வாகனங்களுக்கும் அனுபவம் மிக்க சாரதிகளால் சிறந்த முறையில் பயிற்றுவித்து மிக விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புகள்.
- அதிகூடிய பயிற்சி நேரங்கள். அதிகூடிய பயிற்சிக் காலங்கள். தவணைமுறைக் கட்டணங்கள்.
- வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.
- நவீன வாகனங்களில் வாகனப் பயிற்சிகள்.





கிளைகள்

இல.97 A, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. 021 226 1393, 077 111 3382

இல.89, கண்டி வீதி சுண்டுக்குளி யாழ்ப்பாணம். 021 222 4527 077 358 1916

பஸ் நிலையம், சுன்னாகம் 077 715 0097 021 492 3732

சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய். 021 225 6955 077 794 2312/ 071 735 8440

காளிகோயில் வீதி, சாவகச்சேரி 021 492 3114 077 761 1686

பிரதான வீதி, வல்வெட்டித்துறை. 077 557 3711 021 492 3733



# ட்ரம்ப் ஜனாதிபதியானால் உலகிற்கே ஆபத்தாகும்



# ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் எச்சரிக்கை

**(வோஷிங்டன்)**

**அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக்கட்சி சார்பில் போட்டியிடும் டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படின் அது உலகளவில் ஆபத்தானது என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் செயிட் அல் ஹுசைன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

ஜெனிவா ஐக்கிய நாடுகள் சபை தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், பாதிக்கப்பட்ட சமூகங்கள், சிறுபான்மையினர் மற்றும் பல்வேறு விடயங்கள் தொடர்பிலான ட்ரம்ப்பின் கருத்துக்களானது சர்வதேச சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டதாகும். அவரின் கருத்துக்கள் சமூகத்தை நிலைகுலையைச் செய்வதுடன், குழப்பத்தை விளைவிக்கும் அபாயம் கொண்டதாகவும் காணப்படுகிறது.

நான் எந்த ஒரு நாட்டின் அரசியல் பிரசாரத்திலும் ஈடுபடமாட்டேன். ஆனால் பதவிக்கு வருவதற்கு முன் ஒரு குறிப்பிட்ட இன மக்களுக்கு எதிராக கருத்து தொடுக்கும் ட்ரம்ப்பின் செயற்பாடு மனித உரிமைகளை பாதிக்கும்செயலாகும். எனவே மனித உரிமை அதிகாரி என்ற ரீதியில் ட்ரம்ப் குறித்து கருத்து தெரிவிக்க வேண்டியது எனது கடமையாகும்.

ஆபாச மற்றும் அடக்குமுறையான பேச்சுக்களை வெளியிட்டு வரும் ட்ரம்ப், எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் பாரிய ஆபத்துக்களுக்கு முகம்கொடுக்கவேண்டியநிலை ஏற்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# இராணுவம் - வன்முறையாளர்கள் இடையே மியன்மாரில் பயங்கர துப்பாக்கிச் சண்டை

(யான்கான்)

மியன்மார் நாட்டில் இராணுவ வீரர்களுக்கும் துப்பாக்கி ஏந்திய வன்முறையாளர்களுக்கும் இடையே கடந்த செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட பயங்கர துப்பாக்கிச் சண்டையில் 12 பேர் உயிரிழந்தனர்.



மியன்மார் நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள ராகினில் இராணுவ வீரர்களுக்கும் துப்பாக்கி ஏந்திய வன்முறையாளர்களுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது.

மாங்டாவ் நகரத்தில் உள்ள பியாங்பிட் பகுதியில் நூற்றுக்கணக்கானோர் துப்பாக்கிகள் மற்றும் வாள்களை ஏந்தியவாறு இராணுவப் படை மீது பயங்கரத் தாக்குதலில் ஈடுபட்டனர். இதில் 4 இராணுவ வீரர்கள் மற்றும் ஒரு வன்முறையாளரும் கொல்லப்பட்டனர்.

இதேபோல் ஆங் பைங் நைர் பகுதியிலும் கடும் மோதல் ஏற்பட்டது. இந்த தாக்குதலையும் சேர்த்து இராணுவ வீரர்கள் 7 பேர் உயிரிழந்ததாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சடலங்களுடன் கத்திகளும், தடிகளும் கண்டெடுக்கப்பட்டன.

உயிரிழந்த இராணுவ வீரர்களின் உடல்கள் இராணுவ மரியாதையுடம் அடக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்கா தாக்குதல்

(வோஷிங்டன்)

ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது முதன் முறையாக அமெரிக்கா வான்வெளித் தாக்குதலை நடத்தியுள்ளது.

ஏமன் நாட்டில் அரசுக்கு எதிராக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஏமன் அரச படைகளுக்கு எதிராக தாக்குதலில் ஈடுபடுகின்றனர்.

இந்த விவகாரத்தில் சவுதி தலைமையிலான கூட்டுப்படை ஏமன் அரசுக்கு ஆதரவாக ஹவுதி கிளர்ச்சியாளர்களின் பகுதிகள் மீது வான்வெளித்தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

இந்நிலையில், ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் மீது முதன் முறையாக அமெரிக்கா வான்வெளித் தாக்குதல் நடத்தியுள்ளது.

அமெரிக்காவின் பெண்டகன் செய்திக் குறிப்புகள் இந்த தாக்குதல் குறித்த செய்திகளை வெளியிட்டுள்ளன.

முன்னதாக கடந்த வாரம் அமெரிக்க கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தினர். இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக அமெரிக்கா இந்த தாக்குதலை நடத்தியுள்ளது.

செங்கடலை ஒட்டியுள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்களின் பகுதிகள் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

# பாக். அரசு - ராணுவம் மோதல் கட்டுரையில் உண்மையுள்ளது

## டான் பத்திரிகை உறுதி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் அரசுக்கும் இராணுவத்திற்கும் இடையே நிலவும் மோதல் தொடர்பாக செய்தி வெளியிட்ட டான் பத்திரிகை அது நம்பகமான தகவல்தான் என உறுதியளித்துள்ளது. எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டுப் பகுதியில் இருந்த பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகளின் 7 முகாம்களை இந்திய இராணுவம் கடந்த 29 ஆம் திகதி தாக்கியழித்தது.

இது தொடர்பாக பாகிஸ்தானைச் சேர்ந்த டான் பத்திரிகை கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. கட்டுரையை அந்தப் பத்திரிகையின் மூத்த பத்திரிகையாளர் சிரில் அல்மெய்டா என்பவர் எழுதியிருந்தார். அந்தக் கட்டுரையில், தீவிரவாத முகாம்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அரசு பிரதிநிதிகளும் இராணுவ உயர் அதிகாரிகளும் பங்கேற்ற கூட்டத்தில்ஐ.எஸ். உளவாளிகளும் பங்கேற்றனர்.

அப்போது இராணுவத்திற்கும் அரசுக்கும் இடையே மோதல் ஏற்பட்டதாக கட்டுரையில் கூறப்பட்டிருந்தது.

இதையடுத்து கட்டுரையாளர் சிரில் அல்மெய்டா நாட்டை விட்டு வெளியேற பாகிஸ்தான் அரசு தடை விதித்தது. இந்நிலையில் இந்தக் கட்டுரை புனையப்பட்ட கட்டுக் கதை என்றும் இதற்கு எந்த ஆதாரமும் இல்லை என பிரதமர் நவாஸ் ஷெரீப் அரசு அறிவித்தது. இந்த நிலையில் தங்கள் மீதான குற்றச்சாட்டுக்கு டான் பத்திரிகை நேற்று முன்தினம் மறுப்பு தெரிவித்திருந்தது.

அதில் தாங்கள் வெளியிட்ட கட்டுரை உண்மைத் தன்மை வாய்ந்ததுதான் என்றும் பல இடங்களில் ஆய்வு செய்து உறுதி செய்த பின்னரே இராணுவம்-அரசு இடையேயான மோதல் கட்டுரையை வெளியிட்டோம் என்றும் தெரிவித்துள்ளது.

மேலும் நாட்டை விட்டு வெளியேற தடை விதிக்கப்பட்டோர் பட்டியலில் இருந்து அல்மெய்டா பெயரை நீக்க வேண்டும் என்றும் அவ்வாறு நீக்கினால் அரசின் கண்ணியம் காப்பாற்றப்படும் எனவும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## துருக்கியில்

# சதிப் புரட்சிக்கு முயற்சித்த பொலிஸ் அதிகாரிகளை கைது செய்ய உத்தரவு



(இஸ்தான்புல்)

துருக்கியில் சதிப்புரட்சிக்கு முயற்சித்த 125 பொலிஸ் உயர் அதிகாரிகளை கைது செய்ய துருக்கி அரசு உத்தரவிட்டுள்ளது.

துருக்கி நாட்டில் கடந்த ஜூலை மாதம் 15 ஆம் திகதி இராணுவத்தின் ஒரு பிரிவினர் புரட்சிக்கு முயற்சித்தனர். ஆனால் அந்தப் புரட்சி முயற்சியை ஜனாதிபதி தாயிப் ஏர்துவான், மக்கள் துணையுடன் முறியடித்து விட்டார்.

இந்தப் புரட்சியின் பின்னால், அமெரிக்க வாழ் துருக்கி மத குரு பெதுல்லா குலன் இருந்ததாக துருக்கி அரசு நம்புகிறது. புரட்சி முயற்சி விவகாரத்தில் அவரது ஆதரவாளர்கள் மீது துருக்கி அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த வகையில் இப்போது 125 பொலிஸ் அதிகாரிகளை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்த துருக்கி அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் ஏற்கனவே 32 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதோடு பாதுகாப்பு, அரச துறைகளைச் சேர்ந்த ஒரு இலட்சம் பேரும் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...


# காலநிலை மாற்றமும் உணவு உற்பத்தியும்

எமது வாழ்க்கையின் இன்றியமையாத பகுதியாக உணவு மற்றும் நீர் ஆகியவை அமைகின்றன.

இருப்பினும் இன்றைய 21 ஆம் நூற்றாண்டில் மக்கள் தொடர்ச்சியாக உணவைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சவாலை எதிர்நோக்குகின்றனர் என்றால் அது பொய்யாகாது.

இதற்கான காரணங்களில் ஒன்றாக மாறி வரும் காலநிலையையும் கூறலாம். காலநிலையில் ஏற்படும் தளம்பல் நிலையானது உணவுற்பத்தியில் பெரும் பங்கை வகிக்கின்றது.

ஒவ்வொரு ஆண்டும் வறட்சி, வெள்ளம் மற்றும் புயல் போன்றவற்றின் தாக்கத்தால்




உள்ளூர் பயிர் விளைச்சல் மற்றும் கால்நடை உற்பத்தியில் பாதிப்பு ஏற்படுகின்றது. இவ்வாறாக சிறுபிராந்திய வாரியான காலநிலையின் தாக்கம் இன்று உலகையே உலுப்புமளவிற்கு வியாபித்து விரிந்து நிற்கின்றது.

ஆய்வறிக்கைகளின்படி 2050ஆம் ஆண்டளவில் 9-10 பில்லியன் மக்கள் உணவைப் பெற்றுக் கொள்வதில் சவாலை எதிர் கொள்ளப் போகின்றனர். இவற்றுக்கான பல தீர்வுகள் முன்மொழியப்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றன. விளைச்சலின் இடைவெளியைக் குறைத்தல், பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல், கழிவுகளைக் குறைத்தல், உணவின் தன்மையினை மாற்றுதல், மீன் வளர்ப்பினை விரிவடையச் செய்தல், உற்பத்தியாளரை ஊக்குவிப்புச் செய்தல், வங்கிக் கடன் வசதிகள் என்பன அவற்றுள் சில. உலகளாவிய ரீதியில் உயிரினங்களின் சமநிலையை உறுதிப்படுத்துவதற்கு இவை அவசியமாகும்.


கணிசமான அளவில் காலநிலையின் தாக்கத்தை குறைப்பதனால் உணவுற்பத்தியை அதிகரிப்பதோடு எதிர்காலத்தில் சுற்றுச்சூழல் மாற்றத்தினையும் உணவு உற்பத்தியின் "தன்மையினையும் மேம்படுத்த முடியும். இவை தவிர நன்னீர் வளங்களை பாதுகாத்தல், பல்லுயிர் பாதுகாப்பு, ஆரோக்கியமான உணவைப் பெற்றுக் கொள்ளுதல், சூழல் தொகுதியில் ஏற்படும் பாதகமான விளைவைக் குறைத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்'.

உலகளாவிய ரீதியில் ஏறத்தாழ 1/3 பங்கு பச்சைவீட்டுவாயுக்கள் விவசாயத்தினால் உருவாக்கப்படுகின்றன என மதிப்பிடப்பட்டுள்ளது. காடழித்தல் மற்றும் விவசாயத்தில் உருவாகும் காபனீரொட்சைட்டு ($CO_2$), மெதேன் ($CH_4$) மற்றும் நைத்திரசு ஒட்சைட் ($N_2O$) ஆகியன பச்சைவீட்டு வாயுக்களாக அமைகின்றன. தாவரக்கழிவுகள் மற்றும் மண் உயிர்மப் பொருட்களின் தகனத்தினால் பெருமளவிலான $CO_2$ வெளிவிடப்படுகிறது. அதிகளவு விளைச்சலைப் பெறுவதற்காக உபயோகிக்கப்படும் இரசாயன உரங்களின் பாவனையால்



$N_2O$ வாயு வெளியேற்றப்படுகின்றது.

அசைபோடும் கால்நடைகளின் நொதித்தல் செறிமானத்திலிருந்தும், சேமிக்கப்படும் எருவிலிருந்தும் மற்றும் வெள்ள நிலைமைகளில் மேற்கொள்ளப்படும் அரிசி உற்பத்தி போன்றவ




ற்றிலிருந்தும் $CH_4$ உற்பத்தியாகின்றது.

காலநிலை மாற்றமானது உணவுற்பத்தியில் முக்கிய பங்கினை வகிக்கின்றது. மாறாக உணவுற்பத்தியை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் காலநிலை மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன. உணவு மற்றும் பான வகைகளின் உற்பத்தியின் போதே பிரதானமாக பச்சை வீட்டு வாயுக்கள் வெளியேற்றப்படுகின்றன. உணவுற்பத்தியின் பிரதான பகுதிகளாக விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் கடல் உணவுற்பத்தி ஆகியன அமைகின்றன.

### விவசாயம்

விவசாயமானது வெப்பநிலை மற்றும் மழை ஆகியவற்றில் தங்கியிருக்கும் அதேவேளை காலநிலை மாற்றமானது விவசாயத்தின் மீது ஒட்டுமொத்தமாக எதிர்மறையான தாக்கத்தினை கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் உலக உணவு பாதுகாப்பிற்கும் காலநிலை மாற்றமானது அச்சுறுத்தலாக அமைகின்றது. இவ்வாறு விவசாய உற்பத்தியின் போது வெளிவிடப்படும் பச்சை வீட்டு வாயுக்களின் காரணமாக புவி வெப்பமடைகின்றது. இதன் விளைவுகள் பெரியளவிலான தாக்கங்களை ஏற்படுத்தும். பூமி படிப்படியாக பாலைவனமாக்கப்படுதல், விவசாய உற்பத்தியில் நீர் இழப்பு, இடைக்கிடையில் எதிர்பாராத விதமான காட்டுத்தீ, கடல் மட்டம் உயர்வடைதல் என்பன அவற்றுள் சிலவாகும். கடல் மட்டம் உயர்வடைவதால் தாழ்வான பகுதிகளில் உள்ள நாடுகளில் ஒரு கட்டத்தில் உயிரினங்கள் வசிக்கவே முடியாமல் போகும் நிலை கூட உருவாகலாம். இவ்வாறான காலநிலை மாற்றங்களால் இலங்கை போன்ற நாடுகள் விரைவாகவே பாதகமான விளைவுகளை எதிர்கொள்வது மட்டுமன்றி அவற்றைச் சமாளிக்கவும் வேண்டியிருக்கும்.

இலங்கையானது பெருமளவில் விவசாயத்தில் தங்கியுள்ள ஒரு வளர்ச்சியடைந்து வரும் நாடாகும்.

இங்கு நெல், தேயிலை மற்றும் தேங்காய் உற்பத்தியானது மிக முக்கியமாக காணப்படுகின்றது.

இவ் உற்பத்தியானது வறட்சி மற்றும் வெள்ளம் காரணமாக பாரியளவிலான தாக்கத்தினை எதிர்நோக்கும் என்பது கவலைக்குரியதொரு விடயமாகும்.

### இறைச்சி மற்றும் பால் உற்பத்தி

இறைச்சி மற்றும் பால் உற்பத்தியிலும் காலநிலை மாற்றமானது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இம்மாற்றமானது உலகளாவிய ரீதியில் 18வீதத்திற்கும் அதிகமான தாக்கத்தை சூழலில் ஏற்படுத்துகிறது என மதிப்பிடப்பட்டுள்ளது. மேய்ச்சல் நிலம் மற்றும் உணவுத் தீனியானது காடழிப்பின் மிக முக்கியமான காரணியாக அமைதல், விலங்குகளின் உணவுத்தேவைக்காக பெருமளவிலான உரம் பயன்படுத்துதல் மற்றும் நொதித்தல் செயற்பாட்டின் மூலம் விலங்குகளால் அதிகளவில் பச்சை வீட்டுவாயுக்கள் வெளியிடப்படுதல் என்பன அதற்கான முக்கிய காரணிகளாக அமைகின்றன.

வளர்ந்துவரும் சமுதாயம் இன்றைய காலகட்டத்தில் இறைச்சி மற்றும் பால் உற்பத்தி பொருட்களை அதிகமாக நுகருகின்றது. இதன் காரணமாக உலகளாவிய ரீதியில் இறைச்சி உற்பத்தியானது 2001-2050 ஆம் ஆண்டிலிருந்து பல மடங்காக அதிகரித்துக் கொண்டிருக்கின்றது.

இவ்வுற்பத்தியை மேற்கொள்ளும் நாடுகளில் உணவானது அவர்களின் விருப்பத்திற்கேற்ப மாற்றி அமைக்கப்படுகின்றமையால் காட்டின் பெரும்பகுதி மிருகங்களை வளர்ப்பதற்காகவும், மேய்ச்சல் நிலங்களுக்காகவும் அழிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான நடவடிக்கைகள் பச்சை வீட்டுவாயுக்களின் வெளியேற்றத்தில் 7 வீதத்திற்குரிய பொறுப்பை தன்னகத்தே எடுத்துக் கொள்கின்றது. இவ்வாறு பல காரணங்களால் சூழலானது மாசுபடுத்தப்படுகிறது. இதன் காரணமாக காலநிலைமாற்றத்தில் பெருமளவு பாதிப்பு ஏற்படுகிறது. உதாரணமாக பச்சைவீட்டு வாயுக்களினால் உலக வெப்பமயமாதல் பாரிய அளவில் உருவாக்கப்பட்டு பல பாதகமான விளைவுகள் ஏற்படுத்தப்படுகின்றன. அத்துடன் வெப்பநிலை உயர்வதால் கடல் மட்டம் உயரும். வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்படும் மற்றும் மழைவீழ்ச்சி ஏனைய காரணிகள் பாதிக்கப்படும்.

"மீன் வளர்ப்பு மற்றும் ஏனைய கடலுணவு உற்பத்தி

கடல்வளம் கொழித்த இலங்கைத்தீவின் உணவு உற்பத்தியானது கடலுணவிலும் பெருமளவில் தங்கியுள்ளது. பொதுவாக கால நிலையில் ஏற்படும் மாற்றம் கடற்றொழிலிலும் அதன் உற்பத்திகளிலும் மிகப் பெரிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றதென்றால் அது மிகையாகாது. வெப்பநிலை, மழைவீழ்ச்சி, காற்றின் வேகம் போன்ற சூழல் காரணிகள் கடல்வாழ் உயிரினங்களின் வாழ்க்கை வட்டத்தில் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றன. (தொடரும்)

அகிம்சா ஜெயக்குமார்
Demonstrator,
Department of Chemistry,
University of Jaffna.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 171

2016 ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசை வென்றவர் யார்?

புதிர் 171இற்கான விடைகளை 24.10.2016 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டியமுகவரி:

கலாநிதி.(திருமதி) ஷிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இரசாயனவியற்றுறை
யாழ்.பல்கலைக்கழகம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

## புதிர் 170 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

தெய்வபகவான் இராஜரட்ணம்
மடத்தடி ஒழுங்கை,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

புதிர் 170க்கான கேள்வியும் விடையும்:
சர்ச்சைக்குரியதாகக் கருதப்பட்ட "மூன்றுபெற்றோர் குழந்தை" (3 Parent baby") என்றபுதிய தொழில்நுட்பத்தில் உலகின் முதல் ஆண்குழந்தை எங்கே பிறந்துள்ளது? மெக்சிகோ

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 171

சரியான விடை:-.................................................
முழுப்பெயர்:-.................................................
முகவரி:-.................................................
தொ.பே. இல:.................................................
கையொப்பம்:.................................................

# தாயகம் திரும்ப 2508 ஈழ அகதிகள் காத்திருக்கின்றனர்

(கொழும்பு)

**தமிழ்நாட்டில் உள்ள அகதி முகாம்களில் வசிக்கும் 2,508 இலங்கைத் தமிழர்கள நாடு திரும்புவதற்குத் தயாராக இருக்கும் நிலையில் இவர்கள் தாயகம் திருமபுவதற்கு இந்திய அரசாங்கத்தின் கப்பல் சேவையை எதிர்பார்த்துள்ளனர்.**

தாயகம் திரும்ப விரும்பும் அகதிகளின் இந்தப்பட்டியல் கடந்த ஒகஸ்ட் 19 ஆம் திகதி இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக ஈழ அகதிகள் மறுவாழ்வு அமைப்பின் நிறுவுநர் எஸ்.சி.சந்திரகாசன் தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் கொழும்பில் சுஸ்மா சுவராஜை சந்தித்த போது, அவர் கேட்டுக்கொண்டதற்கு அமைவாக, தாயகம் திரும்ப விரும்பும் அகதிகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டு அவரிடம் கையளிக்கப்பட்டதாகவும் சந்திரகாசன் தெரிவித்துள்ளார்.

தாயகம் திரும்ப விரும்பும் அகதிகளுக்கு கட்டணமின்றி கப்பல் வசதிகளை செய்து கொடுக்கத் தயார் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் உறுதியளித்திருந்தார்.

தாயகம் திரும்ப விரும்பும் அகதிகள் தொடர்பான பட்டியல் இலங்கை அரசாங்கம், தமிழ் நாடு அரசு, வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் ஆளுநர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுளளது.

இந்தப் பட்டியலின் படி, தாயகம் திரும்ப விருப்பம் வெளியிட்டுள்ளவர்களில் மன்னாரைச் சேர்ந்த 745 பேரும் திருகோணமலையைச் சேர்ந்த 654 பேரும் வவுனியாவைச் சேர்ந்த 574 பேரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 236 பேரும் கிளிநொச்சியைச் சேர்ந்த 148 பேரும் மட்டக்களப்பைச் சேர்ந்த 117 பேரும் கொழும்பைச் சேர்ந்த 6 பேரும் கண்டியைச் சேர்ந்த ஒருவரும் அடங்கியுள்ளனர்.

இந்தப் பட்டியலில் தாயகம் திரும்ப விரும்புபவரின் அடையாள அட்டை இலக்கம், அவரது பெயர், வயது, தந்தையின் பெயர், தங்கியுள்ள அகதிமுகாம், இலங்கைக்குத் திரும்ப விரும்புகின்ற இடம், விரும்பும் பயண மார்க்கம் என்பன உள்ளிட்ட விபரங்கள் இடம்பெற்றுள்ளன.

தமிழ்நாட்டின் கடலூர், இராமேஸ்வரம் துறைமுகங்களில் இருந்து காங்கேசன் துறை மற்றும் தலைமன்னார் துறைமுகங்களுக்கு, தலா 500 பேர் வீதம் அகதிகளை கப்பல்களில் அனுப்பி வைக்க முடியும் என்றும் சந்திரகாசன் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# அபிவிருத்திகள் குறித்து மக்களுக்கு அறிவிப்பு

## பிரதமர் ரணில் வாக்குறுதி

2017 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், இந்நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில், பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தப்படும் என்று கூறிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கொழும்பு நிதி நகரத் திட்டத்தை விரைவில் நிர்மாணித்து முடிக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

16 ஆவது உலக ஏற்றுமதி அபிவிருத்தி மாநாடு, கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய பிரதமர், "ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக்கொண்டு, நாட்டிலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்குவது அரசாங்கத்தின் நோக்கம்" என்றார்.

இதன்படி ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை பற்றி தொடர்ந்தும் கலந்துரையாட நாளை சனிக்கிழமை பிரேஸிலுக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், இந்து சமுத்திரத்தின் கேந்திர நிலையமாக இலங்கையை மாற்றுவதே, தற்போதைய அரசாங்கத்தின் இலக்கு எனவும் கொழும்பு, அம்பாந்தோட்டை, திருகோணமலைத் துறைமுகங்களையும் கட்டுநாயக்க, மத்தள விமான நிலையங்களையும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.



குறிப்பாக திருகோணமலைத் துறைமுகத்தை வங்கக்கடலின் கேந்திர நிலையமாக மாற்ற நடவடிக்கை எடுப்பதாகவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதன்போது மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# மகிந்த மற்றும் கோத்தபாயவுக்கு வழங்கப்பட்ட கௌரவ பட்டத்தை மீளப்பெறுமாறு கோரிக்கை



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு கொழும்பு பல்கலைக் கழகத்தினால் வழங்கப்பட்ட கௌரவ பட்டத்தை நீக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொதுமக்கள் கொள்கை மற்றும் அரசியல் பிரிவின் முன்னாள் பேராசிரியர் லக்சிறி பெர்னாண்டோ கடிதம் மூலம் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தருக்கு இந்தக் கடிதம் 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மகிந்த மற்றும் கோத்தபாயவுக்கு கௌரவ பட்டத்தை வழங்குவது தொடர்பாக தீர்மானித்தவர்களில் பிரதான நபர் தான் என அவர் தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

எப்படியிருப்பினும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு பேராசிரியர் பட்டம் வழங்கப்பட்டதன் பின்னர் அவரது செயற்பாடு ஜனநாயகமாக காணப்படவில்லை என கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாவது பதவிக்காலத்திற்கு மேலதிகமாக மூன்றாவது பதவிக் காலத்திற்கு திட்டமிட்டதன் ஊடாக பட்டத்தின் கௌரவம் மீறப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு தவறியுள்ளதாக அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே பல்கலைக் கழகத்திற்கு உள்ள அதிகாரத்திற்கமைய மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ ஆகிய இருவரினதும் பேராசிரியர் பட்டத்தை நீக்குமாறு லக்சிறி பெர்னாண்டோ கோரிக்கை விடுத்துள்ளார்.



1919 ஆம் ஆண்டு அமெரிக்க பல்கலைக்கழகத்தில் அவ்வாறு பேராசிரியர் பட்டம் மீண்டும் நீக்கப்பட்டுள்ளதனை ஒரு உதாரணமாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையை தனக்காக பிரதி பேராசிரியர் நிர்மால் ரஞ்சித் தேவசிறியினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## எது சொன்னாலும் குற்றமா?

எது சொன்னாலும் குற்றம் காணும் மனிதர்கள் கண்ணில்படாத தீவில் மட்டுமே வாழத் தகுதியானவர்கள்.

நாம் யாராலும் விமர்சிக்கப்படக்கூடாது. நாம் விமர்சனத்திற்கும் கேலிக்கும் அப்பாற்பட்டவர்கள் என்று யார் , நினைக்கிறார்களோ, அவர்கள் மற்றவர்களால் சிறிதும் விரும்பப்படுவதில்லை. நமக்கென்னத்திற்கு இந்த ஆளோடு வம்பு? என்று பிறர் இவர்களிடமிருந்து விலகி வாழவே நினைக்கிறார்கள்.

ஒருமுறை லண்டனில் தாட்சரைக் கேலி செய்து நாடகம் ஒன்று நடந்தது. அரங்கில் முன் வரிசையில் நடுஇருக்கையில் அமர்ந்திருந்தவர் யார் தெரியுமா? சாட்சாத் தாட்சரே தான். இதில் வேடிக்கை என்னவென்றால் நாடகம் முடிந்தவுடன் தாட்சராக நடித்தவரையும் கதை வசன கர்த்தாவையும் கைகுலுக்கிப் பாராட்டிய தாட்சர், என்னிடம் உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டியதற்கு மிக்க நன்றி. இது என்னை நான் உணரச் சாத்தியமாயிற்று என்று சொல்லி விட்டுக் கிளம்பினார். இத்தகைய பெருந்தன்மை இல்லாமல் போனாலும் குறுகிய பார்வைகளை விலக்கிவிட்டு அவற்றைச் சற்றேனும் அகலப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாம் கேலி செய்யப்படும் போதும் விமர்சிக்கப்படும் போதும் நாமும் மற்றவர்களுடன் சேர்ந்து இரசித்தோமானால் அதைப் பார்ப்பவர்களுக்கு நம்முடைய குறைபாடுகளும் பெரிதாகத் தெரியாது. மாறாக இந்த விமர்சனங்களும் கேலிகளும் மிகைப்படுத்தப்பட்டவை என்று மட்டுமே எண்ணுவார்கள். ஆனால் அந்த இடத்தைவிட்டு எழுந்து போய்விட்டோமானால் அல்லது ரொம்பவும் மனமுடைந்து போய்விட்டதைக் காண்பித்துக் கொண்டோமானால் அல்லது நாமும் பதிலுக்குக் குதித்தோமானால் , ஓகோ ! இவர்கள் சொல்வது எல்லாமே உண்மை தான் போலிருக்கிறது என்று அனைவரும் நம்பத் தொடங்கிவிடுவார்கள். மற்றவர்கள் சொல்வதையெல்லாம் குற்றமாக எடுத்துக் கொள்வதானது உள்ளுக்குள் இருக்கிற மனக்குறைபாட்டை மனத்தின் பக்குவமற்ற நிலையையே காண்பிக்கிறது. ஆகா, நமக்கு வேண்டாதவர்கள் வெளியில் இல்லை. இதயத்தில்த்தான் வேண்டாத சமாச்சாரங்கள் இருக்கின்றன என்பது தெரிகிறது.

அர்த்தம் கண்டுபிடிச்சு ஆரம்பித்தால் எல்லாவற்றுக்குமே இரண்டு அர்த்தம் உண்டு தான். இது பொதுவாகச் சொல்லப்பட்டது நம்மை நோக்கி அல்ல. அப்படிப் பேசுவது அவர்கள் சுபாவம். அதை நாம் பொருட்படுத்தக்கூடாது. அவர்கள் சொன்ன குறை நம்மிடத்தில் உண்மையில் உள்ளதா? அப்படிச் சொல்ல நாம் ஏன் இடந்தந்தோம்? என்றெல்லாம் சிந்திக்க ஆரம்பித்தால் இந்த மனக்குறை நாளடைவில் போய்விடும்.

எல்லோரும் நம்மைப் பாராட்டியபடி இருக்க வேண்டும் என நாம் எதிர்பார்த்தால் நாம் அதல பாதாளத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம் என்று அர்த்தம். பயங்கரமான தோல் வியாதியைப் பவுடர் பூசி மறைப்பதைப் போன்ற செயல் இது.

எல்லோரும் நம்மைப் பாராட்ட நாம் என்ன சன்மானமா கொடுத்து வைத்திருக்கிறோம்? அல்லது தேவலோகத்தில் இருந்து இறங்கி வந்திருக்கிறோமா?

**லேனா தமிழ்வாணன்**




# சிறுவர் அரங்கம்

## பறக்க ஆசைப்பட்ட செடியன்

ஒரு கிராமத்துல செடியன்னு ஒரு பையன் இருந்தான். அவன் செடி உயரம்தான் வளர்ந்திருந்தான். அதனால் அவனுக்கு அந்தப் பெயர். செடியனுக்கு பறவைகள் போல பறக்க ஆசை.

'ஆனா நாம மற்றவர்கள் மாதிரி சராசரி உயரம் இல்லையே. நம்மால பறக்க முடியுமான்னு' ஒரு சந்தேகம்.

சிட்டுக் குருவிக்கிட்ட தன்னோட சந்தேகத்தை கேட்டான் செடியன்.

"செடியா! நான் உன்னை விட உருவத்தில் ரொம்பச் சிறியவன். ஆனால், என்னாலயே பறக்க முடியும்போது, உன்னால பறக்க முடியாதா என்ன?" எனத் தன்னம்பிக்கையை செடியன் மனசுல வளர்த்துச்சு.

"ஆமாம், ஆமாம், என்னால பறக்க முடியும்" என்று சொல்லிக் கொண்டே ஆற்றுப் பக்கம் வந்தான் செடியன். அங்கு நாரைகள் மீன்களைப் பிடிச்சு சாப்பிட்டுக் கொண்டே இருந்தன.

செடியன் ஒரு நாரையின் அருகே சென்றான் "பறவையே எனக்கு ஒரு உதவி செய்வாயா?" எனக் கேட்டான்.

"என்ன உதவி?" எனக் கேட்டது நாரை.

"உன்னோட இறக்கையில் இருந்து ஒரே ஒரு இறகைத் தரியா. நான் பறக்கணும்னு" கேட்டான்.

அந்த நாரையும் ஒரு இறகைத் தந்தது.

மகிழ்ச்சியோடு வாங்கி தனது பாக்கெட்டில் வைத்துக் கொண்டான். இதுபோல பல நாரைகளிடம் இருந்து ஒவ்வொரு இற்காக வாங்கி சேகரித்துக் கொண்டான்.



அங்கிருந்து மகிழ்ச்சியோட கிளம்பி, கோயில் அருகே வந்தான். அங்கே பூ விற்றுக் கொண்டிருந்த ஒரு பாட்டியிடம் பேசினான்.

"பாட்டி.. பாட்டி.. இந்த இறகுகளை பறவை இறகுகள் மாதிரி கட்டிக் கொண்டு பறக்கப் போகிறேன். எனக்கு இறகுகளை கட்டிக் கொடுக்க முடியுமா?" என்று கேட்டான் செடியன்.

"நான் கட்டிக் கொடுத்தால் எனக்கு நீ என்ன தருவ?" என்று கேட்டார் பாட்டி.

"நான் பறந்து போய் மலைக்கு அந்தப் பக்கம் இருக்கிற பூக்களைப் பறித்து வந்து கொடுக் கிறேன்னு" சொன்னான் செடியன்.

பாட்டியும் இறகுகளை வைத்து கட்டிக் கொடுத்தார். அதை உடம்பில் கட்டிக்கொண்டு மலை உச்சிக்குப் போனான். அங்கிருந்து பறக்க முயற்சி செய்தான்.

ஆனால் செடியனால் பறக்க முடியலை.

பறவை இறகுகளைக் கட்டினால் மட்டும் நம்மால் பறந்துவிட முடியுமா என்ன? எவ்வளவோ முயற்சி செய்தான். அவனால் பறக்க முடியவில்லை. தோல்வி அடைந்த அவன் கோபத்தில் உடம்பில் கட்டியிருந்த இறகுகளைக் கழற்றி வீசினான்.

அது மலையின் கீழே ஓடிக் கொண்டிருந்த நதியில போய் விழுந்தது. நீரினால் வேகமாக அடித்துச் செல்லப்பட்ட அந்த இறகுகள் அந்தக் கரையில் குளித்துக்கொண்டிருந்த காட்டு இளவரசியின் கால்களைச் சுற்றிக் கொண்டது.

இளவரசி அதனைக் கையில் எடுத்தாள். இவ்வளவு இறகுகளுடன் யார் இதை இங்கே அனுப்பியது என்று தெரிந்துக் கொள்ள ஆர்வம் ஏற்பட்டது.

தனது சேவகர்களோ்டு அந்த மலைமீது ஏறிவந்தாள் இளவரசி. அங்கே செடியன் ஒரு மரத்தைக் கட்டிக்கொண்டு அழுது கொண்டிருந்தான்.

சேவகர்களோடு வந்த இளவரசி, "யார் நீ? ஏன் அழுகிறாய்?" என்று கேட்டாள். செடியன், தனது கதையைச் சொன்னான். இளவரசி சிரித்தாள்.

"நாமெல்லாம் மனிதர்கள். நம்மால் பறக்க முடியாது. ஆனால், சாதனை செய்ய முடியும். உன்னைப் பார்த்ததும் எனக்குப் பிடித்து விட்டது. நகைச்சுவை யாகவும் பேசுகிறாய். அதனால உன்னை அரண்மனையில் நகைச்சுவை மன்றத்தின் தலைவனாக நியமிக்க ராஜா கிட்ட சொல்றேன்" என்றாள்.

இதைக் கேட்டதும் செடியனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. அன்று முதல் அவன் வாழ்வில் வசந்தம் வீச ஆரம்பித்தது. கிடைத்த சம்பளத்தில் தனக்கு உதவிய அத்தனை பறவைகளுக்கும் தானியங்களை வாங்கி வந்து கொடுத்தான்.

பறவைகளும் சந்தோஷத்தில் செடியனை வாழ்த்தின..




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1773 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் தேயிலைக் கப்பல் மேரிலாந்தில் எரிக்கப்பட்டது.
- 1888 - Roundhay Garden Scene என்ற முதலாவது அசையும் படத்தை லூயி லெ பிரின்ஸ் தயாரித்தார்.
- 1903 - யாழ்ப்பாணத்தின் SS Jaffna என்ற பயணிகள் கப்பல் நெடுந்தீவுக்கு பயணித்தது.
- 1912 - முன்னாள் அமெரிக்க அதிபர் தியொடோர் ரோசவெல்ட் விஸ்கொன்சின் மாநிலத்தின் மில்வாக்கி நகரில் வைத்து சுடப்பட்டார்.
- 1913 - ஐக்கிய இராச்சியத்தில் இடம்பெற்ற நிலக்கரிச் சுரங்க விபத்தில் 439 பேர் கொல்லப்பட்டனர்.
- 1926 - சிறுவர் நூல் வின்னீ-த-பூ (Winnie-the-Pooh) வெளியிடப்பட்டது.
- 1933 - நாசி ஜேர்மனி தேசங்களின் அணியில் இருந்து விலகியது.
- 1948 - இலங்கையின் முதலாவது நாடாளு மன்றம் கூடியது.
- 1956 - இந்தியத் தலித் தலைவர் அம்பேத்கர் தனது 385,000 ஆதரவாளர்களுடன் பௌத்தத்திற்கு மதம் மாறினார்.
- 1962 - கியூபாவுக்கு மேல் பறந்த அமெரிக்க யு-2 விமானம் சோவியத் அணு ஆயுதங்களைப் படம் பிடித்தது.
- 1964 - ஐக்கிய அமெரிக்காவின் மனித உரிமைப் போராளி மார்ட்டின் லூதர் கிங் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார்.
- 1968 - விண்ணிலிருந்தான முதலாவது நேரடி தொலைக்காட்சி அஞ்சல் அப்போலோ 7 விண்கலத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டது.

### பிறப்புகள்

- 1643 - முதலாம் பகதூர் ஷா, இந்தியாவின் முகலாய மன்னன். (இ. 1712)
- 1873 - ஜூல்ஸ் ரிமெட், பிரெஞ்சுத் தொழிலதிபர். (இ. 1954)
- 1882 - சார்லி பார்க்கர், ஆங்கிலேயத் துடுப்பாளர். (இ. 1959)
- 1884 - சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா, இலங்கையில் இலவசக் கல்வியை அறிமுகப்படுத்தியவர், சட்டத்தரணி. (இ. 1969)
- 1890 - டுவைட் டி. ஐசனாவர், ஐக்கிய அமெரிக்காவின் 34ஆவது குடியரசுத் தலைவர். (இ. 1969)
- 1900 - வி எட்வர்ட். டெமிங், அமெரிக்க எழுத்தாளர். (இ. 1993)
- 1930 - மொபுட்டு செசெ செக்கோ, சயீர் நாட்டின் குடியரசுத் தலைவர். (இ. 1997)
- 1942 - சிவசங்கரி, தமிழக எழுத்தாளர்.
- 1976 - திலகரத்ன டில்சான், இலங்கைத் துடுப்பாளர்.
- 1977 - சயீத் அஜ்மல், பாக்கித்தானியத் துடுப்பாளர்.
- 1978 - அஷர் ரேமண்ட், அமெரிக்கப் பாடகர், நடிகர்.
- 1981 - கவுதம் கம்பீர், இந்தியத் துடுப்பாளர்.
- 1990 - ஜோர்டன் கிளார்க், ஆங்கிலேயத் துடுப்பாளர்.

### இறப்புகள்

- 1803 - அய்மே ஆர்கண்ட், சுவிட்சர்லாந்து இயற்பியலாளர். (பி. 1750)
- 1944 - இர்வின் ரோமெல், செருமானிய இராணுவத் தளபதி. (பி. 1891)
- 1977 - பிங் கிராசுபி, அமெரிக்க நடிகர். (பி. 1903)
- 1981 - கே. பி. ஹரன், தமிழ்ப் பத்திரிகையாளர். (பி. 1906)
- 2005 - சுந்தர ராமசாமி, தமிழ் எழுத்தாளர். (பி. 1931)
- 2009 - சி. பி. முத்தம்மா, இந்தியப் பெண் சாதனையாளர். (பி. 1924)
- 2014 - காவலூர் ராஜதுரை, ஈழத்து எழுத்தாளர். (பி. 1931)

### சிறப்பு நாள்

- உலகத் தர நிர்ணய நாள்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 | 70 | 50 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 85 | 100 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 100 | 70 | 70 | 100 | 120 | 100 |
| தக்காளி | 80 | 100 | 65 | 80 | 100 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 60 | 80 | 60 | 70 |
| கோவா | 80 | 100 | 70 | 80 | 120 | 80 | 80 |
| கரட் | 60 | 100 | 90 | 100 | 140 | 140 | 80 |
| பூசணி | 30 | 20 | 20 | 40 | 40 | 40 | 30 |
| [illegible] | 60 | 60 | 30 | 60 | 60 | 80 | 40 |
| வாழைக்காய் | 80 | 60 | 40 | 50 | 70 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 100 | 100 | 100 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 65 | 80 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 120 | 200 | 100 | 160 | 140 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 | 80 | 120 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 150 | 90 | 100 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 100 | 100 | 50 | 100 | 100 | 80 | 100 |
| லீக்ஸ் | 140 | 200 | 90 | 100 | 170 | 150 | 120 |
| பீற்றூட் | 50 | 50 | 40 | 40 | 60 | 80 | 50 |
| கறிமிளகாய் | 100 | 140 | 100 | 120 | 140 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 80 | 140 | 90 | 100 | 120 | 100 | 120 |
| போஞ்சி | 180 | 250 | 150 | 150 | 200 | 200 | 200 |
| கத்தரித்தம்புள்ளை | 40 | 30 | 30 | 50 | 50 | 50 | 50 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 25 | 30 | 50 | 40 | [illegible] |
| தேசிக்காய் | 500 | 600 | 500 | 400-500 | 600 | 600 | 500 |
| தேங்காய்(ஒன்று) | 40 | 50 | 15-35 | 40 | 350 | 30-40 | 40 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — | 110 |
| வெங்காயப்பூ | 150 | — | — | — | — | 160 | 180 |
| முள்ளங்கி | 80 | — | 30 | 40 | 60 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 30 | 40 | 40 | 20 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | — | 50 | — | — | — | — | — |

# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம்

2016 ஆம் ஆண்டிற்கான தரம்- 5 புலமை ப்பரிசில் பரீட்சையில் சித்திய டைந்த மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**யாழ்.சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க பாடசாலை**

சு.ரகுராம்-162.

**யாழ்.இடைக்காட்டு மகா வித்தியாலயம்**

க.கோகுல் -173, அ.லோஜனா-169,க.சாரங்கன்-164, சி.ஹரணி-161,கு.மதுமிதா-160,சி.சானுகா -160 பி.ஜஸ்மிகா-154, ய.ராகவன் -153

**யாழ். மணற்காடு றோ.க.த.க. பாடசாலை-குடத்தனை**

ம.மரியடினுக்சன்-158, யோ.சரண்தாஸ்-156

**யாழ்.மயிலிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை**

து. பிரணவன் -152.

**யா/ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை**

ஞா.ஜெத்ரோஜெசி-170, நி.துர்சிகா -168,த.தக்ஷா -167,ர.டனுசன் -163,சு.பவிசாளினி-161,ந.அலெக்ஸ்-158, ம.சரண்யா-158

**யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்**

கி.லி.வி.ப. டில்சாந் பற்றிக் 191, ம.ஏகாச்சரி -188 , அ.மெல்ஷா -188 , ர.பரத் -187,ர.திலக்ஷான்-187,சி.கொஜுசனன்-186, க.வித்தகன் -187,ஜெ.கேதுஷாந்-185, ஹ.ஜெகப்பிரியன் -184 ,சி.மிஷாலி -183,கே. சங்கவி-183,டெ.துஷாரி-182 ,வ.திஷானா-182, டு. டுஷிக்கா -182 ,கி.கிறிஸ்ரினா அனுஜிற்றா -181,ம.வாசனா -180, ஆ.நிவேதன் -180, பி.டிவேஷ் -179, வ.தேனுஹர்ஷன் -179 ,கி. கபிஷாந் -179 ,சு.நிவேதிதா -179,ப. தருணிகா- 178, சி.ராகுலன் -178, நி.அபிஷரோன்-178,ர.பஷ்மித்திரன்-177, கே.பிறென்ஜா-177, இ.திலக்சி -177, இ. சங்கவி -177,சி. மருதபரணி -176, வ. பிரகோபன் -176, சி. வர்ஷினி-176 ,ல.லக்ஷனா -176,தி.சுவேதிகா -176, ப.அஞ்சனா -176, செ.அட்சயன்-176, ஹ.அய்ங்ஹரன் -175, ஜெ.சுமித்-175,ஜெ. அபிசன் -175,அ.அக்ஷெயா -175,ச. புதியவன் -175, கி.ஹரிஸ்ணவி-174, சி.மானசிகா -174, ம.மேதினிகா-174,ஜெ. சதுர்னா -174,றெ. சானுஜன் -173, சோ. தனுஷிகன் -173 ,வி. அபிஷேக்-173, கோ. யதுவர்ஷி-173,பி.மதிஷன்-173, இ.கரிஸ்ணன்-173, வை. அபிஷாயினி-173,பி. சப்தவி- 172, அகேபிசன் -172, யூ.நாகினி -172,இ.சங்கவி -171, பி. சதுர்னா-171,சி. வைஷ்ணவி-171 கு.பவிசன்-170,சா. அபிஷாந் -170,நா. சுபகோபிகன்-170, செ.விஷ் வாதிகா-170, ஶ்ரீ. ஶ்ரீசுவிஜா-170, இ.ஜெனிஸ்ரன்-170, ச.சர்வேஸ்ராம்-170, ஜெ.தேனுஜா-170, கி.லி.வி.ப. கிருஷாந் பற்றிக் -169, கி. திவ்யன் -169,யூ.ஜெருண் பிறின்ரன்-169, வ.ஹெர்சல் ஷரோன் -169,யோ. அபிசனா-168,த.மோகன மயூரி-168,மோ.ருக்சிகா -168, ர.அபிசாந்-168, மொ.வேஜின் சாருகா-167, த. இந்துஜன்-167,ஜ.திவாகினி-167, த.ஆகாஷ்-167, அ.கம்சவர்த்தனி -167,ப. ஆராதனா-167,ம.கேசுரன்-166, ம.அனிஸ்ரன்-166, ச.சத்தியஜனனி -166,த.சுமிக்ஷா-166, ரா.அபிணயன் -166,ஶ்ரீ.திவ்ஜனன்-166,ம.அபிவர்ஷினி-166, செ.ஆரபி-166, கி.அடம்க பிரியோ-165,ம.அரன்-165, ம.கிதுர்ஷன்-165, கி. சோபிகா -165,மோ.பிரகஷ்வினி-165, க.டிரோஜன்-165, கே. காவேரி -165,ரோ.தர்ணியா-164, நி.நிலானி-164, ஜெ.அக்கிஷன்-164,அ.தரணிகா-164, வி.சுவீற்றனா-164, ஶ்ரீ.கஸ்மிலா-164,ஜெ.கஜானன்-164,செ. அஸ்மிதா-164, ல.கோதையழகி-163, ச.அர்ஜயன்-163,இ. அக்ஷயன் -163,இ.விஜோஜன்-163,ந.பிரியங்கா-163,ச. அதிசயா -163,தே.கஜவர்த்தனன்-163, பி.அபிசனா-163, ற.ஆதித்தன்-163, ப.தாரகன்-162, க.அபிநயா-162,ஞா.வைஷ்ணவி -162,ச.சிவானுஜா-162, அ.செரோமியா-162, அ.ஆதித்யா-162, ச.அம்சனா-161, அ.அல்றின் றொஷ்னி-161, த.ஸ்யாமிளி-161,பா.கிருஷானி-160, ப.லக்ஷானி-160,பி.ஜெய்சன்டிவறயல்-160,உ.சுரோஷன்-160, ச.ஜானுசா-160, றீ.இனவென் ஜஸ்மின்-160, நா.கேசவர்த்தனி-159,கு.பிரவீனா-159,பி.நிருஷ்ரிகா-159, ச.கருணிகா-159,ச.சசிந்த-159, கே.ஷதுசன்-159, சி.யோகிதன்-158,அ.கோபினி-158, செ.வைஷாலி-158, இ.பானுஷிகா-158,தி.காருண்யன்-158,ம.ஹரினி-158, மா.மாரக் பிரவீன்-158,ச.நிருஜா-157, சு.சுபர்ணன்-157,இ.நிஜிதா-157,கி.பெலிக்ஸ் கொணஸ்ரா -157,ப.தரணிகன்-157,ஜோ.அனந்திகா-157,றொ.விஜோஜன்-157,சி.டக்சிகா-156, யோ.சிவகாமி-156,வி.விதுஜனன்-156,ஶ்ரீ.ஶ்ரீசந்தோஷிகன்-156,ச.ஹரிசன்-156, ச.மதுமிதா-156,சு.ஹரோசான்-155, பா.சுபேசுர்மா-155,செ.அனற்ஷவோலின்-155, சு.சிவஸ்திகா-154,ஜெ.அஸ்வினி-154, ச.துஷிதா-154,ஜெ.திஷாரகி-153,உ.கேதுஜா-153, சி.பவிநயனி-153,ர.நிதுசன்-153, ர.கஜனிகா-153,க.பூஜிதா-153,அ.பொறின்ரா-152,சி.சிவனயா-152,க.அம்பிகா-152, செ.விசாலன்-152,யோ.ஆன்.ஜெரால்ரின்-152.

# புத்தளத்தில் இன்று பாரிய மக்கள் எதிர்ப்புப் பேரணி

(கொழும்பு)

கொழும்பில் இருந்து கொண்டு வரப்படுகின்ற குப்பைகளை புத்தளம் அருவக்காட்டு பிரதேசத்தில் கொட்டுமதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பாரிய செயற்றிட்டத்தினை எதிர்க்கும் முகமாக இன்று புத்தளத்தில் பாரிய எதிர்ப்புப்பேரணியொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டம் இன்றையதினம் ஜும்மாத் தொழுகையினை அடுத்து புத்தளம் நகர பிரதான பேருந்து தரிப்பிடத்தில் இடம் பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இந்த எதிர்ப்பு பேரணியை புத்தளத்திலுள்ள அனைத்து மத அமைப்புக்கள் மற்றும் புத்தளம் வாழ் இளைஞர் அமைப்புகள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# இலங்.முன்னாள் நீதியரசர் பிஜி நாட்டின் உயர்நீதிமன்ற நீதியரசராக நியமனம்

(கொழும்பு)



இலங்கை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் ஒருவர் பிஜி நாட்டின் உயர் நீதிமன்ற நீதியரசராக பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

அந்நாட்டின் இடைக்கால ஜனாதிபதி மற்றும் பிரதம நீதவான் ஆகியோர் முன்னிலையில், நீதிபதி கே.ரி. சித்ரசிறி பதவியேற்றுக் கொணடாக த பிஜி டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

பிஜி நாட்டின் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக கடந்த 2009ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரையும் அவர் பணியாற்றி இருந்தார்.

கடந்த 1975ஆம் ஆண்டு சட்டத்துறையில் பட்டம் பெற்ற கே.ரி.சித்ரசிறி கடந்த 1980 ஆம் ஆண்டு முதல் 1991ஆம் ஆண்டு வரை நீதவான் நீதிமன்ற நீதிபதியாகவும் பதவி வகித்தார்.


பின்னர் 1991ஆம் ஆண்டு முதல் 1993ஆம் ஆண்டு வரை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராகவும் கே.ரி.சித்ரசிறி கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 868

விஜா





தர்சி




குட்டிமணி



சந்துரு




கனகசபாபதி




நந்து






நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சிரியாவில் போர் நிறுத்தத்தை உடன் அமுல்படுத்த வேண்டும்

## போப்.பிரான்சிஸ் வலியுறுத்து

**சிரியாவில் இடம் பெற்றுவரும் போரை உடன் தடுத்து நிறுத்த போர் நிறுத்த ஒப்பந்தத்தை அமுல்படுத்த வேண்டும் என போப்.பிரான்சிஸ் வலியுறுத்தியுள்ளார்.**





சிரியாவில் 5 ஆண்டுகளாக நடைபெறும் உள்நாட்டுப் போரை முடிவு கொண்டு வருவதற்கு அண்மையில் ஒப்பந்தம் ஏற்பட்டது. ஐ.நாவின் தீவிர முயற்சியின் பலனாக இந்த ஒப்பந்தத்தில் அமெரிக்காவும் ரஷ்யாவும் கையெழுத்திட்டன. ஆனால், சில நாட்கள் மட்டுமே இந்த ஒப்பந்தம் நடைமுறையில் இருந்தது. அதன்பின்னர் ஒப்பந்தத்தை மீறி இரு தரப்பு படைகளும் தாக்குதல் நடத்தத் தொடங்கின. இந்நிலையில், சிரியா அரசுக்கு ஆதரவாக செயற்படும் ரஷ்யா, கிளர்ச்சியாளர்கள்பிடியில் இருக்கும் அலெப்போ நகரம் மீது தொடர்ந்து குண்டு வீசி தாக்குதல் நடத்தி வருகிறது. அண்மையில் நடந்த குண்டு வீச்சில் சுமார் 150 பேர் பலியாகினர். நேற்று முன்தினம் நடந்த குண்டுவீச்சில் 5 பேர் உயிரிழந்தனர்.

அவர்களில் குழந்தைகளும் அடங்குவர். ஏராளமான பொதுமக்கள் பலியாவதால் மனித உரிமை அமைப்புக்களும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இந்த பதற்றமான சூழ்நிலையில் சிரியாவில் உடனடியாக போர் நிறுத்தத்தை அமுல்படுத்தவேண்டும் என போப். பிரான்சிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார். வாடிகனின் பீற்றர் சதுக்கத்தில் நடந்த வாராந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் போப். பிரான்சிஸ் பேசுகையில், சிரியாவில் மனிதாபிமானமற்ற முறையில் நடக்கும் மோதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எனது ஆறுதலை தெரிவிக்க விரும்புகிறேன்.

அத்துடன் உடனடியாக போரை நிறுத்த வேண்டும். விமான குண்டுவீச்சில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிக்கித் தவிக்கும் குழந்தைகள் உள்ளிட்ட பொதுமக்களை வெளியேற்றும் வரையிலாவது போர்நிறுத்தத்தை அமுல்படுத்த வேண்டும்" என அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

## ஆலோசகர் ஆங் சான் சூகி இந்தியாவிற்கு சுற்றுப்பயணம்



(நேபிடா)

மியன்மார் அரசின் சிறப்பு ஆலோசகர் ஆங் சான் சூகி, எதிர்வரும் 17ஆம் திகதி முதல் மூன்று நாட்கள் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

மியன்மார் அரசின் சிறப்பு ஆலோசகரும் வெளியுறவுத்துறை அமைச்சருமான ஆங் சான் சூகி, மோடியின் அழைப்பை ஏற்று எதிர்வரும் 17ஆம்திகதி முதல் 19ஆம் திகதி வரை இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். ஆங் சான் சூகியுடன் முக்கிய துறைகளின் அமைச்சர்கள், மூத்த அதிகாரிகளும் வருகின்றனர்.

இந்த சுற்றுப்பயணத்தில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, பிரதமர் நரேந்திர மோடி, வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஆகியோரை சந்தித்து பேசவுள்ளார். அத்தோடு இரு தரப்பு பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் வழிகள் தொடர்பாக இந்திய தொழிலதிபர்களிடையே கலந்துரையாடவுள்ளார்.

ஆங்சான் சூகியின் இந்தப் பயணம், இரு நாடுகளுக்கிடையே உள்ள உறவை மேலும் வலுப்படுத்த வாய்ப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த மாதம் 14ஆவது இந்திய-ஆசியான் மாநாட்டில் பங்கேற்க சென்ற இந்தியப் பிரதமர் மோடி, ஆங் சான் சூகியை சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கேரளாவில் முழு அடைப்புப் போராட்டம் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(திருவனந்தபுரம்)

கேரளா மாநிலம் திருவனந்தபுரத்தில் பா.ஜ.க. தொண்டர் ரெமித் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நேற்று முழு அடைப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை இந்தப் போராட்டம் இடம்பெற்றது.


கன்னூர் மாவட்டத்தில் பா.ஜ.க. தொண்டர் ரெமித் என்பவர் நேற்று முன்தினம் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.

முதல்வர் பிரனாய் விஜயனின் சொந்த ஊரில் நடைபெற்ற இக்கொலையைக் கண்டித்து முழு அடைப்புப் போராட்டத்துக்கு பா.ஜ.க. அழைப்பு விடுத்திருந்தது. அதன்படி கேரளாவில் பெரும்பாலான ஊர்களில் கடைகள் அடைக்கப்பட்டதோடு தலைநகர் திருவனந்தபுரத்தில் பேருந்துகளும் இயங்கவில்லை. இதனால் ரயிலில் வந்திறங்கிய பயணிகள் சொந்த இடங்களுக்கு செல்ல சிரமப்பட்டனர்.

பொலிஸார் அவர்களை பொலிஸ் வாகனங்களில் ஏற்றி இருப்பிடங்களுக்கு அனுப்பி வைத்தனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்து திருவனந்தபுரம் செல்லும் பேருந்துகள் எல்லை வரை இயக்கப்பட்டதால் கூலி தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

இதேபோன்று கோவையில் இருந்து கேரளாவிற்கு வழக்கம் போல செல்லும் பேருந்துகளும் இயக்கப்படவில்லை.




கேரளாவில் கடை அடைப்புப் போராட்டம் என்பதை அறியாமல் உக்கடம் பேருந்து நிலையத்திற்கு வந்த பயணிகள் சொந்த ஊருக்கு செல்ல முடியாமல் ஏமாற்றம் அடைந்தனர்.

கேரளாவிற்கு பேருந்துகள் இயக்கப்படாததால் திருவனந்தபுரம் செல்லும் பயணிகள் ரயிலில் கூட்டம் அதிகமாக காணப்பட்டது.

காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை இந்தப் போராட்டம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஆசியாவில் இந்தியாவின் ஆதிக்கத்தை தடுக்க சீனா, ஈரான் ஆதரவுடன் புதிய அமைப்பு




### பாகிஸ்தான் கடும் முயற்சி

"சார்க்" அமைப்பில் இந்தியாவின் ஆதிக்கத்தை தடுக்க பாகிஸ்தான் முயற்சி மேற்கொண்டுள்ளது. இதற்காக சீனா, ஈரான் நாடுகளின் ஆதரவை பாகிஸ்தான் நாடியுள்ளது.

கடந்தமாதம் 18ஆம் திகதி பாகிஸ்தானின் ஆதரவு பயங்கரவாதிகள் காஷ்மீர் மாநிலம் ஊரி இராணுவ முகாமில் புகுந்து தாக்குதல் நடத்தினர். இதில் 19 இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

பயங்கரவாதத்தை வெளிப்படையாக ஆதரிக்கும் பாகிஸ்தானை தனிமைப்படுத்தும் முயற்சியாக அடுத்த மாதம் இஸ்லாமாபாத் நகரில் நடக்கவிருந்த சார்க் மாநாட்டை இந்தியா புறக்கணிப்பதாக அறிவித்தது. இதையடுத்து இதே காரணங்களுக்காக ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான் ஆகியவையும் இந்த மாநாட்டை புறக்கணித்தன.

இதனால் 2016ஆம் ஆண்டுக்கான சார்க் மாநாட்டை நடத்தும் தலைமைப் பொறுப்பை பெற்றிருந்த நேபாளம், மாநாட்டை இரத்து செய்வதாக அறிவித்தது. இது சர்வதேச அரங்கில் பாகிஸ்தானுக்கு பெரும் தலைகுனிவை ஏற்படுத்தி விட்டது.

இதனால் தெற்காசியாவில் இந்தியாவின் ஆதிக்கத்தை முறியடிப்பதற்காக சீனாவின் தலைமையில் ஈரான் உள்ளிட்ட நாடுகளை இணைத்து சார்க் அமைப்பை விட பெரியதொரு அமைப்பை உருவாக்கிட பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது.

அண்மையில் வோஷிங்டன் சென்ற பாகிஸ்தான் எம்.பி. முசாஹித் ஹூசேன் சையத் அங்கு நிருபர்களிடம், தெற்காசிய நாடுகளின் மிகப்பெரிய அமைப்பு ஏற்கனவே உருவாகிவிட்டதாகவும், இது சீனா, ஈரான், பாகிஸ்தான் மற்றும் மத்திய ஆசிய குடியரசு நாடுகள் அடங்கியதாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

இந்தத் தகவலை பாகிஸ்தான் உயர் அதிகாரி ஒருவரும் உறுதி செய்தார். எனினும் இந்த அமைப்பு அதிகாரப்பூர்வமாக உருவாக்கப்பட்டு விட்டதா? என்பது குறித்து எந்த தகவலும் இல்லை.

சீனா-பாகிஸ்தான் இடையே பல ஆயிரம் கிலோமீற்றர் தூர அளவிற்கு பொருளாதார வழிச்சாலை அமைக்கப்பட்டு உள்ளது. இந்த சாலையை மத்திய ஆசிய குடியரசு நாடுகளும் பயன்படுத்தி வருகின்றன. எனவே, இந்த நாடுகளின் ஆதரவையும் திரட்டி மிகப்பெரிய அமைப்பை உருவாக்கினால் தெற்காசியாவில் இந்தியா ஆதிக்கத்தை தடுக்க முடியும் என்று பாகிஸ்தான் நம்புகிறது. (இ-7)

# சைவ சமய அறிவுப் பரீட்சைத் தினங்களில் மாற்றம்

வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்சைவசமய அபிவிருத்திக்கழகத்தின்சைவசமய அறிவுப் பரீட்சை, செயல்முறைப் போட்டி ஆகியவற்றை நடத்தும் தினங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் தரம் 3 தொடக்கம் தரம் 11 வரையிலான மாணவர்களுக்கானசைவசமய அறிவுப்பரீட்சை எதிர்வரும் 23 ஆம்திகதி 20 பரீட்சைநிலையங்களிலும் கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல்ஆகியசெயல்முறைப் போட்டிகள் யாழ். இந்துக் கல்லூரியில் எதிர்வரும் 30 ஆம் திகதியும் தரம் - 1,2 மாணவர்களுக்கு நீதிநூல் மனனப் போட்டி திட்டமிட்டபடி எதிர்வரும் 20 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறுமென சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் பரீட்சை செயலர் சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (இ)



நல்லைக்கந்தன் பெருந்திருவிழாவை முன்னிட்டு, நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் இந்த வருடம் நடைபெற்ற வில்லிபாரத தொடர்இசைப் பேருரையின் பூர்த்தி விழாவின் போது ஆர்மோனிய வித்துவான் கண்ணனின் இசைப் பணியைப் பாராட்டி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா பொன்னாடை போர்த்தி சுபஸ்வர ஞானபூஷணம் என்ற விருது வழங்கிக் கௌரவித்த போது ...

# படையினரின் மூலிகைப் பண்ணை அமைக்கும் திட்டம் யாழில் ஆரம்பம்





(யாழ்ப்பாணம்)

இலங்கை இராணுவத்தின் 67 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ் பாதுகாப்பு படைத்தலைமையகத்தில் மூலிகை பண்ணை அமைக்கும் திட்டம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது.

உயர்பாதுகாப்பு வலயத்துக்குட்பட்ட பலாலி வயாவிளான் பகுதியில் உள்ள ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் குறித்த மூலிகை பண்ணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு மூலிகை இனங்களை பாதுகாக்கும் நோக்குடனும் பொது மக்களுக்கு மூலிகை இனங்களை வழங்கும் நோக்குடனும் இப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆயுர்வேத மருத்துவர்களின் கருத்துக்களை உள்ளடக்கி கல்வி நோக்கத்துடன் இந்த திட்டம் செயற்படுத்தப்படும் எனவும் பாதுகாப்பு படையினர் குறித்த பண்ணையை பராமரிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆரம்ப நிகழ்வில் ஆயுர்வேத போதனா வைத்தியசாலை வைத்தியர் திருமதி பிரேமா சிவசண்முகராஜா, உள்ளூராட்சிஆயுர்வேத மருத்துவர்கள், வட மாகாண ஆயுர்வேத மருத்துவர்கள், ஆயுர்வேத போதனா வைத்தியசாலை மருத்துவர்கள், பாதுகாப்பு படைத்தலைமையக கட்டளைத் தளபதிகள், கட்டளை அதிகாரிகள், பாதுகாப்பு படையினர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

# புதிய பேருந்துச் சேவை ஆரம்பம்

எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் தொண்டைமானாறு - பருத்தித்துறை - திருகோணமலை - மூதூர் வரை பேருந்துச் சேவை ஆரம்பமாகவுள்ளது.

காலை 9.30 மணிக்கு தொண்டைமானாறில் இருந்து புறப்பட்டு பருத்தித்துறை வந்து முற்பகல் 10.30 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து புறப்பட்டு வவுனியா ஊடாக திருகோணமலை சென்று மூதூர் வரை சேவை நடைபெறும்.

இதேபோல் மூதூரில் இருந்து காலை 7 மணிக்கு புறப்பட்டு திருகோணமலையில் இருந்து முற்பகல் 10.30 மணிக்கு புறப்பட்டு பருத்தித்துறை வந்தடையும்.

மேலும் இதுவரை 11 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து வவுனியா செல்லும் பேருந்து 17.10.2016 முதல் 11.30 மணிக்கு புறப்படும்.

பேருந்துக்கான ஆசனப் பதிவுகளை பருத்தித்துறைச் சாலையில் மேற்கொள்ளலாம் என இ.போ.ச. (வடக்கு) பருத்தித்துறைச் சாலை முகாமையாளர் க.கந்தசாமி அறிவித்துள்ளார். (இ)

# வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த் திருவிழா இன்று


வடமராட்சி துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலயத் தேர்த் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறுவதை முன்னிட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தேர்த்திருவிழாவிற்கு பெருமளவு பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதனால் ஆலயத்தின் உள்வீதி, வெளிவீதி மற்றும் ஆலயத்திற்கு செல்லும் வீதிகளில் பொலிஸார் சீருடையிலும் சிவிலுடையிலும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் ஆலய சுற்றுப்புறங்களில் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதுடன் ஆலய சூழலில் பொலிஸ் பணிமனை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் யாழ்ப்பாணம், பருத்தித்துறையில் இருந்து மந்திகை ஊடாக கோவிலுக்கும் அதேபோல் பருத்தித்துறையில் இருந்து தும்பளை ஊடாக கோவிலுக்கும் போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக இ.போ. சபையினர் தெரிவித்தனர். இதேவேளை தனியார் போக்குவரத்து சபையினரும் சேவையில் ஈடுபடவுள்ளனர். (இ-60)

# சூரிய ஒளியில் பனாட்டு உலர்த்தும் நவீன பொறி யாழில் அறிமுகம்

பனங்களியிலிருந்து பெறப்படும் பனாட்டுக்களை இலகுவான முறையில் உலரவிட்டுப் பயனடையும் நோக்குடன் சூரிய ஒளியில் பனாட்டு உலர்த்தும் நவீன பொறியை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை பனை அபிவிருத்திச் சபையின் கீழ் இயங்கும் கைதடியிலுள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்தில் இடம்பெற்றது.




இலங்கையிலேயே முதன் முறையாக யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ள இந்த நவீன பொறி தொடர்பாக பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் முகாமையாளர் ஸ்ரீவிஜேந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,

பனாட்டு பாரம்பரிய உற்பத்தி முறையில் தரமான உற்பத்திகளைப் பெறுவது கடினமாகவிருந்தது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் இந்தப் பொறி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனத்தின் சிரேஷ்ட ஆராய்ச்சி நிபுணர் திருமதி. மாலினி குமாரி ரணதுங்கவினால் குறித்த பொறி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறைந்த காலப் பகுதியில் தரமான, ஏற்றுமதிக்கு உகந்த பனாட்டுகளை இதன் மூலம்உற்பத்தி செய்ய முடியும்.

பனம் பழங்களிலிருந்து பனாட்டுக்களை உற்பத்தி செய்கின்ற பிரதேசங்களில் இந்த இயந்திரத்தை அறிமுகம் செய்வதன் மூலம் பனாட்டு உற்பத்தியை மேலும் அதிகரிக்க முடியும் என நம்புகின்றோம் என தெரிவித்தார். (இ-9)



யாழ்.மாவட்ட சாரண சங்கத்தின் கலைக்கூறு I அண்மையில் யாழ். கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் நடைபெற்றது. கலைக்கூறு I இல் பங்குபற்றிய சாரண ஆசிரியர்களும் வளவாளர்களையும் படத்தில் காணலாம்.



யாழ். மாவட்ட தேசோதய சபையினரும் யாழ்.மாவட்ட பிரஜைகள் குழுவினரும் இணைந்து வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை அவரது அலுவலகத்தில் அண்மையில் சந்தித்த போது...

# சட்டம், ஒழுங்கு அமைச்சை கைப்பற்ற ஜனாதிபதி முயற்சி



சட்டம், ஒழுங்கு அமைச்சை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளதாக அரசாங்கத்தின் உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்தவும், ஜனாதிபதிக்கும் இராணுவத்தினர் உட்பட முப்படையினருக்கும் இடையில் மோதல்களை ஏற்படுத்த சட்டம், ஒழுங்கு அமைச்சின் ஊடாக சதித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக உளவுத்துறை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அறிவித்துள்ளதை அடுத்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முப்படையினருக்கான வீட்டுத்திட்டமொன்றை அறிமுகப்படுத்தி வைக்கும் நிகழ்வொன்றில் கலந்துகொண்ட ஜனாதிபதி, குற்றப்புலனாய்வு பிரிவு, பொலிஸ் நிதி மோசடி விசாரணைப்பிரிவு மற்றும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு ஆகியவற்றை சாடியதுடன், கோத்தபாய ராஜபக்ஷ உட்பட முன்னாள் படைத்தளபதிகள் மீதான விசாரணைகளையும் பகிரங்கமாக கண்டித்தமைக்கும் இதுவே பிரதான காரணம் என்றும் அரச தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர முக்கிய பங்காற்றிய முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முன்னாள் இராணுவத் தளபதிகள், கடற்படைத் தளபதிகள் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி ஆகியோரை எப்.சீ.ஐ.டி என்ற பொலிஸ் நிதி மோசடிப் பிரிவினரும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரும் விசாரணைக்கு உட்படுத்திய விடங்கள் தொடர்பில் கடும் விசனமடைந்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நேற்று முன்தினம் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட நிலையில் கடும் எதிர்ப்பை பதிவு செய்திருந்தார்.

எப்.சீ.ஐ.டி சீ.ஐ.டி மற்றும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு ஆகியன அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு அமைய செயற்பட்டால் அவை தொடர்பில் கடும் தீர்மானங்களை எடுக்க நேரிடும் என்றும் ஜனாதிபதி எச்சரித்திருந்தார்.

அதேவேளை இந்த விடயங்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சரவைக்கும் தெளிவாக தான் குறிப்பிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடும் தொனியில் தெரிவித்திருந்தார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதிகள் மூவரை நீதிமன்றத்திற்கு இழுத்துச் சென்றதை தான் மிகவும் அருவருப்புடனும், மோசமாகவும் கண்டிப்பதாகவும் மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

கோத்தபாய ராஜபக்ஷ தொடர்பிலோ அல்லது அவன்கார்ட் பாதுகாப்பு நிறுவனம் தொடர்பிலோ சிக்கல்கள் இருப்பின் அவை தொடர்பில் விசாரணை செய்வதற்கு ஒரு வரைமுறை இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

முன்னாள் கடற்படைத் தளபதிகள் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரை நீதிமன்றத்திற்கு இழுத்துச் சென்றது தனது தேவைக்காகவும், தனது உத்தரவிற்கு அமையவும் என சிலர் கருதினாலும், தனக்கு தெரியாமலேயே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்ததுடன், நீதிமன்றத்திற்கு இழுத்துச் சென்ற பின்னரே தனக்கு தெரியவந்ததாகவும் தெரிவித்தார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதிகள் உட்பட படைத் தளபதிகளை நீதிமன்றில் நிறுத்துவது என்றால் பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியிலும், நாட்டின் ஜனாதிபதி என்ற வகையிலும் தனக்கு அறிவித்திருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி எனினும் தனக்கு எந்தவித அறிவித்தலும் வழங்காது நடந்து கொண்டுள்ளதாகவும் விசனம் வெளியிட்டார்.

எவ்வாறாயினும் இலங்கை ஜனாதிபதியின் கடும் கண்டனத்திற்கும் ஆத்திரத்திற்கும் உட்பட்டுள்ள எப்.சீ.ஐ.டி சீ.ஐ.டி மற்றும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு ஆகியன பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மிகவும் விசுவாசமான அமைச்சராக கருதப்படும் சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய மற்றும் முன்னாள் படைத் தளபதிகளுக்கு எதிரான விசாரணைகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து உருவாக்கியுள்ள தற்போதைய தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டதுடன் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த விசாரணைகளுக்கு எதிராக ஜனாதிபதி திடீரென தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளமை, கூட்டணி அரசாங்கத்தின் பிரதான கட்சிகளுக்குள் பிளவுகள் ஏற்பட்டுள்ளதையே உணர்த்துவதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அது மாத்திரமன்றி எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மகிந்த அணி தனித்துப் போட்டியிட்டால் தனது தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பெரும் பின்னடைவை சந்திக்க நேரிடும் என்ற யதார்த்தத்தை உணர்ந்துள்ளதாலேயே மகிந்தவின் சகோதரரான கோத்தபாய ராஜபக்ஷ தொடர்பில் கரிசனையையும் மைத்திரி வெளியிட்டிருப்பதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அத்துடன் இதன் உச்சகட்டமாகவே சட்டம், ஒழுங்கு அமைச்சின் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தி அதனை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்து காய்களை நகர்த்த ஆரம்பித்துள்ளதாகவும் அரசியல் ஆய்வாளர்களும், அரச தரப்பு அரசியல் முக்கியஸ்தர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.(இ-7-10)

# தமிழ் சினிமா வரலாறு

## நாடகத்தில் புரட்சி செய்த எம்.ஆர்.ராதா சினிமா உலகையும் கலக்கினார்

275

**ஏ.பி.நாகராஜன்**

மூன்று ஆண்டுகளுக்குப் பின் ஏ.பி.நாகராஜன், வி.கே. ராமசாமி ஆகியோரை பங்குதாரர்களாகக் கொண்ட லட்சுமி பிக்சர்ஸ், எம்.ஆர்.ராதாவை கதாநாயகனாக நடிக்க வைத்து நல்ல இடத்து சம்பந்தம் என்ற படத்தை தயாரித்தது. இதில் ராதாவுக்கு ஜோடியாக சவுக்கார் ஜானகி நடித்தார். படத்தை கே.சோமு டைரக்ட் செய்தார்.

படம் மூன்றே வாரங்களில் தயாராகி 16.02.1958இல் ரிலீஸ் ஆகியது. குறுகிய காலத்தில் தயாரிக்கப்பட்ட இப்படம் வெற்றிகரமாக ஓடியது.

மாறுபட்ட வேடங்களில் ராதா சிறப்பாக நடிப்பார். குறுகிய காலத்தில் படத்தைத் தயாரிக்க ஒத்துழைப்பு தருவார் என்ற நம்பிக்கை பட அதிபர்களிடையே ஏற்பட்டது. போட்டி போட்டுக் கொண்டு அவரை ஒப்பந்தம் செய்தனர்.

**பாகப்பிரிவினை**

1959இல் சிவாஜிகணேசனுடன் எம்.ஆர்.ராதா இணைந்து நடித்த பாகப்பிரிவினை வெளிவந்தது. படம் மகத்தான வெற்றி பெற்றதுடன் எம்.ஆர்.ராதாவின் வாழ்க்கையில் பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தியது.

சிவாஜியுடனும் எம்.ஜி.ஆருடனும் இணைந்து ஏராளமான படங்களில் ராதா நடித்தார். குறுகிய காலத்தில் 150 படங்களில் நடித்து முடித்தார்.

**7 ஆண்டு ஜெயில்**

1967 தேர்தலுக்கு முன் எம்.ஜி.ஆரை துப்பாக்கியால் சுட்டு விட்டு தன்னைத் தானே சுட்டுக்கொண்டார். இந்தச் சம்பவம் தமிழ்நாட்டையே குலுக்கியது.

சிகிச்சைக்குப் பின் இருவரும் குணம் அடைந்தனர்.

எம்.ஆர்.ராதா மீது தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு 7 ஆண்டு ஜெயில் தண்டனை விதிக்கப்பட்டது. பிறகு 5 ஆண்டாக குறைக்கப்பட்டது. 1974இல் விடுதலையானார்.

**மீண்டும் சினிமா**

விடுதலையாகி வெளிவந்ததும் மு.க.முத்துவுடன் சமையல்காரன் படத்தில் நடித்தார்.

தொடர்ந்து ரைக்சி டிரைவர், பஞ்சாமிர்தம், வண்டிக்காரன் மகன், ஆடுபாம்பே, ஆகிய படங்களில் நடித்தார்.

மேலும் சில படங்களில் நடித்துக்கொண்டிருந்தார்.



எம்.ஜி.ஆரும், எம்.ஆர்.ராதாவும் நட்புறவுடன் பழகிய காலத்தில் எடுத்த படம். நடுவில் இருப்பவர் இசை அமைப்பாளர் கே.வி.மகாதேவன்.

அந்த சமயத்தில் அவர் மஞ்சட்காமாலை நோயால் பாதிக்கப்பட்டு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சிகிச்சை பலனின்றி 17.09.1979 காலை 71 ஆவது வயதில் ராதா காலமானார்.

எம்.ஆர்.ராதா இளமைப் பருவம் முதலே தந்தை பெரியாரின் கொள்கையில் ஆழ்ந்த பற்றும் பிடிப்பும் கொண்டவர். அதனால் என்னவோ தந்தை பெரியாரின் பிறந்த நாளான செப்டெம்பர் 17ஆம் திகதி மரணம் அடைந்தார்.

**குடும்பம்**

ராதாவின் முதல் மனைவி பெயர் சரஸ்வதி. பின்னர் அவருடைய தங்கை தனலட்சுமியை மணந்தார்.

மூத்த மகனான எம்.ஆர்.ஆர்.வாசு சில படங்களில் நடித்தார். இளம் வயதிலேயே காலமானார்.

அடுத்த மகன் ராதாரவி இப்போது திரை உலகில் சிறந்த குணச்சித்திர நடிகராக விளங்குகிறார்.

ராதாவுக்கு ரஷியா, ராணி, ரதிகலா என்ற மகள்கள் உள்ளனர்.

ராதாவின் மூன்றாவது மனைவி கீதா. இவருடைய மகள் ராதிகா. சினிமாவிலும் சின்னத்திரையிலும் சாதனைகள் புரிந்து வருகிறார்.

ராதிகாவின் தங்கை நிரோஷாவும் நடிகையாவார்.

(தொடரும்)

பலத்தினால்தான் சமாதானத்தைப் பெற இயலும். பலம் என்பது ஒற்றுமையால் கிடைக்கக் கூடியது. - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P: 021 567 1530
website : www.valampurii.lk

## புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் ஒன்றுபடும் சந்தர்ப்பம் இது

ஈழத் தமிழ் மக்களின் சமூக பொருளாதார அரசியல் தளங்களில் எங்கள் புலம்பெயர் உறவுகளின் வகிபங்கு என்பது தவிர்க்க முடியாத ஒன்று.

புலம்பெயர் தமிழர் உறவுகளின் உதவிகள் எமக்கு கிடைக்காமல் இருந்திருக்குமாயின் எங்களின் இருப்பு என்பது கடும் ஆபத்தை எதிர்நோக்கியிருந்திருக் கும்.

அதேநேரம் வன்னிப்பெரு நிலப்பரப்பில் நடந்த யுத்த கொடூரத்தை உலக அரங்கில் அம்பலப்படுத்துவதிலும் புலம்பெயர் உறவுகள் காத்திரமாக பங்காற்றின.

உலக நாடுகளில் இருக்கக்கூடிய எம் உறவுகள் ஆங்காங்கே பொது அமைப்புக்களை உருவாக்கி அதன் ஊடாக தமிழ் உறவுகளை ஒன்று திரட்டி தாம் வாழும் நாடுகளில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியும் வெளிநாட்டுத் தூதுவர்களிடம் சந்திப்பை ஏற்படுத்தியும் ஈழத்தில் மக்கள் படும் அவலத்தை இன்றுவரை எடுத்தியம்புவது என்பது சாதாரண விடயமன்று.

தவிர புலம்பெயர் உறவுகள் தங்கள் தாயகத்தின் கல்விக்காகவும் பொதுப் பணிக்காகவும் ஆற்றும் உதவிகள் அளவிடக்கரியது.

இத்தகைய நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய தலைவருமாகிய சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் லண்டனுக்கு விஜயம் செய்வது ஒரு முக்கியமான விடயமாகும்.

லண்டனில் உள்ள பொது அமைப்புக்களின் அழைப்பின் பெயரில் அங்கு விஜயம் செய்யும் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் லண்டன் விஜயமானது புலம்பெயர் உறவுகளை ஒன்றிணைக்கவும் அதனூடாக தாயகத்து அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு புலம்பெயர் தமிழ் மக்களின் கணிசமான உதவிகளைப் பெறுவதற்கும் நல்லதோர் சந்தர்ப்பமாகும்.

அண்மையில் தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நடந்த எழுக தமிழ் எழுச்சிப் பேரணி ஈழத்தமிழ் மக்களின் ஒன்றுபட்ட குரலாக ஒருமித்த கோஷமாக ஒலித்திருந்தது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை இணைத் தலைவராகக் கொண்டமைந்த தமிழ் மக்கள் பேரவை எங்ஙனம் தமிழர் தாயகத்தில் உள்ள பொது அமைப்புக்களை ஒன்றுபடுத்தி ஓர் அணியில் திரட்டியதோ அதேபோன்று வெளிநாடுகளில் உள்ள எங்கள் புலம்பெயர் அமைப்புக்களை ஒன்றுபடுத்தி ஓர் அணியில் திரட்டுவது மிகவும் அவசியமாகும்.

புலம்பெயர் தமிழ் மக்கள் சார்ந்த பல பொது அமைப்புக்கள் வெளிநாடுகளில் இயங்குகின்ற போதிலும் அவை கொள்கைகள், கோட்பாடுகள், அரசியல் சிந்தனைகள் ரீதியாக வேறுபட்டிருப்பதைக் காணமுடிகின்றது.

புலம்பெயர் அமைப்புக்கள் அனைத்தும் தமிழ் மக்களின் உரிமை, அபிவிருத்தி, அது சார்ந்த மேம்பாடுகள் என்பதை குறிக்கோளாகக் கொண்டிருந்த போதிலும் அவற்றை அடைவது தொடர்பான கருத்தியலில் சில வேறுபட்ட தன்மைகள் காணப்படுவதன் காரணமாக வெளிநாடுகளில் உள்ள அனைத்து புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும் ஒன்றுபடக்கூடிய தான சூழமைவு ஏற்படவில்லை என்றே கூறவேண்டும்.

ஒன்றுபட்ட பலம் எங்களுக்கு இல்லாமல்போவது என்பது எங்களில் இருக்கக்கூடிய பலர் தங்களின் சுயலாபம் கருதி தாம் சார்ந்த அமைப்புக்களை இலங்கை ஆட்சியாளர்களுடன் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் உரிமைக் குரலுக்கு பங்கம் விளைவித்து விடுவர்.

ஆகையால் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றுபட வேண்டும். இந்த ஒற்றுமை என்பது ஏற்படாவிடத்து அதனால் தமிழ் மக்களுக்கு ஏற்படக் கூடிய பாதகம் மிக மோசமாக இருக்கும்.

எனவேதான் தாயகத்திலும் வெளிநாடுகளிலும் உள்ள தமிழ் அமைப்புகள் அனைத்தும் ஒன்றுபட வேண்டும். இந்த ஒற்றுமைப்பாடு தாயகத்தில் தமிழ் மக்கள் பேரவை என்ற மக்கள் இயக்கத்தின் உதிப்பு ஊடாக சாத்தியமாயிற்று.

இதுபோல வெளிநாடுகளில் உள்ள தமிழ் அமைப்புக்களும் ஒன்றுபட்டு தமிழர் தாயகத்தின் அபிவிருத்திப் பணி மற்றும் சமூக நலப் பணிகளை முன்னெடுக்கும் போது அதனால் எங்கள் மண்ணும் எங்கள் மக்களும் விரைவான அபிவிருத்தியை நோக்கிப் பயணிப்பர். இப் பெரும் பணி சாத்தியப்படுமாக இருந்தால் நாங்கள் எங்களில் தங்கியிருத்தல் என்ற உன்னதத்தை அடைய முடியும்.

ஆகவேதான் வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் லண்டன் விஜயம் எங்கள் புலம்பெயர் தமிழ்அமைப்புகளை ஓரணியில் ஒன்றுபட வைப்பதாக அமையட்டும். அதற்கான ஒரு நல்ல சந்தர்ப்பம் இது என்பது நம் தாழ்மையான கருத்து.

# அ'புரம் அம்மன் ஆலயம் பாதுகாக்கப்பட வேண்டும்

## மாவை. எம்.பி.வலியுறுத்து

(கொழும்பு)

அநுராதபுரத்தில் வாழ்கின்ற இந்து மக்கள் தங்களின் வழிபாட்டிற்காக ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலைத் தங்கள் புனிதத் தலமாக எண்ணி வழிபட்டு வந்துள்ளனர்.

நவராத்திரி விழாவில் பெருந்திரளமான மக்கள் பரவசமாகக் கொண்டாடி தீ மிதிப்பு முதலான அர்ப்பணிப்புடன் தங்கள் நம்பிக்கைகளை நிறைவேற்றுகின்ற காலத்தில் காடைத்தனமான ஒரு கூட்டத்தினர் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலுக்குள் புகுந்து சிலைகளை உடைத்தும் பக்தர்கள் மீது வன்முறைகளை ஏவியும் மக்களிடத்தில் பெரும் அச்சத்தையும் கலவரத்தையும் உண்டு பண்ணியுள்ளமை பெரும் அதிர்ச்சியையும் மத மோதலையும் ஏற்படுத்தியிருக்கிறது. இது ஒரு திட்டமிட்ட நடவடிக்கையாகும்.

சென்ற ஆட்சிக்காலத்திலும் முஸ்லிம் மக்களின் கோவில்கள் இவ்வாறு தாக்கப்பட்டு இந்த ஆட்சியிலும் இந்து மக்களை அச்சுறுத்தும் வகையிலும் நடவடிக்கைகள் தொடர்வதை வன்மையாக கண்டிக்கிறோம்.

இத்தகைய மத வன் செயல்கள் ஏற்படாதவாறு ஜனாதிபதியும் பிரதமரும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இத்தகைய கொடிய வன்முறையாளர்களைக் கைது செய்து சிறையிலடைக்க வேண்டும். அதற்கான சட்ட நடவடிக்கைகளுக்கு அரசு உத்தரவிட வேண்டும்.

அநுராதபுரம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை ஈடு செய்து கோவில் சிலைகள் மீண்டும் நிறுவப்பட்டு புனரமைக்க இந்து சமய அமைச்சு ஏற்ற நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

பொலிஸார் தக்க பாதுகாப்பை வழங்க வேண்டுமென வற்புறுத்துகின்றோம்.

ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் முறையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வற்புறுத்தியுள்ளோம் என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ)

# காரைநகரில் சிறுவர் தினம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேச செயலக சிறுவர் தின விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன், சிறப்பு விருந்தினராக காரைநகர் பிரதேச சபைச் செயலாளர் திருமதி சாரதா உருத்திர சாம்பசிவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வின்போது மாணவர்களின் விழிப்புணர்வு ஊர்வலம், மாணவர்களுக்கான கற்றல் உபகர ணங்கள் வழங்கல், பரிசில் வழங்கல், கலை நிகழ்வுகள் போன்றன இடம்பெறவுள்ளன. (இ-9)

# 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு யாழ். நகரில் சிகரெட் விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் பகுதியில் பிரபல தனியார் கல்வி நிறுவனத்துக்கு அண்மையில் உள்ள கடை ஒன்றில் 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த கடை உரிமையாளருக்கு எதிராக யாழ்ப்பாண மதுவரி திணைக்களத்தினர் நேற்றையதினம் நீதிமன்றில் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

யாழ்.நாவலர் வீதியில் அமைந்துள்ள தனியார் கல்வி நிலையத்துக்கு அண்மையில் உள்ள கடை ஒன்றில் 21 வயதுக்குட்பட்டோருக்கு புகைப்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுவருவதாக மதுவரி திணைக்களத்தினருக்கு அப்பகுதி மக்களால் முறைப்பாடு கிடைக்கப் பெற்றிருந்தது.

இந்த நிலையில் நேற்றைய தினம் குறித்த பகுதிக்கு திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட மதுவரி திணைக்களத்தினர் குறித்த கடையில் சந்தேகத்துக்கிடமான முறையில் புகைத்துக் கொண்டிருந்ததனை அவதானித்ததுடன் 21 வயதுக்கு குறைந்த மாணவருக்கும் சிகரெட் விற்பனை செய்யப்படுவதை அவதானித்துள்ளனர்

உடனடியாக மதுவரி திணைக்களத்தினர் குறித்த கடை உரிமையாளருக்கு எதிராக வழக்கு பதிவு செய்ததுடன் இன்றைய தினம் அவரை யாழ்.நீதிமன்றில் ஆஜராகுமாறு அறிவித்துள்ளனர். (இ-9)

# உளநல நாள் நிகழ்வு

யாழ். கல்வி வலயம் நடத்தும் உலக உளநல நாள் நிகழ்வு இன்று காலை 9.30 மணியளவில் யாழ். கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மெய்யியல், உளவியல்துறை தலைவர் கலாநிதி க.கஜவிந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-7)

## வண்ணத் தேரேறி வருகிறான் மாயவன்



வல்லிபுரம் பதியுறையும் மாயவனே!
வேண்டுவோர்க்கு அருள்புரியும் வல்லிபுர நாதா!
கருடவாகனனே கார்மேக வண்ணனே!
பாற்கடலில் பள்ளி கொள்ளும் பரந்தாமா!
பக்தர்களைக் காத்திட பத்து அவதாரம் எடுத்தாய்
பாண்டவர்கள் துயர் தீர்க்க பார்த்தனாய் சென்றாய்
பண்பாட்டுடன் வாழ்ந்த எம் தமிழ் இனம்- இனி
பாரதனில் சிறப்புடன் வாழ்ந்திட
எல்லையில்லாக் கருணையோடு எம்மினத்தை- காத்தருள
வண்ணத்தேரேறி வருகிறான் மாயவன்
நயினை விசு இராசநாயகம்

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை யாழ்.பிரதேசத்தில மருதார்கேணி, முள்ளியான இராணுவ முகாம், செம்பியன்பற்று, மாமுனை வடக்கு, தெற்கு, நாகர்கோவில், குடாரப்பு, நாகர்கோவில் வடக்கு, வத்திராயன், தொடுத்தழாய், வெற்றிலைக்கேணி, வெற்றிலைக்கேணி இராணுவ முகாம், கட்டைக்காடு, கட்டைககாடு இராணுவ முகாம், கேவில், தெல்லிப்பழை, மாதகல் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில வங்காலைப் பிரதேசம், வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### நம்பிக்கையும் மகிழ்ச்சியும்

பூர்வ புண்ணியத்தால்தான் நம்பிக்கை ஏற்படுகிறது. நம்பிக்கை இல்லாத போது உள்ளுள்ளும் புற உலகத்திலும் மகிழ்ச்சி கிடைக்காது.

மகிழ்ச்சியென்பது நம்பிக்கையிலிருந்து தோன்றுகின்றது என்பது உடல் உணர்வுடன் பிணைக்கிறது. நீ மகிழ்ச்சியாயிருக்கும் பொழுது உடலைப் பற்றி நினைப்பதில்லை. நீ துக்கப்படும்போது நீ வலிமையும் வேதனையும் உணருகிறாய்.

**கேள்வி:** அப்படியென்றால் தியானம் செய்யும்போது உடலின் ஒவ்வொரு பாகத்திற்கும் ஏன் கவனத்தைச் செலுத்துகிறோம்?

**ஸ்ரீஸ்ரீ:** வில்லிலிருந்து அம்பு முன்னே போக வேண்டுமென்றால் முதலில் நாணைப் பின்னுக்கு இழுத்து பின்னோக்கிச் செலுத்துவதைப்போல் நாம் நம் கவனத்தை உடலின் ஒவ்வொரு பாகத்தின்மேலும் செலுத்தும் போது அது நம்மை உடல் உணர்விலிருந்து விடுவிக்கிறது.




### சொர்க்கத்தில் பதவி கிடைக்க

❖ சொர்க்கமும் நரகமும் உங்கள் பெற்றோராகும். அவர்களுக்கு நல்லதைச் செய்தால் சொர்க்கத்தின் வாசலை அல்லாஹ் திறந்து விடுகிறான். நோவினைச் செய்தால் நரகம் தான் கிடைக்கும்.

❖ மனிதர்களே! நீங்கள் இறைவனிடம் சொர்க்கப்பதியை வேண்டும் போதெல்லாம் "பிர்தவ்ஸ்" என்னும் சொர்க்கத்தைக் கேளுங்கள். ஏனென்றால் சொர்க்கங்களுக்கு எல்லாம் உயர்வானது "ஜன்னத்துல் பிர்தவ்ஸ்" என்னும் சொர்க்கமாகும்.

❖ உங்கள் குழந்தைகளை அதிகமாக முத்தமிடுங்கள். ஒவ்வொரு முத்தத்திற்கும் சொர்க்கத்தில் பதவி உண்டு.

❖ எவர் நரகத்தை விட்டும் பாதுகாக்கப்பட்டு, சொர்க்கத்தில் நுழைய வேண்டும் என்று ஆசைப் படுகிறாரோ, அவர் அல்லாஹ்வைக் கொண்டும், மறுமை நாளைக் கொண்டும் விசுவாசம் கொண்ட நிலையில் மரணிக்கட்டும். தனக்கு விரும்புவதைப்போ பிறருக்கும் விரும்பட்டும்.

# உதயதாஸ் ஹெற்றிக்கோல் பலாலி விண்மீன் வெற்றி



வலிகாமம் லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான வடக்கின் வல்லரசன் தொடரின் லீக் சுற்றின் அண்மையில் நடந்த முதல் போட்டியில் பாசையூர் சென். அன்ரனிஸ் மற்றும் பலாலி விண்மீன்அணிகள் மோதின.

ஆட்டத்தின் 6,11நிமிடங்களில் நிஷாந்தன் மற்றும் 14வது நிமிடத்தில் டேமியன் ஆகியோர் கோல்களை பெற விண்மீன் அணி 3:0 என முன்னணிவகித்தது.எனினும் அன்ரனிஸ்வீரன் டனிபதிலுக்கு ஒரு கோலைபெற்றுக்கொடுத்தார்.

தொடர்ந்து தனது அதிரடியான ஆட்டம் மூலம் விண்மீன் வீரன் உதயதாஸ் 22, 37,42 ஆவது நிமிடங்களில் ஹெற்றிக்கோல்களை பதிவு செய்தார்.ஆட்டத்தின் 46வது நிமிடத்தில் அன்ரனிஸ் வீரன் கலிஸ்ரர் ஒரு கோலை பெற்றுக் கொடுத்த போதும் இறுதியில் விண்மீன் அணி 6:2 என்ற ரீதியில் வெற்றி பெற்றுக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாகஉதயதாஸ்தெரிவானார். (கு)

# வடக்கின் வல்லரசன் தொடர் இளவாலை யங்ஹென்றிஸ் வெற்றி



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான வடக்கின் வல்லரசன் தொடரின் லீக் சுற்றின் அண்மையில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் மன்னார் அந்தோனியார்புரம் சென் அன்ரனிஸ்மற்றும்இளவாலை யங்ஹென்றிஸ் அணிகள் மோதின.

ஆட்டம் தொடங்கி 2வது 3வது நிமிடங்களில் ஹென்றிஸ் வீரன் மது இரு கோல்களை போட்டு கோல் கணக்கை ஆரம்பித்தார். தொடர்ந்து 5வது நிமிடத்தில் தனேஸ் ஒரு கோலை பதிவு செய்தார்.

பதிலாக அன்ரனிஸ்வீரன் ஆமோஸ் 12வது நிமிடத்தில் ஒரு கோலை பெற்றுக்கொடுத்தார்.

தனேஸ் 13வது நிமிடத்தில் மீண்டும் ஒரு கோலை பெற்றுக்கொடுத்தார்.பதிலாக ஆமோஸ் 16 ஆவது நிமிடத்தில் மீண்டுமொரு கோலைப் பெற்றுக்கொடுக்க அதிரடியான ஆட்டம் மூலம் ஹென்றிஸ் அணிக்குதனேஸ் மீண்டும் 19,21 வது நிமிடங்களில் இரு கோல்களை பெற்றுக் கொடுக்கஇறுதியில்இளவாலை யங்ஹென்றிஸ் அணி 06 02 என்ற ரீதியில் வெற்றி பெற்றது.போட்டியின் ஆட்டநாயகனாக தனேஸ் தெரிவானார். (கு)

# வடக்கின் சுப்பர் கிங் போட்டி முடிவுகள்

யாழ்.லீக் அனுசரணையுடன்மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர் கிங் பட்டத்திற்கான உதைபந்தாட்ட போட்டியில் (10-10-2016) நடைபெற்ற போட்டியில் யங் ஹென்றிஸ் அணியை எதிர்த்து கலையொளி அணிமோதியது. இதில் 4:1 என்ற கோல் கணக்கில் யங் ஹென்றிஸ் அணி வெற்றி பெற்றது.

நடைபெற்றமற்றையபோட்டியில் சென்அன்ரனீஸ்அணியை எதிர்த்துசென்.லூட்ஸ் அணி மோதியது. இதில் 2:1 என்ற கோல்கணக்கில்சென். லூட்ஸ் அணி வெற்றி பெற்றது.(கு)

# 18 வயதுக்குட்பட்டோருக்கான மென்பந்து சுற்றுப்போட்டி

லங்காஸ்டார் வி.க நடத்தும் 18 வயதுக்குட்பட்டோருக்கான அணிக்கு 8 பேர் கொண்ட 6 ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் கழகங்கள் 15-.0.2016 இற்கு முதல் பின்வரும் தொலைபேசி இலக்கங்களை தொடர்புகொண்டு உங்கள் பதிவை மேற்கொள்ளலாம். 077 805 9251, 076 858 37 79 வெற்றி பெறும் அணிக்கு வெற்றிக்கிண்ணமும் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும். (கு)

# யாழ்.மாவட்ட பிரிவு மூன்று தொடர் சம்பியனானது ஜொனியன்ஸ் அணி



இலங்கை கிரிக்கெட் சபையின் பிரிவு 3 அணிகளுக்கிடையிலான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் தொடரில் யாழ்ப்பாண மாவட்ட அணிகளுக்கிடையிலான தொடரில் ஜொனியன்ஸ் அணி சம்பியனாகியுள்ளது.

சிங்கராஜா டக்ஸன், பத்மநாதன் லவேந்திரா ஆகியோரின் அபாரமான பந்து வீச்சாலும் அருளானந்தம் கானாமிர்தன்,மாசிலாமணி ஹரிப்பிரவீன் ஆகியோரின் சிறப்பானதுடுப்பாட்டத்தாலும்கொக்குவில்மத்தியசனசமூகநிலைய அணியை 7 விக்கெட்டுகளால் வீழ்த்திஜொனியன்ஸ்அணி சம்பியனாகியது. இதில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 19 அணிகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றிலிருந்து இறுதிப் போட்டிக்கு கொக்குவில் மத்திய சனசமூகநிலைய அணியும்ஜொனியன்ஸ் அணியும்தெரிவுசெய்யப்பட்டன. இறுதிப்போட்டி கடந்த 9 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற கொக்குவில் மத்திய சனசமூகநிலைய அணி முதலில்துடுப்பெடுத்தாடத் தீர்மானித்துக் களமிறங்கியதுஜொனியன்ஸ் அணியின்பந்துவீச்சுக்குமுகங்கொடுக்க முடியாமல் 30.5 ஓவர்களில் 136 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.துடுப்பாட்டத்தில் என்.நிசாந் 30, எஸ். சசிதரன் 21,எஸ்.கேதீஸ் 17, ஏ.ஜெயரூபன் 12 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.பந்துவீச்சில் ஜொனியன்ஸ் அணி சார்பாக சிங்கராஜா டக்ஸன் 4 விக்கெட்டுக்களையும்பத்மநாதன்லவேந்திரா 3 விக் கெட்டுக்களையும் அலி அக்பர் சஞ்சயன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

137 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத்துடுப்பெடுத்தாடியஜொனியன்ஸ் அணி 24.4 ஓவர்களில் 3விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் அருளானந்தம் கானாமிர்தன் 56 ஓட்டங்களையும் மாசிலாமணி ஹரிப்பிரவீன் ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் கொக்குவில் அணி சார்பாக சி.உத்தமன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (கு)



உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தால் முதல் முறையாக தேசிய மட்ட பூப்பந்தாட்ட போட்டிக்கு செல்லும் மயிலணி மகா வித்தியாலயத்துக்கு உடற்கல்வி பழைய மாணவனாகிய நா.விஜயகுமாரின் நிதி உதவியுடன் சீருடை வழங்கப்பட்டது. உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தலைவர் பதர்மகுமாரனினால் பாடசாலை அதிபர் திருமதி தனஞ்சயனிடம் சீருடை கையளிப்பதனை படத்தில் காணலாம்.

# இளம் பறவைகள் வி.கழக உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

சிலாவத்தை, இளம் பறவைகள் வி.க நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் அண்மையில் நடைபெற்ற போட்டி முடிவுகள்.

நடைபெற்ற முதல் போட்டியில் வித்தியா வி.கழகத்தை எதிர்த்து அலை ஓசை வி.கழகம் மோதியது.இதில் அலை ஓசை வி.க 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றியை பதிவு செய்தது.

நடைபெற்ற 2ஆவது போட்டியில் உதயம் வி.கழகத்தை எதிர்த்து அண்ணா வி.கழகம் மோதியது.இதில் உதயம் வி.க 2-1 என்ற கோல்கணக்கில் வெற்றியை பதிவு செய்தது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாவது போட்டியில் முள்ளியவளை வளர்மதி வி.க எதிர்த்து இரணைப்பாலை சென் அன்ரனீஸ் வி.கழகம் மோதியது.இதில் வளர்மதி வி.க 2-1 என்ற கோல்கணக்கில் வெற்றியை பதிவு செய்தது.

நடைபெற்ற 4வது போட்டியில் சென் யூட் வி.கழகத்தை எதிர்த்து சென் சேவியர் வி.கழகம் மோதியது.இதில் தண்ட உதை மூலம் சென். யூட் வி.க வெற்றியைப் பெற்றது. (கு)

விளையாட்டுச் செய்திகள்

## வடமராட்சி...

டவுடன் படகு தப்பிச்சென்றதாக தெரிய வருகின்றது. அதனைப் பொலிஸார் சோதனையிட்டபோது அது பதினாறு கிலோகிராம் கேரள கஞ்சா எனவும் அதன் பெறுமதி 32 இலட்சம் எனவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பருத்தித்துறை முனைப் பகுதியில் கஞ்சா இருப்பதாக கடற்படையினரிடமிருந்து கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முற்பகல் முனைப் பகுதியில் சோதனையிட்ட பருத்தித்துறைப் பொலிஸார் 14 கிலோ பத்து கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சா பொதிகளை படகு ஒன்றில் இருந்து கைப்பற்றினர். இதன்பெறுமதி 28 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

முழுவதுமாக அறுபது இலட்சம் ரூபாய் பெறுமதியான முப்பது கிலோக்கிராம் கேரளக் கஞ்சா இரு வேறு இடங்களில் கைப்பற்றப்பட்ட நிலையிலும் சந்தேக நபர்கள் எவரையும் பொலிஸார் கைது செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-60)

## உலகின்...

உலகிலுள்ள மிகப் பழமையானதும் பிரபல்யமானதுமான கார்களில் ஒன்று தற்போது யாழ்.கல்வியங்காட்டுப் பகுதியில் கார் விற்பனை கொள்வனவாளரான குமாரசாமி ரவிச்செல்வன் என்பவரிடமுள்ளது. இந்தக் கார் 1929ஆம் ஆண்டு இத்தாலியில் தயாரிக்கப்பட்டுள்ளது. அக்காலப்பகுதியில் இலங்கையை ஆங்கிலேயர் ஆட்சி செய்து வந்திருந்த நிலையில் இங்கே பல பண்ணையர்களும் இருந்திருந்தனர்.

அவ்வாறு ஓர் பண்ணையாளரான பொன்னையா இராஜேந்திரன் தனது பண்ணைகளை சுற்றிப்பார்க்கவும் வேட்டைக்கு செல்லவும் இக் காரையே பயன்படுத்தியிருக்கிறார். குறித்த நபர் இத்தாலியில் இருந்து காரை இறக்குமதி செய்து இலங்கையில் விற்பனை செய்துவரும் கார் விற்பனை நிறுவனமொன்றின் ஊடாக இலங்கைப் பெறுமதி 3300 ரூபாயிற்கு 1931ஆம் ஆண்டு கொள்வனவு செய்துள்ளார்.

இதன் விலையை ஞாபகப்படுத்தும் வகையிலேயே இக் காரிற்கு இவர் 3300 என்ற இலக்கத் தகட்டையும் வைத்துள்ளார். இதன்பின்னர் அவர் இறந்துபோகவே யாழ்.சுடாநாட்டிலுள்ள கார் விற்பனை கொள்வனவாளரான குமாரசாமி ரவிச்செல்வன் (கப்பிறெக்ஸ் ரவி) என்பவருக்கு 1994ஆம் ஆண்டு ஐம்பதாயிரம் ரூபாயிற்கு அக் கார் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இதன்பின்னர் இக் காரை இன்று வரை அவரே வைத்துள்ளார். தற்போது இக்காரை வைத்துள்ள குமாரசாமி ரவிச்செல்வன் கருத்து தெரிவிக்கும் போது, இது நீண்ட பராம்பரியம் மிக்க கார். இதனை பண்ணையர் வைத்திருக்கும் போது எங்களுக்கு பத்து வயதிருக்கும். முன்னர் யாழ்ப்பாணத்தில் தினகரன் விழா நடக்கும் போது அங்கு இடம்பெறும் கார் போட்டியில் இக் காரே முதலிடம் பெறும். அப்போதிருந்தே எனக்கு இந்த காரில் பிரியம் ஏற்பட்டது என்றார். (செ-4)

## தேநீர் பாத்திரத்தினுள்...

தியசாலையில் உயிரிழந்துள்ளது.

குருநகர் தண்ணீர்தாங்கி வீதியைச் சேர்ந்த ஒன்றரை வயதுடைய சுரேந்திரன் அஸ்மிலி என்ற பெண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 5ஆம் திகதி கடற்றொழிலை மேற்கொள்பவர்களுக்கு தேநீர் ஊற்றிய குழந்தையின் தாயார் தேநீருடன் பாத்திரத்தை நிலத்தில் வைத்து விட்டு வேறொரு பாத்திரத்தை கழுவுவதற்கு சென்றுள்ளார்.

இதன்போது அப்பகுதிக்கு வந்த குழந்தை தேநீர் பாத்திரத்தினுள் தவறுதலாக விழுந்து படுகாயமடைந்துள்ளது. குழந்தையை உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு தொடர்ச்சியாக சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

கடந்த 8 நாட்கள் சிகிச்சை பெற்று வந்த குழந்தை நேற்றையதினம் அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது. பிரேத பரிசோதனையை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-7,9,30)

## ஊழல் மோசடி...

கடந்த 12ஆம் திகதி இலங்கை மன்றக் கல்லூரியில் உரையாற்றிய ஜனாதிபதி தனது உரை மூலமாக சவால விடுத்துள்ளார்.

கடந்த காலத்தில் நடந்த ஊழல், மோசடிகள் மற்றும் குற்றச் செயல்கள் குறித்து விசாரணை நடத்தும் நிறுவனங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை தவறாக அர்த்தப்படுத்தி, அரசாங்கத்திற்கு எதிராக தோல்வியடைந்த ராஜபக்ஷ அணி, படையினருக்கு மத்தியில் சில நிலைப்பாடுகளை ஏற்படுத்த முயற்சிக்குமாக இருந்தால், அந்த முயற்சியை தோற்கடிக்க வேண்டுமே அன்றி விசாரணைகளை நடத்தி வரும் நிறுவனங்கள் தளர்ந்து போகவும் தைரியமற்று போகும் வகையிலும் செயற்படக் கூடாது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம், பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு மற்றும் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு என்பன அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய செயற்படுகிறனவா என கேள்வி எழுப்பும் ஜனாதிபதியின் கருத்து இலகுவான ஒன்றல்ல.

ஜனாதிபதி தற்போதைய அரசாங்கத்தின் தலைவர், நாட்டின் தலைவர் என்பதே இதற்கு காரணம்.

இந்த நிறுவனங்கள் எவருடைய அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய இயக்கப்படுமாயின் அது யார் என்பதை ஜனாதிபதி நாட்டுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில அமைச்சர்களுக்கு எதிராக பாரதூரமான மோசடி குற்றச்சாட்டுக்கள் இருந்தும் அவை பற்றி விசாரணை நடத்தப்படுவதில்லை என்பது முழு நாட்டுக்கும் தெரியும்.

அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய இது நடக்கின்றதா என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

சுயாதீன ஆணைக்குழு தொடர்பாகவும் ஜனாதிபதி கருத்து வெளியிட்டுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் தலையீட்டுடன் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலமே சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன.

பொதுமக்கள் மற்றும் சிவில் அமைப்புகள் விடுத்த கோரிக்கைக்கு அமைய இது அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய பிரதான வாக்குறுதியாகும்.

தனியொரு நபர் இந்த நிறுவனங்களை இயக்குவதை விட சில குறைகளுடன் ஆணைக்குழு அந்த நிறுவனங்களை வழிநடத்தினால், ஜனநாயக ரீதியில் அது சிறந்த விடயமாகும்.

இதனால், சுயாதீன ஆணைக்குழுக்களில் இருப்பவர்கள் அரசியல் நிர்வாகம் அறியாதவர்கள் எனக் கூறி, அந்த ஆணைங்களை ஏளனம் செய்வதை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது.

ஊழல்,மோசடிகள், குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணைகளையும் நிறுவனங்களையும் வலுக்குன்ற செய்ய காரணமாக அமையும் கருத்துக்களை வெளியிடுவது மக்களின் ஆணையை புறந்தள்ளுவதாகும்.

மேலும் இவ்வாறான கருத்துக்கள் கடந்த காலத்தில் பாரிய ஊழல், மோசடிகளிலும் குற்றச் செயல்களிலும் ஈடுபட்டவர்களை மகிழ்விக்கும் என்பதுடன் அவர்கள் இந்த நிறுவனங்களுக்கு எதிராக சுமத்தும் பொய் குற்றச்சாட்டுக்களை ஊக்குவிப்பதாக அமையும்.

அத்துடன் விசாரணை நடத்தும் நிறுவனங்களை அது ஸ்தம்பிக்க செய்யும்.

ஊழல், மோசடிகள், அதிகாரத்தை தவறாக பயன்படுத்துவது தொடர்பாக தற்போதைய அரசாங்கத்தில் உள்ளவர்களுக்கு எதிராகவும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன.

நிறுவனங்களை அச்சுறுத்தி அவற்றை வலுக்குன்ற செய்வது, ஊழல், மோசடிகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் எதிர்காலத்தில் ஈடுபடுவர்களை ஊக்கப்படுத்துவதாக அமையும் என்பதுடன் அவற்றுக்கு இடமளிப்பதாக அமையும்.

இதனால், கடந்த காலத்தில் மக்களின் பணத்தை மோசடி செய்த நிதி மோசடிகள் மற்றும் ஏனைய குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பாக நடத்தப்படும் விசாரணைகள் மற்றும் நாளாந்த செயற்பாடுகளை வலுவற்றதாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம்.

நிதி மோசடிகள் மற்றும் ஏனைய குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடத்தப்படும விசாரணைகளை துரிதப்படுத்துமாறும் மக்களின் ஆணையை மதிக்குமாறும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாக மக்கள் விடுதலை முன்னணி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (செ-11)

## கைதான ஜேர்மன்...

அண்மையில் யாழ்.சுன்னாகம் மருதனார் மடம் பிரதேசத்தில் வைத்து பொலிஸார் கைது செய்ததாக பயங்கரவாத தடுப்பு பிரிவினர் நீதிமன்றத்திற்கு அறிவித்தனர்.

விசாரணைகளின் போது சந்தேக நபரிடம் இருந்து விடுதலை புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் உருவப்படம் அடங்கிய 34 சுவரொட்டிகள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டதாக தெரிவித்த பயங்கரவாத தடுப்பு பிரிவினர் சந்தேக நபரை நாடு கடத்தும் படி உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தனர்.

அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட நீதிபதி சந்தேக நபரை உடனடியாக நாடு கடத்துமாறு குடிவரவு திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். (செ-11)

## "வழமைபோல்...

இதன்படி குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் நிதிமோசடி விசாரணைப் பிரிவுகளின் பொறுப்பதிகாரிகள் மற்றும் துறைக்கு பொறுப்பான அமைச்சர் சாகல ரத்நாயக்க ஆகியோருடன் நடைபெற்ற சந்திப்பில்,

நீங்கள் இதுவரை முன்னெடுத்து வந்த விசாரணைகள், பரிசோதனைகளை அதே விதத்தில் முன்னெடுத்துச் செல்லுங்கள் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

இதனிடையே ஜனாதிபதி நேற்றுமுன்தினம் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்து காரணமாக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் பதவியில் இருந்து விலக போவதாக தில்ருக்ஷி விக்கிரமசிங்க, பிரதமருக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி நேற்று முன்தினம் வெளியிட்ட கருத்தை அடிப்படையாக கொண்டு மகிந்த ராஜபக்ஷ ஆதரவு கூட்டு எதிர்க்கட்சியும் அதற்கு ஆதரவான இணையத்தளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள், ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தி அரசாங்கத்தை ஸ்திரமற்ற நிலைக்கு கொண்டு வரும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (செ-11)

## பூஜித இன்று...

இன்று காலை எட்டுமணியளவில் யாழ். கோட்டைக்கு அருகாமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தின் நூற்றி ஐம்பதாவது ஆண்டு நிறைவு இந்த வருடம் என்பதனால் வழமையாக கொழும்பில் நடைபெறும் இந்த நிகழ்வுகள் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது. இதன் போது முதலில் வடக்கு மாகாண பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையை விருந்தினர்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

இதன் பின்னர் ஏனைய நிகழ்வுகள் ஆரம்பமாகவுள் ளன. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோர் விருந்தினர்களாக அழைக்கப்பட்டுள்ளனர். எனினும் வடக்கு மாகாண முதலமைச்சர் இலண்டன் பயணமாகியுள்ளதால் அவருக்கு பதிலாக அமைச்சர்கள் கலந்து கொள்வார்கள் என்ற எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் இந்த நிகழ்விற்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். காலை எட்டு மணியளவில் ஆரம்பமாகும் நிகழ்வுகள் பிற்பகல் ஆறு மணியளவு வரையில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர். (செ-4)

## அரசியல், இராணுவ...

அவன்காட் பாதுகாப்பு நிறுவனத்தால் அரசாங்கத்திற்கு ஏற்படுத்தப்பட்ட நட்டம், அங்கு இடம் பெற்றுள்ள மோசடிகள் தொடர்பிலான விசாரணைகளுக்காகவே முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதிகள் மூவரும், நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டிருந்ததாக ஊழல் மோசடிகளுக்கு எதிரான முன்னணியின் ஆலோசகர் ரஜித் கீர்த்தி தென்னக்கோன் ஊடகங்களிடம் நேற்றைய தினம் குறிப்பிட்டுள்ளார்.

படைத் தளபதிகள் யுத்தத்தை வெற்றி பெறுவதற்கு முக்கிய பங்காற்றினர் என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை என்று தெரிவித்துள்ள ரஜித் கீர்த்தி தென்னக்கோன், எனினும் யுத்தத்திற்குப் பின்னர் அவர்கள் வேறு பதவிகளில் இருந்துகொண்டு நாட்டின் சட்டதிட்டங்களுக்கு முரணாக செயற்பட்டிருந்தால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என்றும், அதனை எவரும் விமர்சிக்க முடியாது என் றும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய பொலிஸ் நிதி மோசடிப் பிரிவினர் தமக்குரிய சட்ட வரையறைகளுக்கு அமையவே இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக தாம் நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் ஊழல் மோச டிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டுள்ள தரப்பினர்களிடையே ஒரு தரப்பினர் மீது மாத்திரம் விசாரணைகள் இடம்பெறுவதை காணக் கிடைப்பதாகவும் கூறிய தென்னகோன், மற்றைய தரப்பினர் அரசியல் உறவுகளுக்காக விசாரணைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதா கவும் குற்றம்சாட்டி னார்.

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறிகள் கொடுக்கல் வாங்கலின் போது நிகழ்ந்த பாரிய மோசடிகள் தொடரில் இதுவரை விசாரணைகள் இடம்பெறாமை இதற்கு சிறந்த உதாரணமாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஊழல் விசாரணைக்காக இராணுவ தரப்பை அழைத்து விசாரணை செய்வது மற்றும் இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் சிலர் நீண்டகாலமாக சிறை வைக்கப்பட்டுள்ளது தொடர்பில் ஜனாதிபதி தனது அதிருப்தியை வெளியிட்டது குறித்து கருத்துத் தெரிவித்த கீர்த்தி தென்ன கோன், அவர்கள் தொடர்பான வழக்கு விசாரணைகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதாலேயே அவர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உரை தொடரபில் அன்றிரவே அவருக்கு ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு தெரிவித்த பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் கூடி ஆராய்ந்துள்ளனர்.

ஜனாதிபதியின் உரைக்கு கடும் அதிருப்தி வெளியிட்டுள்ள இவர்கள் இது தொடர்பில் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தவும் தீர்மானித்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்வாறான உரையொன்றை நிகழ்த்தியிருக்கக் கூடாது என்றும் குறிப்பிட்டுள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அவரை ஜனா திபதி பதவியில் அமர்த்துவதற்காக உழைத்தவர்களின் நோக்கத்திற்கு முற்றிலும் முரணாக அன்றைய உரை அமைந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். (செ-5)

## யாழ்.பல்கலையில்...

ர்களுடைய கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றகோரியும் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்றைய தினம் பன்னிரண்டு மணியளவில் யாழ்.பல்கலைக்கழக முன்றலில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த போராட்டத்திற்கு யாழ்.பல்கலையின அனைத்து பீடங்கள், ஊழியர் சங்கம், ஆசிரியர் சங்கம் என்பன ஆதரவு தெரிவித்துள்ளன. தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வு நிறைவேற்றப்படாமையால் பல்கலைக்கழகங்களில் மற்றும் பாடசாலைகளில் கல்வி கற்கும் அவர்களது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுவதாக இந்த போராட்டத்தின் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தங்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற ஒரு நாள் சம்பளமான 620 ரூபாய் என்பதை 1000 ரூபாய் ஆக அதிகரிக்க கோரி கடந்த 22 ஆம் திகதியில் தொழிலாளர்களினால் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட தொழிலாளர்களின் போராட்டம், தற்போது மலையகம் தழுவிய போராட்டமாக மாற்றமடைந்து தொடர்ச்சியாக கடந்த இருபத்திரண்டு நாட்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த போராட்டத்திற்கு ஆதரவாக கொழும்பில் மிகப்பெரிய போராட்டம் நடைபெற்றதோடு,

அதனை தொடர்ந்து நாட்டின் அனைத்து பாகங்களில் உள்ள மக்களும் குறித்த போராட்டங்களுக்கு ஆதரவாக போராடி வருகின்றனர். இந்நிலையில் வடக்கில் அவர்களுக்கு ஆதரவாக தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்திலும் இதுவரை மூன்று போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன. தொழிலாளர்களின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும் வரை எமது போராட்டம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கும் எனவும் போராட்ட ஏற்பாட்டாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். மேலும் மேற்படி போராட்டத்திற்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்குமாறு யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது. (செ-4,9)

## கொலை செய்த...

செய்ததாகக் குற்றம் சுமத்தி, அவருடைய மருமகனுக்கு எதிராக சட்டமா அதிபரினால் யாழ்.மேல் நீதிமன்றத்தில் கொலை வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு விசாரணைகள் முடிவடைந்ததையடுத்து, எதிரியின சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி, கருணை விண்ணப்பம் முன்வைத்தார்.

இறந்து போனவருக்கு 77 வயது. இறந்தவரும் எதிரியும் மாமி - மருமகன் முறையான உறவினர்கள் எனபவற்றைக் கவனத்திற் கொண்டு தீர்ப்பளிக்க வேண்டும் என எதிரிதரப்பு சட்டத்தரணி தனது கருணை மனுவில் கோரினார்.

இதனையடுத்து, கொல்லப்பட்டவராகிய மாமியாரைக் கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் எதிரிக்கு இருக்கவில்லை என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கோபாவேசம் காரணமாக பூவரசந்தடியினால அடித்ததால், மாமியார் இறந்து போனார் என்பது, சாட்சியங்களின் மூலம் காணக் கூடியதாக இருப்பதால், இந்த வழக்கின் குற்றச்சாட்டு, கைமோசக் கொலைக் குற்றச்சாட்டுக்கு மாற்றப்பட்டு, எதிரியை குற்றவாளி என இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது என நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

இந்த வழக்கில், இறந்தவருடைய வயது, சம்பவம் நடைபெற்ற சூழ்நிலை, கொலைக்குப பயன்படுத்தப்பட்ட தடி போன்ற அனைத்தையும் கவனத்தில் எடுத்து, எதிரிக்கு இந்த நீதிமன்றம் 7 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிககின்றது. அத்துடன் ஐயாயிரம் ரூபாய் தண்டப் பணம் செலுத்த வேண்டும்.

செலுத்தத் தவறினால் ஒரு மாதம் கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என நீதிபதி இளஞ்செழியன் தனது தீர்ப்பில தெரிவித்தார்.

இந்த வழக்கை அரச சட்டவாதி நாகரத்தினம் நிசாந்தன்சட்டமா அதிபரின பிரதிநிதியாக செயற்பட்டு வழக்கை நெறிப்படுத்தினார். (செ-4-9)


### விற்பனையாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் எமது புடைவை நிறுவனத்துக்கு புடைவை விற்பனை அனுபவம் உள்ள ஆண் / பெண் பணியாளர்கள் தேவை

தொடர்பு சென்னை பெசன் வேல்ட்
63, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
(9320)



### எடிசன் அக்கடமி

29th Anniversary Prize Day

காலம்
16.10.2016 ஞாயிறு காலை 8.15 மணி

இடம்
ராஜா கிறீம் ஹவுஸ் மண்டபம்

பிரதமவிருந்தினர்
திரு. சிவஞானம் சிறீதரன்
கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாண மாவட்டம்
(எடிசன் அக்கடமியின் பெற்றோர்)


## பாடசாலை...

இடம்பெற்றுள்ளது.

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தரத்தில் கல்வி கற்று வரும் ரவீந்திரன் டிலாயினி (வயது - 18) என்ற மாணவியே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் பாடசாலை முடிந்து வீட்டிற்கு வந்து உணவு உண்ட மாணவி பின்னா மயக்கமடைந்துள்ளார்.

உடனடியாக பிரஸ்தாப மாணவி நெடுந்தீவு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லபபட்டபோதும் அவர் மாரடைப்பால் உயிரிழந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து பிரேத பரிசோதனைக்காக மாணவியின் சடலம் யாழ்.போதனா வைததியசாலைக்கு கொண்டு எடுத்துச் செல்லப்பட்டு மரண விசாரணைகளின் பின்னர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-7-30)


### அமெரிக்க லொத்தர் விசா

2018ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

பதிவுகள் 04-10-2016 தொடக்கம் 07-11-2016 வரை 0768226230

VISA இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 50'000 பேருக்கான அதிர்ஷ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

இந்தியா,பங்களாதேஸ்,பாகிஸ்தான்,சீனா போன்ற சனத்தொகை கூடிய நாடுகள் இவ்வருடம் விண்ணப்பிக்க தகுதி இல்லாதமையால் ஆசியாவில் இலங்கையர்களுக்கான வாய்ப்புக்கள் மிகமிக அதிகம்

எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

V2 TRAVELS

#49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0768226241
A9 வீதி கிளிநொச்சி 0768226240
நெல்லியடி 0776699892
No-324 யாழ் பிரதான வீதி பருத்தித்துறை 0768226230
யாழ் வீதி, வல்வெட்டி வல்வெட்டித்துறை 0776697960



### அன்னை முத்துமாரி பஸ்சேவை Annai Muthumari

புதியபாதை: பருத்தித்துறை, நெல்லியடி, அச்சுவேலி, கோப்பாய், உரும்பிராய், மருதனார்மடம், மானிப்பாய், ஆறுகால்மடம் ஊடாக யாழ்ப்பாணம் சென்றடைந்து பின் கொழும்பு சென்றடையும்.

(ஜி-6081)

| இரவு (புறப்படும் நேரம்) | | | மாலை (புறப்படும் நேரம்) | | |
|---|---|---|---|---|---|
| பருத்தித்துறை | 7.00 | am | பருத்தித்துறை | 7.00 | pm |
| யாழ்ப்பாணம் | 8.00 | am | யாழ்ப்பாணம் | 8.00 | pm |
| வெள்ளவத்தை | 7.30 | am | வெள்ளவத்தை | 7.00 | pm |
| கொட்டாஞ்சேனை | 8.30 | am | கொட்டாஞ்சேனை | 8.00 | pm |

133, (A9) கண்டி வீதி, கச்சேரியடி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல : - 021 221 0773 / 077 544 8503

யாழ்ப்பாணம் 077 544 8503
வல்வெட்டித்துறை 077 544 7359
கொழும்பு 077 544 9251
நெல்லியடி 077 285 0285
பருத்தித்துறை : 0775552973

வீட்டில் இருந்தவாறே பயணச்சீட்டை பெற்றுக் கொள்ளலாம்.

சகல நாடுகளுக்கான விமான பயணச் சீட்டுக்களை நியாய விலையில் எமது சகல கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள், பொதிகள் துரித கதியில் அனுப்பிட இன்றே நாடுகள்.

208 A, காலிவீதி [றோயல் பேக்கரி அருகாமை], வெள்ளவத்தை.
தொ.பே.இல : - 011 236 1766 / 077 544 9251
www.annalmuthumari.com.







இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.